வீரத்தின் பரிசு

ஆசிரியர்கள் :

டி. ஏ. விஜய ராகவன், எம்.ஏ., பி.டி.

டி. கோவிந்தராஜன்

டி. வி. செல்லப்ப சாஸ்திரி அண்டு சன்ஸ்

2, பிலிப்ஸ் தெரு, சென்னை-1.

காபிரைட்]

[விலை ரூ. 1-10

முதற்பதிப்பு ஜனவரி 1967

O111;3 LS2 N67
121700

10·9 கிலோகிராம் வெள்ளைத்தாளில் அச்சிடப்பட்டது.
டபுள் கிரெளன் 1-16 அளவு

ஸ்ரீ பண்டாரி பிரஸ்,
26, பிராட்வே, சென்னை-1

முன்னுரை

சர் வால்டர் ஸ்காட் என்னும் நாவலாசிரியரை அறிஞருலகம் நன்கு அறியும். சிந்தைக்கு விருந்தளிக்கும் கருத்துச் செறிவும், படிக்க இனிக்கும் பளிங்கன்ன நடையும் கொண்ட அவரது படைப்புக்கள் மாணவர்களுக்கு ஒரு சிறந்த விருந்தாம். அவரது பல சிறந்த கதைகளில் ஒன்றின் தமிழாக்கமே இந்நூல். இது அரசியலார் அண்மையில் தொகுத்து வெளியிட்ட புதிய பாடத் திட்டத்திற் கேற்ப மூலக் கதையை முற்றிலும் பின்பற்றி இனிய எளிய நடையில் புதிய பத்தாம் வகுப்பு மாணவர்களுக்குத் துணைப்பாட நூலாகப் பயன்படும் வண்ணம் எழுதப்பட்டுள்ளது. இதனைக் கற்கும் மாணவர்கள் கடமை யுணர்ச்சியும் உண்மை வீரமும் நாட்டுப்பற்றும் உடையவராவர் என்ற உறுதிப்பாட்டுடன் இந்நூலை உவந்தளிக்கிறோம். மேலும் மாணவர்கள் உண்மைக் காதலின் இயல்பு, வஞ்சனையின் வீழ்ச்சி முதலியவற்றைச் செவ்வனே உணர்ந்து தங்கள் வாழ்க்கையை நன்முறையில் அமைப்பர் என்றும் கருதி இதனை வெளியிடுகின்றோம்.

அறிஞர் உலகம் இச்சிறு முயற்சியை உவந்து ஏற்று எங்களை மென்மேலும் இத்துறையில் ஊக்குவிக்கும் என்ற நம்பிக்கையில் இதனை வெளியிடுகிறோம்.

ஆசிரியர்கள்.

பொருளடக்கம்

எண்	தலைப்பு	பக்கம்
1.	போர்வீரனும் ஆட்சித்தலைவனும்	... 1
2.	வீரன் தியோடரின் வாழிடத்தை அடைதல்	... 8
3.	இரகசிய தேவாலயம்	 14
4.	சிங்கத்தின் உள்ளம் படைத்த ரிச்சர்டு	... 23
5.	அரேபிய மருத்துவன்	... 27
6.	அரசரும் போர்வீரனும்	... 33
7.	சதி	 42
8.	சொற்போர்	 50
9.	சிவப்புக்கல் மோதிரம்	... 56
10.	ஸ்காத்லாந்துப் போர்வீரனும் அரேபிய மருத்துவரும்	... 64
11.	தீர்ப்பு	... 69
12.	பெரெங்கேரியா அரசியார்	... 74
13.	மருத்துவரின் பரிசு	 81
14.	அரசர்களின் ஆலோசனைச் சபை	 85
15.	தாக்குதல்	 95
16.	மாறுவேடம்	... 104
17.	கண்டுபிடிப்பு	... 111
18.	குற்றச்சாட்டு	... 117
19.	எடித் சீமாட்டி	... 122
20.	ரிச்சர்டும் சலாடினும்	... 129
21.	போர்	... 132

தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
த்ராவிட உத்கல வங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உத்சல ஜலதி தரங்கா
தவசுப நாமே ஜாகே
தவசுப ஆசிஷ மாங்கே
காயே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜயஹே ஜயஹே ஜயஹே
ஜய ஜய ஜய ஜயஹே!

—இரவீந்திரநாத தாகூர்.

நாட்டு வணக்கம்

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற நீதான் மக்கள் எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செலுத்துகிறாய்.

நின் திருநாமம், பஞ்சாப்பையும், சிந்துவையும், குஜராத்தையும், மஹாராஷ்டிரத்தையும், திராவிடத்தையும், ஒரிஸாவையும், வங்காளத்தையும் உள்ளக்கிளர்ச்சி அடையச் செய்கிறது.

அது விந்திய, ஹிமாலய மலைகளில் எதிரொலிக்கிறது; யமுனை, கங்கை நதிகளின் இன்ப நாதத்தில் கலக்கிறது; இந்தியக் கடல் அலைகளால் ஜபிக்கப்படுகிறது.

அவை நின் ஆசியை வேண்டுகின்றன; நின் புகழைப் பாடுகின்றன.

இந்தியாவின் சுக துக்கங்களை நிர்ணயிக்கிற உனக்கு வெற்றி, வெற்றி, வெற்றி.

1. போர்வீரனும் ஆட்சித்தலைவனும்

கோடைகாலத்தில் ஒரு நாள் நண்பகலில் கதிரவனின் வெப்பம் கடுமையாயிருந்தது. அரேபிய பாலைவனத்திலிருந்து சாக்கடல்வரை அவ்வெப்பம் பரவிக் கொண்டிருந்தது. அக் கொடிய வெப்பத்தையும் பொருட்படுத்தாமல், ஒரு போர் வீரன், தன் குதிரையின் மீது அமர்ந்து, அப்பாலைவனத்தின் குறுக்கே சென்று கொண்டிருந்தான். அவன் உடைகள் அந்நாட்டில் பிரயாணம் செய்வதற்கு முற்றிலும் தகுதியற்றன வாக இருந்தன. அவன் முடிமுதல் அடிவரையிலும் கவசமணிந்திருந்தான். அவன் முக்கோண வடிவமுடைய ஒரு கேடயத்தையும் அணிந்திருந்தான். அக் கேடயத்தில் படுத்துறங்கும் நிலையில் ஒரு புலியின் உருவம் பொறிக்கப்பட்டிருந்தது. அவ்வுருவத்தின் அடியில் 'நான் உறங்குகிறேன்; என்னை எழுப்பாதே' என்ற வார்த்தைகள் காணப்பட்டன.

அக்கேடயத்தையுடைய போர்வீரன் மிக்க எழிலுடையவனும், இளைஞனும், மிகுந்த உடல் வன்மையுடையவனும் விளங்கினான். ஐரோப்பிய நாடுகளிலிருந்து, சாரசின்களுக்கு எதிராக நடத்தப்பட்ட புனிதப்போர்களில் பங்கு கொள்ளும் பொருட்டு அந்நாட்டிற்கு வந்திருந்த கிறுத்தவப்போர்வீரர்களில் அவனும் ஒருவனாவான். அக்கிறுத்தவ வீரர்களின் குறிக்கோள்

சாரசின்களால் கைப்பற்றப்பெற்றிருந்த எருசலேம் என்னும் நகரை அவர்களிடமிருந்து விடுவிப்பதே யாகும். அவ்வீரன் தன்தேயமாகிய ஸ்காத்லாந்தை விடுத்து வந்து இரண்டு ஆண்டுகள் முடிந்து விட்டன. அவன் தன் பொருளனைத்தையும் செலவழித்து விட்டான். அவனுடன் வந்த வீரர்களனைவரும் நோயாலோ அன்றிப் போரினாலோ கொல்லப்பட்டனர். அவர்களில் உயிரோடிருந்த ஒரே வீரனும் அப்போது நோய் வாய்ப்பட்டு, அவ்வீரனது பாசறையில் படுத்துக் கிடந்தான். அத்தகைய துன்பங்களாலும் அவ் விளைஞனாகிய வீரனைப் பாதிக்க இயலவில்லை. இடுக்கணால் இடுக்கண்படாத அவ்வீரன் தன் வலியகரங்களையும் வாளையுமே, தன் துணையாகக் கருதித் தனியாகவே தான்மேற்கொண்டிருந்த புனிதப்பணியை ஆற்றப் புறப்பட்டான்.

நண்பகல்பொழுது நெருங்கியதும் அவ்வீரன் தனக்கு முன்னே விரிந்து பரந்திருந்த அப்பாலை நிலத்தைச் சிறிது கவலையுடன் நோக்கினான். சிறிது தூரத்தில் ஈச்சமரங்கள் நெருங்கி வளர்ந் திருந்த ஒரு சோலையிருந்ததைக் கண்ட அவ் வீரனின் முகம் மகிழ்ச்சியால் மலர்ந்தது. தங்கி இளைப்பாறவும், உணவைப் பெறவும் அவ்விடம் உதவிபுரியும் என்று அவன் நினைத்தான். அவன் அவ்வாறு எண்ணிக்கொண்டே அச்சோலையை நோக்கிச் செல்லும்போது, அங்கிருந்து ஓர் அரேபியக் குதிரைவீரன் தன்னை நோக்கி மிகுந்த வேகத்துடன் வருவதைக் கண்டான். ஒரு பகைவன் அங்ஙனம் தன்னை நெருங்கி வருவதைக்

கண்டுங்கூட அவ்வீரன் சிறிதும் பதற்றமுறவில்லை. அவன் தன் வேற்படையைக் கையில் பயன் படுத்தத் தயாராகப் பிடித்துக் கொண்டு, தன் குதிரையை நிற்கச்செய்து, தன் பகைவன் தன்னை நெருங்கிவருவதை எதிர்நோக்கிக் காத்துக் கொண்டிருந்தான். ஆயின், வந்த அந்த அரேபிய அதிகாரியோ உடனே அவ்வீரனைத் தாக்கவில்லை. அவரது பகைவனது வலிமையையும், போர்செய் வதற்குத் தயாராக உள்ள நிலையையும் கண்ட அந்த அரேபிய அதிகாரி, இருமுறை அவனுக்கு மிகுந்த தூரத்தில், அவனைச் சுற்றிவந்தார். அவருடைய எண்ணம், அவ்விளைய வீரனது பாது காப்பற்ற இடத்தைக் கண்டுபிடித்து, அவனை அவ் விடத்தில் தாக்கவேண்டும் என்பதாம். ஆனால் அவ்விளைய போர்வீரனோ, ஒரே இடத்தில் நிலை யாக இருந்து, தன் முன்புறத்தைமட்டுமே அவன் பகைவன் காணுமாறு, சுற்றிக் கொண்டிருந்தான். இதைக் கண்ட அந்த அரேபிய அதிகாரி தன் பகைவனிடமிருந்து சிறிது தூரம் தள்ளிச் சென்றார். சிறிது நேரம் வாளாவிருந்து, அவர் மீண்டும் அவ்விளைய வீரனை நெருங்கி வந்தார். உடனே அவ்விளைய வீரன் தனது கனமான கதையைத் தன் பகைவன் தலையைக் குறிவைத்து வீசினான். அதனால் தாக்கப்பட்டால் அவ்வரேபிய அதிகாரி உடனே அவ்விடத்திலேயே இறந்திருப் பார். ஆனால் அவர் விரைவாகத் தன் கேடயத்தால் அக்கதை தன்னைத் தாக்காதவாறு தடுத்துக் கொண்டார். எனினும் அவ்வாறு தடுத்தபோது அவர் தன் குதிரையிலிருந்து கீழே விழுந்து

விட்டார். என்றுலும் கண் இமைக்கும் நேரத்திற்குள் அவர் தரையிலிருந்து எழுந்துத் தன் குதிரையின் மீது தாவி ஏறிக்கொண்டார்.

பின்னர் அவ்வரேபிய அதிகாரி இளைய வீரன் தன்னை மீண்டும் தாக்கமுடியாத தூரம் சென்றுத் தன் பகைவனை வில்லம்புகளால் தாக்க முயன்ருர். அவ்வாளிகள், அவ்விளைஞனது கனத்த கவசத்தை ஊடுருவ முடியாமையால், அவனுக்கு ஊறு செய்யவில்லை. என்ருலும், கடைசியாக ஏவப்பட்ட அம்பானது அவ்வீரனுக்குத் துன்பமுண்டாக்கியதுபோலத் தோன்றியது. அதன் பயனுக அவ்வீரன் அவனுடைய குதிரையினின்றும் கீழே விழுந்தான். உடனே அரேபிய அதிகாரி, தன் குதிரையினின்றும் இறங்கிக் கீழே விழுந்து கிடந்த தன் பகைவனுக்கருகில் சென்ருர். ஆனுல் அவ் விளைஞனே அவரைத் தன் பிடியில் சிக்கும்படிச் செய்து விட்டான். அவ்வீரன், பகைவன் அம்பு தன்னைக் காயப்படுத்தியது போல், கீழேவிழுந்தது ஒரு நடிப்பேயாகும். பகைவன் தன் பிடிக்குள் அகப்பட்டதும், அவ்விளைஞன் அவ்வரேபியரது வாளணிந்த இடுப்புக் கச்சையைப் பிடித்துக் கொண்டான். எனினும், மீண்டும் அச்சாரசின் தன் விரைந்து செயலாற்றும் திறமையால் தன் கச்சையை விரைந்து அவிழ்த்தெறிந்து விட்டு வேகமாக ஓடிச்சென்று, தன் குதிரைமீது ஏறிக் கொண்டார். என்ருலும் அவர் தமது வாட்படையையும், அம்புப் பெட்டியையும் அக் கச்சையை விட்டு வந்தபோது இழக்குமாறு

நேர்ந்தது. அந்நிலையில் மேலும் அவ்விளைஞனுடன் போரிட அவர் விரும்பவில்லை.

தன் பகைவன் எல்லாவிதத்திலும் தனக்கு இணையானவன் என்பதைக் கண்ட அவ்வரேபிய வீரர், அரேபிய மொழியும், பிரான்சு மொழியும் கலந்த ஒரு கலப்பு மொழியில் ' நண்பரே! தற்போது நம் நாடுகளுக்கு இடையில் அமைதி நிலவுகிறது. அங்ஙனமிருக்க நாம் ஏன் போரிட வேண்டும்?' என்ருர்.

' நீர் அமைதியுடன் இருப்பதாக வாக்களிப்பின், நானும் நட்புமுறையில் உம்முடன் நடந்து கொள்ளத் தடையொன்றுமில்லை. என்னைப் பொறுத்த வரை நாம் ஒன்ருக இருக்கும் வரை, நான் உமது நண்பனுகவே நடந்து கொள்வேன் என உறுதி கூறுகிறேன்' என்று அவ்வீரன் கூறினுன்.

அவ்வுடன்பாட்டிற்கு அந்த முகமதியரும் இணங்குவதாக அவரது புனிதத் தலைவராகிய முகமதுவின் மீது ஆணையிட்டார். பின்னர் அவ் விருவீரர்களும் அப்பாலை நிலத்திலிருந்த வைரம் போன்ற பாலைவனச்சோலையை நோக்கி மெதுவாகச் சென்றனர். அவர்கள் அவ்விடத்தில் தங்கள் குதிரைகளின் மீதிருந்த சேணங்களை அகற்றி அவற்றை அங்கிருந்த குளிர்ந்த நீரூற்றில் நீரருந்தச் செய்தனர். பின்னர் அவர்கள் தங்கள் கவசங்களைக் களைந்து விட்டு ஒவ்வொருவரும் ஒவ்வொரு மூலையில் அமர்ந்து தங்கள் உணவை அருந்தத் தொடங்கினர்.

உணவுண்ட அவர்கள் பின்னர் சிறிதுநேரம் களைப்பாறினர். அப்போதுதான் அவர்கள் ஒருவரை ஒருவர் நன்கு கவனித்துப் பார்த்தனர். ஐரோப்பியப் போர்வீரன் முன்னரே கூறப்பட்டபடி உயரமாகவும், நல்ல உடற்கட்டுடையவனுகவும் இருந்தான். அவன் கண்கள் நீல நிறத்துடனும் அழகாகவுமிருந்தன. அவன் கேசங்கள் சுருண்டிருந்தன. அரேபிய வீரரோ அதற்கு மாருக நடுத்தர உயரமுடையவராக இருந்தார். அவர் உடல் நேராக விளங்கியது. அவரது கரியதாடி நீண்டு அவரது மார்பில் புரண்டுக்கொண்டிருந்தது. அவர் மெலிந்து காணப்பட்டாலும், மிகுந்த வன்மையும் சுறுசுறுப்பும் உடையவராக யிருந்தார்.

சிறிது நேரம் அவர்களிருவரும் போர்வீரர்கள் வழக்கமாகப் பேசுவதைப் போலவே வீரத்தைக் குறித்தும், காதலைப் பற்றியும் உரையாடினர். ஒவ்வொருவரும் தன்னுட்டிலிருந்த அழகிய மாதர்களைப் பற்றிப் புகழ்ந்தனர். ஆனுல் ஐரோப்பிய வீரன் இங்கிலாந்து அரசவையிலிருந்த அழகிய பெண்கள் காதலிப்பதைவிட வழிபடுவதற்கே மிகவும் தகுதி பெற்றவரெனக் கருதும் அளவிற்கு எழிலுடையவர்கள் என்று பெருமையுடன் கூறினுன்.

சிறிது நேரம் இங்ஙனம் உரையாடிக் கொண்டே இளைப்பாறிய பின்னர், அரேபிய அதிகாரி ஐரோப்பிய வீரனைநோக்கி, ' நண்பரே ! நீர் எங்குச் செல்கிறீர் ? ' என்று வினவினுர்.

அதற்கு மறுமொழியாக அவ்வீரன் நோயுற்றிருந்த அவனது பணியாளின் நலனுக்காகப் புனித இடங்களுக்குப் பயணஞ்சென்று கொண்டிருப்பதாகக் கூறினுன்.

'இப்பாலைநிலத்தில் தனியாக நீர் எங்கே தங்கப் போகிறீர் ? அவ்வாறு தனியாக இருப்பின் கொள்ளைக்காரர்களும், திருடர்களும் உம்மைக் கொன்றுவிடலாம்' என்று அரேபியர் கூறினுர்.

' பாதுகாப்புடன் இந்நாட்டில் நடமாடுவதற்கு எகிப்திய அரசரால் வழங்கப் பெற்ற உரிமைச் சீட்டு என்னிடம் உள்ளது. இன்று இரவு புனிதரான தியோடரின் இருப்பிடத்தைத் தேடிக்கண்டு பிடித்து அவ்விடத்திலேயே தங்க விரும்புகிறேன் ' என்று ஐரோப்பிய வீரன் மறுமொழி கூறினுன்.

' நண்பரே ! எனது உதவியின்றி அதனைத் தாங்கள் தனியாகத் தேடிக் கண்டு பிடிப்பது இயலாத செயலாகும். என்னுடன் வாரும். நான் உம்மை அவருடைய இருப்பிடத்திற்கு அழைத்துச் செல்கிறேன் ' என்ருர் அரேபிய அதிகாரி.

பின்னர் இருவரும் எழுந்து தங்கள் கவசங்களை அணிந்துகொண்டனர். தங்கள் குதிரைகளையழைத்து அவற்றிற்கும் சேணங்களை அணிவித்தனர்.

2. வீரன் தியோடரின் வாழிடத்தை அடைதல்

வீரனும் முகமதிய அதிகாரியும் தங்கள் குதிரைகளின் மீது ஏறி மீண்டும் பயணஞ் செய்தனர். சிறிது நேரம்வரை அவர்கள் ஒன்றும் பேசாமல் சென்றனர். பாலைநிலத்தில் சரியான பாதையைக் கண்டுபிடிப்பதில் அவ்வதிகாரி ஈடுபட்டிருந்தார். சரியான வழியைக் கண்டு பிடித்த உடனேயே அம்முகமதிய வீரர் பேசத் தொடங்கினர்.

பேச ஆரம்பித்த உடனே அவர் வெள்ளைப் போர்வீரனை நோக்கி, 'ஐயா, நீர் உமது நாட்டில் புகழ்பெற்ற வீரராகத் தான் இருக்கவேண்டும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். உங்கள் பெயரை நான் அறிய விரும்புகிறேன். என்னுடைய அந்த ஆவலுக்காக என்னை மன்னித்து விடுங்கள்,' என்றார்.

அதைக் கேட்ட வீரன், 'புனிதச் சிலுவைப் போரில் ஈடுபட்டுள்ளவர்கள் என்னைக் கென்னத் என்றழைக்கின்றனர். என் நாட்டில் எனக்கு வேறு பெயர்கள் உண்டு. மன உறுதியுள்ள நண்பரே! நான் உம்முடைய பெயரையும், உம்முடைய கிளைப்பெயரையும் அறியலாமா?' என்று கேட்டான்.

அதைக் கேட்ட அந்த முகமதிய வீரர் தாம் மலைகளின் சிங்கமாகிய ஷுர்காப் என்றார். மேலும் அவர் குர்டிஸ்தானைச் சேர்ந்த செல்ஜுக் வகுப்பைச் சேர்ந்தவரெனவும் கூறினர். உடனே கென்னத் "உமது அரசரும் அதே வகுப்பைச் சேர்ந்தவரென்பது உண்மையன்றோ?' என்று அவ்வரேபியரை வினவினன்.

அதற்கு அவ்வரேபிய வீரர், 'சிரியா, எகிப்து மன்னராகிய அப்பேரரசருடன் ஒப்பிடும்போது நான் ஒரு மலைக்கு முன்புள்ள புழுவுக்குச் சமமானவன். எனினும் நான் அம் மன்னர் வகுப்பைப் சேர்ந்தவனே. நிற்க, நீர் ரிச்சர்டு என்னும் அரசரின் குடிமகனா? நான் அவ்வரசரின் புகழைக் குறித்து மிகுதியாகக் கேட்டுள்ளேன்' என்றார்.

அதற்குக் கென்னத் 'நான் அவருடைய குடிமகனல்லன். ஆயின் இப்புனிதச் சிலுவைப் போரில் அவரைப் பின்பற்றி வந்தவர்களில் நானும் ஒருவன். நான் அதே தீவைச் சேர்ந்தவனென்றாலும் என்னுடைய அரசர் வேறொருவர் ஆவர்' என்றான்.

அதைக் கேட்ட அவ்வீரர் வெறுப்புடன், 'என்ன! உனது தலைவர் தனது தீவின் ஒரு பகுதி வேறொரு அரசரின் ஆட்சியில் இருக்க, அதைக் கைப்பற்றாமல் அரேபியாவிலுள்ள பாறைகளையும், மணலையும் தமக்குச் சொந்தமாக்கிக் கொள்ளவா இவ்வளவு தூரம் தன் படையுடன் வந்துள்ளார்? உண்மையில் கென்னத்தே! நீயும் உன் அரசரும் இங்குப் படையெடுத்து வருமுன்னர் அப்பேரரசரின் ஆட்சிக்கு அடங்கியிருக்க வேண்டும்' என்றார்.

அதற்குக் கென்னத் கோபத்துடன், 'முடியாது. இங்கிலாந்து அரசர் இப்புனிதப் போரைத் துவக்கு முன்னர் ஸ்காத்லாந்து நாட்டின் அரசராக விரும்பி யிருப்பின் நிலையாகவே எருசலேத்தின் சுவர் களின் மீது அவர்கள் முடிகள் இருப்பதை நாங்கள் விரும்பியிருப்போம்' என்றான். இதைக் கூறிய உடனே அவன் தன் தவறுக்காக மனம் வருந் தினான். 'சிலுவை வீரனாகிய எனக்கும் இரண்டு கிறுத்தவ நாடுகளின் போருக்கும் என்ன தொடர்பு?' என்று அவன் நினைத்தான்.

அந்த வீரனின் மனத்தில், நாட்டுப் பற்றுக் கும், கடமைக்கும் இடையில், ஏற்பட்ட போராட் டத்தை அவ்வரேபியர் கவனித்துவிட்டார்.

அதற்குள் அவ்வீரர்கள் பாலைநிலத்தைக் கடந்து, செங்குத்தானதும், தாவரங்கள் அற்றது மான பாறைகளை நெருங்கிக் கொண்டிருந்தனர். அப்பாறைகளில் இருண்டதும், அச்சமூட்டுவது மான பல குகைகள் இருந்தன. அவ்விடமே சாத்தான் இயேசுபிரானைச் சோதித்த காட்டுப் பகுதி என்பதை அந்த ஐரோப்பிய வீரன் நினைவு படுத்திக் கொண்டான். அங்ஙனம் நினைவு படுத்திக் கொண்டபோது அவ்வெண்ணம் அவனுக்கு அச்சத்தை உண்டாக்கியது. ஆனால் முகமதிய வீரரின் உணர்ச்சிகள் அவர் தோழனின் உணர்ச்சிகளினின்றும் முற்றிலும் மாறுபட்டவையா யிருந்தன. அவர் பலவித காதல் பாடல்களையும், மதுவைப் பற்றிய பாடல் களையும் மகிழ்ச்சியுடன் பாடிச் சென்றார். 'இச் செயலை வெள்ளைய வீரன் மனமார வெறுத்தான்.

மேலும் அச்சமூட்டுவதும், தீய ஆவிகள் வாழ்வது மான அவ்விடத்திற்கு அவர் பாடிய பாடல்கள் தக்கன வன்று என்று அவன் கருதினான். எனினும் தன் வெறுப்பை எவ்வாறு தெரிவிப்பது என்று அவருக்குத் தெரியவில்லை. எனவே திடீரென்று அவருடன் செல்வதை நிறுத்திவிடுவதா? அன்றி அம் முகமதிய வீரரைத் தன்னுடன் போரிட அழைப்பதா? எது செய்யத் தக்கது?' என்று அவன் தனக்குள் எண்ணமிடலானான்.

இங்ஙனம் அவ்வீரன் நினைத்துக்கொண்டிருந்த போது எதிர்பாராத நிகழ்ச்சி ஒன்று ஏற்பட்டது. அங்கிருந்த பாறைகளில் ஒன்றிலிருந்து ஆட்டுத் தோலாலான உடையை யணிந்த ஓர் உயரமான உருவம் அவ்வீரர்கள் சென்று கொண்டிருந்த பாதையில் பாய்ந்தது. பின்னர் அவ்வுருவம் அம்முகமதியரின் கையிலிருந்த கடிவாளத்துடன் இணைக்கப்பட்டிருந்த தோல்பட்டையை அவரிட மிருந்து பறித்துக்கொண்டு வன்மையுடன் அதனை இழுத்தது. இதனால் அச்சமுற்ற அவனது குதிரை சுழன்று தன்மீதிருந்த அம்முகமதிய வீரரைக் கீழே தள்ளிவிட்டது. உடனே அப்புதியவன், எழுந்திருக்க முடியாமல் தவித்துக்கொண்டிருந்த அந்த முகமதிய வீரர்மீது பாய்ந்தான்.

அப்போது அந்த முகமதிய வீரர் பாதி கோபத்துடனும், பாதி சிரிப்புடனும் 'அறிவிலியே! நீ மிக்க உரிமை எடுத்துக் கொள்கிறாய். என்னிட மிருந்து அகன்றுவிடு. இல்லையேல் எனது உடை வாளைப் பயன்படுத்த நேரிடும்' என்றார்.

அதைக் கேட்ட உடனே அப்புதியவன் அம் முகமதிய வீரரின் உடைவாளைப் பறித்துக் கொண்டு அச்சமூட்டும் வகையில் அதனைத் தன் தலைக்கு மேற்புறத்தில் சுழற்றத் தொடங்கினான். இந்நிலையில் அவ்வரேபிய வீரர் தன் நண்பனைத் துணைக்கு அழைக்கும்படி நேரிட்டது.

ஆனால் அவனோ அருகில் நின்றுகொண்டு ஒன்றுஞ் செய்யாமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். ஏனென்றால் அப்புதியவன் திடீரென்று அங்குத் தோன்றியது அவனை வியப்பி லாழ்த்தி யிருந்தது. மேலும் அவன் அப்புதிய வனைப் பேய் என்றே நினைத்திருந்தான்.

அவ்வரேபியர் உதவி செய்யுமாறு கத்தி யதைக்கேட்ட பின்னரே அவ்வீரன் தன்னுணர் வைப்பெற்றான். உடனே அவனது தோழரை விட வில்லை யெனில் அப்புதியவனைக் கொன்றுவிடுவ தாக அவ்வீரன் அச்சுறுத்தினான். உடனே அப் புதியவன் எழுந்து அம்முகமதியரையும் எழுந் திருக்க அனுமதித்தான்.

ஆனால் அம்முகமதிய வீரரோ தன்னை அங்ஙனம் தாக்கிய புதியவன்மீது சினங்கொள்ளா மல் இருந்தது அவ்வெள்ளையனுக்கு வியப்பை யளித்தது. அம்முகமதியர், 'ஏ அறிவற்ற துற வியே! வெறியனும், இறைவனால் பாதுகாக்கப்படு பவனுமாகிய நீ உனக்கு வழங்கிய உரிமையை, அளவுக்கு அதிகமாகவே பயன்படுத்துகிறாய் என்பதை உணர்வாயாக. மீண்டும் அங்ஙனம் உன்னை மறந்து செய்ய முற்படின் இவ்வுடைவாள் உன்னை அமைதியுறச் செய்யும்' என்றார். பின்னர்

அவர் தன் நண்பனை நோக்கி ஏளனமாக, 'உனக்கு விருந்தளிக்கவிருக்கும் எங்காடி மடத்துத் தலைவனைப் பார்' என்று கூறினார்.

வெள்ளையவீரன் அதைக்கேட்டு வியப்படைந் தான். ஏனெனில், எங்காடித் துறவியின் பெயர் ஐரோப்பிய நாடுகளில் மிக்க மதிப்புடன் போற்றப் பட்டுவந்தது. உண்மையில் புனிதப் போரில் பங்கு கொண்டிருந்த சில தலைவர்களிடமிருந்து சில செய்திகளை அவன் அத்துறவிக்கு அப்போது எடுத்துச் சென்றுகொண்டிருந்தான். அவன், காண்பதற்காகத் தேடி வந்துகொண்டிருந்த துறவி, அவ்வெறியன்தான் என்பதை அவ்வீரன் எங்ஙனம் நம்ப இயலும்? மேலும் வெளித்தோற் றத்திற்குத் தெரிந்ததைவிட அதிகமான நெருங் கிய நட்பு அம்முகமதிய வீரருக்கும், அத்துறவிக் கும் இடையே இருக்கவேண்டும் என்றும் அவன் ஐயுற்றான். எனவே தான் தாங்கிச் சென்ற செய்தியை உடனே அத்துறவியிடம் கூறாது சற்றுக் காலங் கடத்த முடிவு செய்தான்.

அத்துறவி, தான் வாழ்ந்து வந்த குகைக்கு அவ்விரு வீரர்களையும் அழைத்துச் சென்றார். பின்னர் அவர், அவர்களுக்கு உணவளித்து, அவர்கள் உறங்குவதற்கான படுக்கைகளையும் காட்டினார். அவர் முன்பிருந்ததற்கு முற்றிலும் மாறாக அமைதியுடையவராக மாறிவிட்டார். விரைவிலேயே அவ்வீரர் இருவரும் ஆழ்ந்து உறங்கிவிட்டனர்.

3. இரகசிய தேவாலயம்

பாதி இரவில் கென்னத் அத்துறவியால் எழுப்பப்பட்டான். அவ்வீரன் வியப்புடன் அத்துறவியைப் பார்த்தபோது அவர் மெல்லிய குரலில், 'விரைவாக எழுந்திரு. பேசாமல் மெல்ல நடந்து என்னைப் பின்தொடர்ந்து வா' என்றார்.

அவ்வீரன் அவ்வாறே தன் படுக்கையினின்றும் எழுந்து அத்துறவியைப் பின்தொடர்ந்து சென்று அக்குகையிலிருந்த வெளியறையை அடைந்தான். அவ்வறையில் சிலுவையுடன் கூடிய ஒரு மேடையிருந்தது. அதற்கு முன்னால் அத்துறவி முழங்காற்படியிட்டு அமர்ந்தார். அவ்வீரனையும் அவர் அவ்வாறே செய்யும்படிச் செய்தார். அவ்விருவரும் நீண்ட நேரம் ஒன்றாகவே இறைவனை வழிபட்டனர். பிறகு துறவியார் எழுந்து அவ்வீரனை நோக்கித் திடீரென, 'நீ இங்கிலாந்து அரசராகிய ரிச்சர்டு என்பவரிடமிருந்து எனக்கு ஒரு செய்தியைக் கொண்டுவந்துள்ளாய் அல்லவா?' என்றார்.

அதைக் கேட்ட அவ்வீரன் அவரை நோக்கி, 'ஐயனே! அவ்வரசர் நோயுற்றிருப்பதால், அவரது ஆணையை நேரில் பெறும்பேறு எனக்குக் கிட்டவில்லை. எனவே கிறுத்தவ அரசர் அவையிலிருந்து நான் வந்துள்ளேன்'' என்றான்.

பின்னர் அத்துறவி அம்மேடையின் பின்புறம் சென்று அங்கிருந்த ஒரு சுருள் கம்பியை அழுத்தினார். உடனே அக்குகையின் பக்கவாட்டுச் சுவரில் இருந்த ஓர் இரகசிய கதவு திறந்தது. அங்கிருந்து படிக்கட்டுகளின் வரிசை சென்றதை அவ்வீரன் கண்ணுற்றான். பின்னர் அத்துறவியார் அவ்வீரனிடம் ஒரு மெல்லிய துணியை அளித்து அவருடைய கண்களை அத்துணியால் மறைத்துக் கட்டுமாறு கேட்டுக்கொண்டார். ஏனெனில் அவ்வீரன் சற்றுநேரத்தில் காணவிருந்த அக்காட்சியை அவர் பார்க்க இயலாது போகலாம்.

அவ்வீரனும் அத்துறவியார் கேட்டுக்கொண்டவாறே அத்துணியால் அவருடைய கண்களைக் கட்டினான். மேற்கூறிய வண்ணம் குருடனாக்கப்பட்டு, அத்துறவியார் அவ்வீரனைப் படிகளின் வழியாக மற்றொரு உள்ளறைக்கு அழைத்துச் சென்றார். அத்துறவியினது ஆணைப்படியே கென்னத் என்னும் அவ்வீரன் தன் காலணிகளை அகற்றிவிட்டு அங்கிருந்த கதவை மூன்று முறை தட்டினான். கதவு திறக்கப்பட்டது. அங்கு ஒரு தேவாலயம் பலவித வெள்ளியால் ஆனவிளக்குகளால் ஒளிபெற்று விளங்கிக் கொண்டிருந்ததை அவன் கண்டான்.

அவ்வாலயத்தின் மேற்குப் புறத்தில் ஒரு மேடை யிருந்தது. அம்மேடையின் பின்பக்கத்தில் பர்சிய பட்டாலான திரை தொங்கிக் கொண்டிருந்தது. அத்திரைச்சீலை அதற்குப் பின்புறத்திலிருந்த கடவுளின் சிலையையோ, அந்த ஆலயம்

எந்த நினைவுச் சின்னத்தின் அறிகுறியாகக் கட்டப்பட்டதோ அப்பொருளையோ மறைத்துக் கொண்டு நின்றது. எனவே அவ்வீரன் சிறிது தூரம் முன்னே சென்று, அத்திரையின் முன்னே முழங்காற்படியிட்டமர்ந்து இறைவனைப் போற்றினன். அத்திரை விலகியதும் அதன் பின்புறத்தில் ஒரு அழகிய பேழை இருந்ததை அவன் கண்ணுற்றான். அதனைக் கண்டு அவன் வியப்புற்றிருக்கையில் அப்பேழையின் கதவும் திறந்து கொண்டு அவனுக்கு ஒரு பெரிய மரத்துண்டைக் காட்டியது. அம்மரத்துண்டு ஏசுபிரான் அறையப்பட்ட சிலுவையின் ஒரு பகுதியாகும். அதனை அவ்வீரன் அச்சம் நிறைந்த கண்களால் கண்டான். அதே நேரத்தில் பல பெண்கள் இறைவனைத் துதித்துப் பாடும் பாட்டொலியையும் அவன் செவியுற்றான். பாடல் நின்றதும் பெட்டியின் கதவு மூடிக்கொண்டது. திரையும் முன் போலவே அப்பெட்டியை மறைத்து நின்றது.

அவ்வீரன் துறவியார் பக்கம் திரும்பினன். அவரோ தன் கண்கள் கட்டப்பட்ட நிலையிலேயே வாயிற்படிக்கப்பால் தரையில் குப்புறப்படுத்திருந்தார். அவ்வீரன் அவரை அணுகியபோது அவர், 'நில், நில், நீ காண வேண்டிய காட்சி இன்னும் முற்றுப் பெறவில்லை' என்றார். அவ்வாறு சொல்லிக் கொண்டே அவர் எழுந்து வாயிற்படிக்கு அப்பால் சென்று அவ்வாலயத்தின் கதவுகளை மூடிவிட்டார்.

இவ்வாறு அவ்வீரன் வெளிச்சம் நிறைந்த அந்த ஆலயத்தில் தனித்து விடப்பட்டான். அடுத்து என்ன நேரும் என்பதை அறியாதவனாய் நீண்ட நேரம் அவன் அவ்வாலயத்தில் நடந்து கொண்டிருந்தான். முதற்கோழி கூவும் விடியற் காலையில் வெள்ளியாலான மணி ஒலித்த ஓசையை அவன் கேட்டான். அதையடுத்து, தூரத்தில் பெண்கள் பாடும் பாட்டொலி கேட்டது. மீண்டும் திரை விலகி அப்புனித நினைவுச் சின்னத்தைப் புலப்படுத்தியது. மீண்டும் அவ்வீரன் முழங்கால் படியிட்டு இறைவனைத் துதிக்கத் தொடங்கினன். தூரத்தில் கேட்ட அந்தப் பாடலின் ஒலி நெருங்கி வருவது தெரிந்தது. திடீரென அந்த ஆலயத்தின் ஒரு பக்கத்தில் கண்ணுக்குத் தெரியாமலிருந்த ஒரு கதவு ஓசையின்றித் திறந்து கொண்டது. அதன் வழியாகச் சிலர் உள்ளே நுழைந்தனர். அவர்களுக்கு முன்னால் இரு அழகிய சிறுவர்கள் தங்கள் கைகளில் நறுமணப் புகை உண்டாக்கும் பாத்திரங்களை எடுத்துச் சென்றனர். அதனால் அங்கிருந்த காற்று நறுமணம் பெற்று வீசியது.

இரண்டாவதாக வந்த இரு பிள்ளைகள் மலர்களைச் சிதறினர். அவர்களுக்குப் பின்னால் இருவர் இருவராக ஆறு பெண் துறவிகள் வந்தனர். அவ்வறுவரும் கறுப்பு மேல்துணியை யணிந்திருந்தனர். அவர்களுக்குப் பின்னால் வெண்மையான மேல்துணியைப் போர்த்திருந்த ஆறு மாதர்கள் வந்தனர். இம்மாதர்கள் தங்கள் கரங்களில் வெள்ளை நிறமும் செந்நிறமுமுள்ள ரோஜா மலர்களால் ஆன மாலைகளைத் தாங்கிவந்தனர். பாடிக்

கொண்டே அவர்கள் அத்தேவாலயத்தை வலம் வந்தனர். அவர்கள் கென்னத்துக்கு வெகு அருகில் சென்ருராயினும் ஒருவரும் அவனைக் கவனித்ததாகவே தெரியவில்லை.

அவர்கள் இரண்டாம் முறை வலஞ்செய்த போது வெள்ளை மேலணியை யணிந்த கன்னி யருள் ஒருத்தி, தன் கையிலிருந்த மாலையிலிருந்து ஒரு ரோஜா மலரைப் பறித்துக் கென்னத்தின் பாதத்திற்கு முன்னுல் தரையில் விழச் செய்தாள். அவன் ஒரு வாளியால் தாக்கப்பட்டது போன்று திடுக்கிட்டான். அம்மலர் அவ்வாறு விழுந்தது தற்செயலாக நேர்ந்ததா, அன்றி அவனை யறிந்த எவராவது செய்த சைகையா என்பது அவனுக்குத் தெரியவில்லை. மூச்சையும் அடக்கிக்கொண்டு அம்மலரை விழச் செய்த கன்னிகையை அவன் உற்று நோக்கிக் கொண்டும், அவர்கள் வலமாக மீண்டும் தன்னருகில் வருவதை எதிர்பார்த்துக் கொண்டும் ஆர்வத்தோடு காத்திருந்தான். அவர்கள் அவனைக் கடந்து செல்கையில் அந் நங்கை மீண்டும் அவன் பாதத்தருகில் மற்ருெரு மலரை விழச் செய்தாள். உடனே அவ்வீரன் அவ்வாறு மலர் வீழ்ந்தது தற்செயலாக நேர்ந்த தன்று என்று உணர்ந்தான். அம்மலரை வீழ்த்திய கரத்தை அவன் அதற்கு முன்னர் பார்த்திருந்த தாகவும் நினைத்தான். அவள் விரலில் அணிந் திருந்த விலைமதிப்பற்ற சிவப்புக்கல் பதிக்கப் பெற்ற மோதிரத்தை அவன் கண்டான். அம் மோதிரம் அணிந்த விரல் யாருடையது என்பது அவனுக்கு நன்கு தெரியும். அம்மாது அவனுல்

காதலிக்கப்பட்ட எடித் என்பவளாவாள். அவள் பாலைவனத்திலிருந்த அவ்வாலயத்திற்கு எங்ஙனம் வந்து சேர்ந்தாள்? அவன் கண்டவை யனைத்தும் ஒரு கனவோ என்று அவன் நினைத்துக்கொண் டிருந்தபோது விளக்குகள் அணைக்கப் பட்டன ; கதவுகள் மூடப்பட்டன. அம்மாதர்கள் மறைந்து போயினர். அவ்வீரன் உடனே முழங்காற்படி யிட்டு அம்மலர்களைக் கைகளால் தடவி யெடுத்து அவற்றைத் தன் உதடுகளோடும், மார்புடனும் பொருந்துமாறு அழுத்தினுன்.

எடித் என்னும் அம்மாது ரிச்சர்டு என்னும் ஆங்கில அரசரின் ஒன்றுவிட்ட தங்கையாவாள். அவளது அழகையும், நற்பண்புகளையும் அனை வரும் பாராட்டினர். கென்னத் என்னும் அவ் வீரன் போட்டிகள் நடைபெற்ற இடங்களில் அவளைக் கண்டு காதலித்தான். எனினும் உயர்ந்த நிலையிலுள்ள மக்களுடன் பழகிய அவள், ஸ்காத் லாந்தைச் சேர்ந்த எளிய நிலையிலுள்ள அப்போர் வீரனுடன் பழகுவது இயலாததாக இருந்தது. எனவே அவன் காதல் வெளியே கூறப்படாமல், அவன் மனத்திலேயே புதையுண்டுகிடந்தது. அம் மாதரசியும் அவனைப் போட்டி நடைபெற்ற இடங் களிலெல்லாம் அடிக்கடி கண்டிருந்தாள். போர் களில் அவன் ஆற்றிய வீரச் செயல்களை எல்லாம் பலமுறை கேட்டிருந்தாள். எனவே அவளுடைய உணர்ச்சிகள் அவன் பக்கமாகத் திரும்பின. அவள் அவனைத் தூரத்திலிருந்து கவனித்து வந்த போதிலும், அவன் அவளை நேசிக்கிருன் என்பதை ஐயமற அறிந்துகொண்டாள். அதே நேரத்தில்

அவள் காதலைப் பெறத் தகுதியுடைய ஒரே மனிதன் அவன்தான் எனவும் முடிவு செய்தாள். எனினும் அவர்கள் அதுவரை பேசியதில்லை. அதற்குக் காரணம் கென்னத் தன்னிலையின் அளவை மீற விரும்பாமை மட்டுமன்று. அத்-தகைய காதலால் விளையக்கூடிய பேரழிவையும், இடையூறுகளையும் அவ்விருவரும் உணர்ந்திருந்தமையுமாகும். ஆகையால் அந்த ஆலயத்தில் அவர்கள் எதிர்பாராத வண்ணம் சந்தித்த வரையில், அம்மாது தன் காதலின் சின்னத்தை அவனுக்குத் தெரிவிக்காமலே இருந்துவந்தாள். ஆகையால் அவள் கென்னத்தின் காலடியில் எறிந்த அம்மலர்களை எடுத்துத் தன் மார்பிலும், உதட்டிலும் அவன் பதித்துக்கொண்டதில் வியப்பொன்றுமில்லை எனலாம்.

அவ்வீரனின் இன்ப நினைவுகள் ஓர் ஊதலின் ஒலியால் திடீரென்று தடைபடுத்தப்பட்டது. இரண்டு விகாரமான குள்ளர்கள் அந்த தேவாலயத்திற்குள் நுழைந்து அங்குத் தரையில் வீழ்ந்து கிடந்த பொருள்களை அகற்றித் தூய்மை செய்யத் தொடங்கினர். அவர்கள் கென்னத்தை நெருங்கி வந்த உடனே அவனை ஒருவித வியப்புடன் நோக்கினர். பின்னர் வாய்விட்டுச் சிரிக்கத் தொடங்கினர். அவ்வீரன் அவர்களை நோக்கி, 'நீங்கள் யாவர் ?' என்று வினவினான்.

அவர்களில் ஒருவன், 'நான் நெக்ட பானஸ்' என்னும் குள்ளன் என்றான். மற்றொருத்தி 'நான் அவனுடைய காதலியாகிய குணவரா' என்றாள். அவர்களுடைய விகாரத் தோற்றத்தை

வியப்புடன் நோக்கிய அவ்வீரனை நோக்கி அவ்விருவரும் மீண்டும் நகைக்கலாயினர்.

உடனே துறவியின் குரல் அவர்களை அடக்கியதுடன், 'மூடர்களே! உங்களது வேலை முடிந்தது. வெளியே செல்லுங்கள்' என்றது.

அக்குள்ளர்களும் அவ்வீரனை அத்தேவாலயத்தில் இருளில் தனியே விட்டுவிட்டு விரைந்து வெளியே சென்றனர்.

சிறிது நேரத்திற்குப் பிறகு அவ்வீரன் தேவாலயத்திற்குள் வந்த கதவு மெதுவாகத் திறந்தது. வாயிற்படியில் வைக்கப்பட்டிருந்த விளக்கிலிருந்து மங்கிய ஒளி வீசியது. துறவி தரையின் மீது அடக்கத்துடன் ஒடுங்கிக் கிடந்தார். வீரனின் காலடி ஓசையைக் கேட்டு அவர், 'எல்லாம் முடிந்துவிட்டன. மனிதர்களில் மிகவும் புனிதனாகிய நீயும், மிகப் பெரிய பாவியாகிய நானும் திரும்பிச் செல்லலாம். நான் இன்னும் என் கண்களில் கட்டப்பட்டுள்ள கட்டை அவிழ்க்கக் கூடாது. என் கையைப் பிடித்து என்னை என் குகைக்கு அழைத்துச் செல்' என்றார்.

அங்ஙனமே அவ்வீரன் அவரை விழிப்புடன் இரகசிய வழிகளின் வழியாகவும், படிகளின் வழியாகவும் அழைத்துச் சென்றான். துறவியார் தன் குகையை யடைந்த பின்னர் தன் கண்களில் கட்டியிருந்த துணியை அகற்றி ஒரு பெருமூச்சு விட்டவராய்க் கடுமையான குரலில், 'நீ வெளியே செல், வெளியே செல்—ஓய்வுகொள், ஓய்வு கொள்—நீ உறங்கலாம்—நீ உறங்கக் கூடும்—

நான் உறங்கவும் இயலாது—உறங்கவும் கூடாது' என்ருர்.

அத்துறவியாருடைய நடத்தையால் பெரிதும் வியப்புற்றவனுய் அவ்வீரன் தன் படுக்கையை யடைந்து ஆழ்ந்து உறங்கினுன். மறுநாள் காலேயில் அவ்வீரன் தான் கொணர்ந்த செய்தியைக் குறித்து அத்துறவியுடன் பேசினுன். அதன் பயனுக அவன் அத்துறவியாருடன் மேலும் இரண்டு நாட்கள் தங்கினுன். எனினும் அவன் மீண்டும் அந்த இரகசிய தேவாலயத்தினுள் அனுமதிக்கப்படவில்லே.

4. சிங்கத்தின் உள்ளம் படைத்த ரிச்சர்டு

ரிச்சர்டு என்னும் அரசர் புனிதப்போர் வீரர்களின் தலேவராய்ச் சிரியாவில் வந்திறங்கியபோது அவர் எருசலேம் என்னும் நகரில் எளிதில் வெற்றிவீரராய் நுழையக்கூடும் என்ற நம்பிக்கையுடையவராயிருந்தார். ஆனல் அவர் முயற்சிகளனைத்தும் தோல்வியுற்றன. அதற்கு முக்கிய காரணம் தலேவர்களுக்குள் ஒற்றுமை யில்லாமையே. கிறுத்தவச் சிற்றரசர்கள் ஒருவர்மீது ஒருவர் அழுக்காறு கொண்டிருந்தனர். ரிச்சர்டு என்னும் அரசரது செருக்கும், மற்றவர்களிடம் அவர் கொண்டிருந்த வெளிப்படையான வெறுப்பும், அவரது செல்வாக்கைக் குறைத்துவிட்டன. அவர் மேற்கொண்ட முயற்சிகளனைத்தையும் பிரான்சு அரசராகிய பிலிப் என்பவர் எதிர்த்துவந்தார். இதற்கிடையில் அவர்கள் படையும் சிறுத்துக் கொண்டே வந்தது. பலர் போரைக் கைவிட்டுத் தங்கள் தாயகம் திரும்பிவிட்டனர். மற்றும் பலர் நோயாலும் பகைவரது எதிர்பாராத தாக்குதலாலும் இறந்து போயினர். அந்நிலேயில் ரிச்சர்டு அரசரின் மனஉறுதி ஒன்றே எஞ்சியிருந்த வீரர்களே ஒன்று சேர்த்தது. எனினும் எஃகு போன்ற அவரது உடலும் அதிகமான உழைப்பைத் தாங்கக் கூடவில்லே. அவரும் காய்ச்சலால் சிறிது சிறிதாக உடல் மெலிந்து வந்தார்,

எனவே மற்றச் சிற்றரசர்கள் ஒன்றுகூடி ஆய்ந்து முகமதிய அரசரிடம் 30 நாட்கள் வரை போர் நிறுத்த ஒப்பந்தம் செய்துகொள்ளத் தீர்மானித்தனர்.

ரிச்சர்டு மன்னர் நோயுற்றதால் புனிதப் போர் வீரர்கள் வேலையில்லாது வாளாவிருந்தனர். தன் வீரர்கள் இங்ஙனம் ஊக்கங் குன்றியிருந்ததும், தன்னுடைய நிலையும், ரிச்சர்டு அரசரைப் பெரிதும் துன்புறுத்தின. எனவே அவர் தன்மீதும், தன்னைச் சார்ந்திருந்த ஒவ்வொருவர் மீதும் சினங் கொண்டார். அந்நாட்டிலிருந்த சிறந்த மருத்துவர்கள் முயன்றும் அவர் நோயைக் குணப்படுத்த அவர்களால் முடியவில்லை. அவரது அமைதியற்ற நிலையும் கட்டுப்படுத்த இயலாத அவரது உணர்ச்சிகளும் அவர் நிலையை மேலும் மோசமாக்கின. இக்காரணத்தால் அவருடைய ஆட்களில் எவரும் அவர் அருகில் செல்லத் துணியவில்லை. அவரருகில் எப்போதும் தங்கியிருந்த ஒரேஒரு மனிதன் இருந்தான். அவன் கில்ஸ்லாந்து பிரபுவாகிய தாமஸ் என்பவன். அவன் போர் வீரர்களில் அரக்கன் போன்றவனெனினும், தன் தலைவன்பால் பெரிதும் பற்றுடையவன். எனவே அவன் தன் உயிரையும் பொருட்படுத்தாது அவ்வரசருக்கு வேண்டிய உதவிகளைச் செய்து வந்தான். அரசருடைய காய்ச்சல் ஒரு தொற்று நோய் என்பதை அறிந்துங்கூட அவன் இரவும் பகலும் அவருக்கு அருகிலிருந்து அவரைக் கவனித்துவந்தான்.

ஒருநாள் மாலை அரசர், தன் படுக்கையில் இப்படியும் அப்படியுமாகப் புரண்டுக்கொண்டிருந்தார். தாமஸ் என்னும் அவ்வீரன் அவரைக் கவனித்துக்கொண்டும், அவரது நிலைக்கு வருந்திக் கொண்டும், அவர் படுக்கையின் அருகே நின்று கொண்டுமிருந்தான். நீண்ட நேர மௌனத்திற்குப் பிறகு அரசர் அவனைப் பார்த்து, 'நம்முடைய முகாமிலிருந்து எனக்குச் சொல்ல இதைவிடச் சிறந்த செய்தி ஒன்றும் உனக்குக் கிடைக்கவில்லையா ? நம் போர்வீரர்கள் அனைவரும் பெண்களாகவும், பெண்களனைவரும் கடவுளடியவர்களாகவும் ஆய்விட்டனரா ?' என்றார்.

தாமஸ் பொறுமையுடன் இருபதாவது முறையாக, 'தலைவரே ! போர் நிறுத்த உடன்படிக்கை போரை நிறுத்தியுள்ளது. நமது பெண்கள் அனைவரும் அரசியுடன் உமது உடல் நிலை விரைவில் குணமடைய வேண்டிக்கொள்ளும் பொருட்டு எங்காடி மடத்திற்குச் சென்றுள்ளனர்' என்றான்.

பொறுமை இழந்தவராய் ரிச்சர்டு, 'இந்தக் காய்ச்சல்! பிரான்சு அரசராகிய பிலிப்பும், ஆஸ்திரிய இளவரசரும், மற்றவர்களும் ஒன்று சேர்ந்து மற்றொரு தலைவரைத் தேர்ந்தெடுத்துப் போரை அவர்கள் ஏன் நடத்தக் கூடாது ? ஏன் எருசலேமை நோக்கிச் செல்லக் கூடாது ? ரிச்சர்டின் காய்ச்சல் ஏன் எல்லாவற்றையும் நிறுத்தி வைக்கவேண்டும் ?' என்றார்.

'அது போன்ற ஒரு காரியத்திற்காகத் தலைவர்களாயுள்ள அரசர்கள் ஒரு கூட்டத்தைக் கூட்டு

வதாகவும் கேள்விப்படுகிறேன்' என்று தாமஸ் பதில் கூறினன்.

அதைக் கேட்ட உடனே ரிச்சர்டின் பொருமைத் தலைதூக்கியது. 'அவர்கள் என்னை இவ்வளவு சீக்கிரத்திலேயே மறந்துவிட்டனரா? நான் இறந்துவிட்டேன் என்று அவர்கள் நினைத்துக் கொண்டனரோ?' என்றார். பின்னர் அவர், 'இல்லை, அவர்கள் செய்ததுதான் சரி. அவர்கள் யாரைத் தலைவராகத் தேர்ந்துள்ளனர் என்பதைக் கூறுக' என்றார்.

தாமஸ் விடையளிப்பதற்குள் அரசருடைய கூடாரத்திற்கு வெளியே போர்க்கருவிகள் முழங்கும் ஒலியை அவர்கள் கேட்டனர். உடனே ரிச்சர்டு அது டர்க்கியரின் தாக்குதல் என்று நினைத்துத் தன் படுக்கையினின்று எழுந்திருக்க முயன்றார். ஆனால் தாமஸ் அவரைப் பிடித்து மீண்டும் படுக்கையில் படுக்கவைத்தான். அரசரைக் கவனித்துக் கொள்ளுமாறு மற்றைய பணியாளர்களுக்குக் கட்டளையிட்டு, வெளியே ஏற்பட்ட குழப்பம் யாது? என்று அறிய அவன் வெளியே வந்தான்.

5. அரேபிய மருத்துவன்

புனிதப் போரில் பங்குகொண்டவர்களில் பல ஸ்காத்லாந்து வீரர்கள் இருந்தனர். அவர்களுக்குள் நீண்ட காலமாக இருந்துவந்த பகைமை அவர்களை ஆங்கிலேயர்களிடமிருந்து பிரித்தது. எனினும் ஸ்காத்லாந்திலிருந்து வந்திருந்த போர் வீரர்கள் ரிச்சர்டு அரசரைத் தங்கள் தலைவராக விரும்பி ஏற்றுக்கொண்டனர். அவர்கள் ரிச்சர்டு மன்னரின் குடிமக்களல்லராயினும் அவரது உள்ள உறுதி, உடல் வன்மை ஆகியவற்றை வியந்து போற்றினர். அதே போன்று ரிச்சர்டு மன்னரும் தன் வீரர்களுக்கும், ஸ்காத்லாந்து வீரர்களுக்கும் இடையே யாதொரு பாகுபாடும் செய்யவில்லை. இருவரையும் அவர்கள் போரில் காட்டிய வீரத்திற்கேற்பப் போற்றினர். அரசரது பாரபட்சமற்ற இந்தச் செயல் அவ்விரு நாட்டு வீரர்களுக்கிடையில் நட்புறவை வளரச் செய்தது. ஆனால் உடல் நலக்குறைவின் காரணமாக அரசர் போரில் பங்குபெற இயலாமற் போனபோது அவ்விருநாட்டு வீரர்களுக்கிடையிலிருந்த பழைய அழுக்காறு சிறுசிறு வாய்ச்சண்டைகளின் உருவில் வெளிப்பட்டது.

தங்கள் அரசரைப் பின்பற்றிப் பாலத்தீனப் போரில் பங்குகொள்ளும் பொருட்டு வந்திருந்த பிரபுக்களில் மற்றைய யாவரையும் விட தாமஸ் என்பவனே ஸ்காட் மக்களை அதிகமாக வெறுத்

தவன். இதற்குக் காரணமும் இல்லாமலில்லை. எனவே பாலத்தீனத்தில் ஸ்காத்லாந்து தேச வீரர்கள் வந்திருந்ததை அவன் விரும்பவில்லை. அதோடு ரிச்சர்டு மன்னர் அவர்களை விரும்பியது அவனுக்கு மேலும் வருத்தத்தை அதிகரித்தது. அவனால் இயலுமாயின் ஸ்காத்லாந்து மக்களுடன் பேசுவதையும் அவன் நிறுத்திக் கொள்ள விரும் பினான்.

அவன் அவனது கூடாரத்திற்கு வெளியே வந்தவுடனே, அவன் கண்ட காட்சி அவனை வியப்படையச் செய்தது. அவர்கள் தங்கியிருந்த இடத்தின் நடுவே கிறுத்தவப் போர்வீரர்களுக் கிடையே படைகள் தாங்கிய பல முகமதியர்களும், பொதியேற்றப்பட்ட அவர்கள் ஒட்டகங்களும் இருந்தன. அவர்கள் தங்கியிருந்த இடத்திற்குள் அரசருடைய கூடாரத்திற்கு அவ்வளவு அருகே பகைவர்கள் எவ்வாறு வந்தனர் ?

சினமும் வெறுப்பும் நிறைந்தவனாய் அதைப் பற்றிக் கேட்டுத் தெரிந்துகொள்ளத் தாமஸ் தன் அருகில் யாராவது உள்ளனரா என்று பார்த்தான். அவன் கண்ட முதல் மனிதன் சிறுத்தை வீரன் தான். அவன் தாமஸை நோக்கி வந்துகொண் டிருந்தான். தாமஸ் ஒரு ஸ்காத்லாந்தியனிடம் பேச விருப்பமற்றவனாய் வேறு பக்கம் தன் பார் வையைத் திருப்பி அவனைக் கடந்து செல்ல முயன்றான். ஆனால் கென்னத்தோ நேராக அவனிடம் சென்று, 'கில்ஸ்லாந்து பிரபுவே! நான் உமக்கு ஒரு செய்தி கொண்டு வந்துள்ளேன்' என்றான்,

அதனைக் கேட்ட அவ்வாங்கிலப் பிரபு, 'எனக்கா, ஆயின் அதனைச் சுருக்கமாகக் கூறுக. நான் அரசரது பணியில் ஈடுபட்டு உள்ளேன்' என்றனன்.

'நானும் அவ்வாறே அரச பணியைக் குறித்தே வந்துள்ளேன். நான் இப்பொழுது அரசரைக் காணலாமா?' என்றான் கென்னத்.

'உறுதியாக முடியாது. நீ கொண்டுவந்துள்ள செய்தி யாது என்று முதலில் என்னிடம் சொல்.' என்றான் தாமஸ்.

'நான் அரசரது நோயைக் குணப்படுத்தக் கூடிய ஒரு அரேபிய மருத்துவரை அழைத்து வந்திருக்கிறேன்' என்றான் கென்னத்.

'அரசனுக்கு அவன் குணத்தைச் செய்வான் என்பதையும், அரசரைக் கொல்ல அவன் தன் னுடன் நஞ்சைக் கொண்டு வரவில்லை என்ப தையும் நீ எவ்வாறு அறிவாய்?' என்று கேட்டான் தாமஸ்.

'இம்மருத்துவர் அரசரைக் குணப்படுத்தா விடில் தன் உயிரை இழப்பார். அரேபிய மன்னரான சலாடின் என்பவரே வலிமை மிக்கத் தன் பகைவரது நோயைப் போக்குமாறு இம் மருத்துவரை அனுப்பியுள்ளார். மேலும் நம் அரசருக்கு அவர் பல பரிசுப் பொருள்களையும் அனுப்பியுள்ளார். அவற்றை இறக்குவதற்கும், மருத்துவரை அரசரிடம் அழைத்துச் செல்வதற் கும் எனக்கு அனுமதி தாரும்' என்று கென்னத் தாமஸைக் கேட்டுக் கொண்டான்.

'ரிச்சர்டு, சலாடினுடைய வன்மை மிக்க பகைவனுவான். நாம் அவனை எவ்வாறு நம்புவது? அவன் துரோகஞ் செய்யவும் நினைக்கலாம். அல்லவா ?' என்ருன் தாமஸ்.

'சலாடின் ஒரு தைரியமுடையவன் என்பதையும், உண்மையான வீரன் என்பதையும் நீர் அறிவீர். அங்ஙனமாயின் அவர் வேறுவிதமாக நடவார். நீர் விரும்பினுல் நான் அவருக்காகப் பிணையாய் நிற்க இசைகிறேன். எனக்கு இம் மருத்துவரிடம் அந்த அளவுக்கு நம்பிக்கை ஏற்பட்டிருப்பதற்கான காரணத்தையும் கூறுகிறேன், கேளும். என்னுடன் வந்தவர்களில் இறந்தவர் போக எஞ்சியிருந்த ஒருவன் அரசருக்கு ஏற்பட்டுள்ளது போன்ற காய்ச்சலால் வருந்திக் கொண்டிருந்தான். இம்மருத்துவர் அவனுக்கு இரண்டு மணி நேரத்திற்கு முன்பு தான் மருந்து கொடுத்தார். அவன் சுகமுற்று உறங்குகின்ருன். அரசருக்கு இவன் குணமுண்டாக்குவான் என்பதில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை. நான் அங்ஙனமே இவன் நாணயத்தையும் சிறிதும் சந்தேகிக்கவில்லை. ஏனென்ருல் இவன் அரசரைக் குணப்படுத்தத் தவறினுல் தன் உயிரை இழப்பான்' என்ருன்.

இதைக் கேட்ட தாமஸ் ஒரு முடிவுக்கும் வர இயலாதவனு யிருந்தான். முடிவில் அவன் கென்னத்தை நோக்கி, 'நான் நோயுற்றிருந்த உன் ஆளைக் காணலாமா ?' என்ருன்.

கென்னத் சிறிது தயங்கிப் பிறகு 'விருப்பத்துடன் வரவேற்கிறேன். ஆனுல் ஆங்கில

பிரபுக்களின் கூடாரத்தைப் போல என் கூடாரம் ஆடம்பரமாக இருக்குமென்று நீங்கள்எதிர்பார்த்தலாகாது. என் வாழிடம் மிகவும் எளிமையானது' என்ருன்.

இவ்வாறு கூறிய பிறகு கென்னத் தாமஸைத் தன் பகுதிக்கு அழைத்துச் சென்ருன். அவ்விடத்தில் சில எளிய குடிசைகளே காணப்பட்டன. மத்தியிலிருந்த ஒன்றைத் தவிர மற்றவை யாவும் கைவிடப்பட்டும், சீர்கேடான நிலையிலும் இருந்தன. மத்தியிலிருந்த குடிசைதான் கென்னத் வாழ்ந்து வந்த இடம் போலத் தோன்றியது. கென்னத் தாமஸை அதற்குள் அழைத்துச் சென்ருன். தாமஸ் அவ்விடத்தின் வறிய நிலையைக் கண்டு, அந்த ஸ்காத்லாந்து வீரன்மீது பரிவுகொண்டான். அங்கிருந்த இரண்டு படுக்கைகளில் ஒன்றில் கென்னத்தின் ஆள் படுத்து ஆழ்ந்து உறங்கிக்கொண்டிருந்தான். அவனுக்குப் பக்கத்தில் நீண்ட தாடியும், ஊடுருவிச் செல்லும் பார்வையும் உடைய அரேபிய மருத்துவர் அமர்ந்திருந்தார். இரண்டு வீரர்களும் பேசத் தொடங்கியதும், அம்மருத்துவர் அவர்கள் பேச்சை நிறுத்துமாறு கூறி, அவர்களை வெளியே அழைத்துவந்தார். பின்னர் அவர் அவர்களை நோக்கி, 'நோயாளி இப்பொழுது விழிப்படைவானுயின், அவன் உயிருக்கே இறுதி நேரலாம்' என்ருர்.

தாமஸ் விடைபெறுந் தருவாயில் அவனது கவனம் ஒரு பெரிய நாயின் பக்கம் ஈர்க்கப்பட்டது. அது வெளியே வந்து தன் மூக்கைக் கென்னத்

தின் கையில் வைத்தது. கென்னத் அதன் தலையைப் பெருமையுடனும், மகிழ்ச்சியுடனும் தட்டிக் கொடுத்தான். உண்மையில் கென்னத் அதற்குப் பெரிதும் கடமைப்பட்டிருந்தான். அவனுடைய பணம் முற்றிலும் செலவழிந்து விட்டபடியால் கென்னத் தன் உணவுக்குக்கூட அந்நாய் வேட்டையாடிக் கொண்டுவரும் மான்களையே நம்பியிருக்க வேண்டியிருந்தது. தாமஸ் அந்நாயை மறக்க இயலாத மகிழ்ச்சியுடன் நோக்கினன். கென்னத்தும் மகிழ்ச்சியுற்ருன். பின்னர் அவ்விரு வீரர்களும் தாங்கள் சந்திக்கும் போது இருந்ததைவிட சிறந்த நண்பர்களாகப் பிரிந்து சென்றனர். ஆனல் அவர்கள் பிரிந்து செல்வதற்கு முன்பு, கென்னத் தாமஸுக்கு அவன் அரேபிய மருத்துவரை எவ்வாறு சந்தித்தான் என்பதைக் கூறினன். தாமஸ் அம் மருத்துவரைக் குறித்து அரசரிடம் கூறுவதாகவும் கென்னத்தின் நோயுற்ற ஆளைப் பார்ப்பதற்காக அன்று மாலை அவ்விடம் மீண்டும் வருவதாகவும் கூறிச் சென்ருன்.

6. அரசரும் போர்வீரனும்

தாமஸ், ரிச்சர்டு மன்னருக்கு, அரேபிய மருத்துவனைப் பற்றியும் அவன் கென்னத்தின் ஆளின் நோயைக் குணப்படுத்தியதைப் பற்றியும் கூறியபோது, அரசர் அவனை நோக்கி, ‘தாமஸே! இது ஒரு புதுமையான கதையாக இருக்கிறது. ஆனல் அந்த ஸ்காத்லாந்திய வீரன் அரேபிய மருத்துவரை எங்ஙனம் சந்தித்தான்?’ என்ருர்.

தாமஸ் அவரை நோக்கி, ‘என் இறைவரே! மக்களால் மிகவும் புகழ்ந்து பேசப்படும் எங்காடி மடத்துத் தலைவராகிய முதிய துறவியிடம் அவன் அனுப்பப்பட்டான்...’

உடனே ரிச்சர்டு எழுந்துகொண்டு, ‘யாரால் அவன் அனுப்பப்பட்டான்? ஏன்? நமது நலத்தை விரும்பி நம் அரசியார் அவ்விடத்திற்குப் புனித யாத்திரை சென்றிருக்கும் போது அவ்விடத்திற்கு யாரையாவது அனுப்பும் துணிவு யாருக்கு உண்டாயிற்று?’ என்ருர்.

‘சிலுவைப் போர்க்குழு அவனை அங்கு அனுப்பியது. எதற்காக அவன் அனுப்பப்பட்டான் என்பதை அவன் கூறவில்லை. எங்காடி மடத்தில் அவன் ஒரு சாரசின் அதிகாரியைச் சந்தித்து அவர்கள் இருவரும் நண்பராயினர். அவ்வதிகாரி தங்களுடைய உடல்நிலையைப் பற்றி அவன் வாயிலாக அறிந்து, சலாடின் அரசரது

மருத்துவரும் திறமைசாலியுமான ஒருவரைத் தங்களைக் குணப்படுத்துமாறு அனுப்புவதாக வாக்களித்தார். அவர் வியக்கத்தக்க முறையில் தன் வாக்கைக் காப்பாற்றியுள்ளார். ஏனெனில், அம்மருத்துவர் அடுத்த நாளே ஒரு துணையுடன் அம்மடத்தை வந்தடைந்தார். அம்மருத்துவரே சலாடின் மன்னர் தங்களுக்கு அனுப்பிய பரிசுப் பொருள்களை ஒட்டகங்களின்மீது ஏற்றிக்கொண்டு இன்று இங்கு வந்துள்ளார்' என்று ரிச்சர்டு அரசருக்கு அப்பிரபு கூறினான்.

'தாமஸே! அம்மருத்துவரை இங்கு உடனே அழைத்து வருக. அவர் தரும் மருந்தை நான் உட்கொள்வேன்' எனப் பொறுமை யிழந்தவராக ரிச்சர்டு அரசர் கூறினார்.

'என் தலைவரே! சலாடின் மன்னர் தங்களது பெரிய பகைவர் என்பதை மறவாதீர்...' என்று தாமஸ் தயக்கத்துடன் கூறினான்.

'ஆனால், அவர் பெருந்தன்மையுடையவர். பெருந்தன்மையுடைய பகைவர் தன்மைக் கேற்ப அவர் என்னை நேசிக்கிறார். நானும் அவரை நேசிக்கிறேன். அவருடைய நம்பிக்கையைக் குறித்து ஐயுறுவது ஒரு பெரிய பாபமாகும்' என்றார் அரசராகிய ரிச்சர்டு.

'எனினும், ஸ்காத்லாந்து வீரனின் உதவி ஆளுக்கு இம்மருத்துவர் கொடுத்துள்ள மருந்து என்ன பயனைக் கொடுத்துள்ளது என்பதைப் பொறுத்துக் காண்பது நலம்' என்றான் தாமஸ்.

'ஆயின் சந்தேகப் பிராணியே! நீ உடனே சென்று அவனைக் குறித்து செய்தியை அறிந்துவா. போர் செய்யவேண்டிய நிலையில் நோயுற்ற ஒரு எருதைப்போல இங்குப் படுத்திருப்பதைக் காட்டிலும் அவர் கொடுக்கும் மருந்தையுண்டு இறப்பதையே நான் விரும்புகிறேன்' என்றார் ரிச்சர்டு.

தாமஸ் பிரபு மன சஞ்சலத்துடனேயே வெளியே சென்றான். 'ஒரு கிறுத்தவ அரசர் அரேபிய மருத்துவரிடமிருந்து மருந்தை வாங்கி உண்பது தகுமா?' என்று நினைத்தான். தனது ஐயத்தைப் போக்கிக்கொள்ள அவன் யாரேனும் ஒரு பாதிரியாரிடம் செல்ல விரும்பினான். எனவே அவன் ரிச்சர்டு மன்னராலேயே நன்கு மதிக்கப் பட்ட டயர்நகர ஆர்ச்சுபிஷப்பை அணுகித் தன் ஐயத்தை வெளியிட்டான். அப்பெரியார், அரசர் அரேபிய மருத்துவரிடம் சிகிச்சை பெறுவதில் தவறில்லை எனவும், ஆனால் அதற்கு முன்னர் அவரது மருந்தின் தன்மையைத் தாம் அறிய விரும்புவதாகவும், தாமஸுக்குக் கூறினார். எனவே அவர்களிருவரும் கென்னத்தின் குடிசையை நோக்கி உடனே புறப்பட்டனர்.

அந்த ஸ்காத்லாந்தியன் அரேபிய மருத்துவ ரால் விழிப்படையச் செய்யும் நேரத்தில் அவர் களிருவரும் அக்குடிசையை அடைந்தனர். நோயாளி அவன் படுக்கையில் உட்கார்ந்திருந் தான். அவனது நோய் முற்றிலும் நீங்கியிருந்தது. தன்னைக் காண வந்தவர்களை அறிந்துகொண்டு அவன் அமைதியுடன் பேசினான். மேலும் அவனது

...லயை நன்கு ஆராய்ந்தறிய தாமஸ் அவனது கையைப் பற்றி அவனுடைய நாடியை ஆராய்ந்தான். நோய் அவனைவிட்டுச் சென்றிருந்ததைத் தாமஸ் அறிந்து கொண்டான். எனவே மருத்துவரை ரிச்சர்டு பேரரசரது கூடாரத்திற்கு உடனே அழைத்துச் செல்லத் தாமஸ் விரும்பினான். அரேபிய மருத்துவர் புறப்படுவதற்கு முன்னர் அந்த ஸ்காத்லாந்திய வீரனுக்கு மீண்டும் ஒரு முறை சிறிது மருந்தை யளித்தார்.

இதற்கிடையில் பொறுமையற்றிருந்த ரிச்சர்டு மன்னர் கென்னத் என்னும் வீரனை உடனே அழைத்து வருமாறு கட்டளையிட்டார். அவன் அங்கு வந்து சேர்ந்ததும், அரசர் அவனை நோக்கிக் கடுமையான குரலில், 'கென்னத் வீரனே! நீ யாருடைய அதிகாரத்தினால் எங்காடி மடத்திற்குச் சென்றாய் ?' என்றார்.

கென்னத் அதற்கு மறுமொழியாக, 'புனிதப் போரில் பங்குகொண்டுள்ள அரசர்கள் குழுவின் ஆணைக்கிணங்க நான் அங்குச் சென்றேன்' என்றான்.

'எனக்கு அதைப் பற்றி அறிவிக்காமலே உனக்கு அவ்வாறு கட்டளை பிறப்பிக்கத் துணிந்தவன் யார் ?' என்று ரிச்சர்டு மன்னர் வினவினார்.

அதற்குக் கென்னத், 'ஐயா, நான் ஒரு போர் வீரன். எனக்குத் தலைவராக இருப்பவரின் ஆணையை ஏற்று நடத்துவதே என் கடமையாகும். எனவே என்னை நோக்கி இதைக் கேட்பதால் பயனில்லை' என்றான்.

'நீ கூறுவது சரியே கென்னத். நான் உன்னைக் குறைகூற முடியாது. நீ எங்காடி மடத் தலைவருக்கு எடுத்துச் சென்ற செய்தி யாது எனக் கூறுக' என்றார்.

வீரன் முதலில் சற்றுத் தயங்கினான். பின்னர் ரிச்சர்டு அவர்களது தலைவர் மட்டுமன்று. புனிதப் போரில் மிக்க ஈடுபாடு கொண்டவர்களில் அவரும் ஒருவர் என்பதை நினைத்தவனாய் அரசரை நோக்கி அவன் தனக்குத் தெரிந்தவைகளை எல்லாம் கூறினான். 'புனிதப்போரில் பங்கு கொண்ட அரசர்களின் குழு எங்காடி மடத்துத் தலைவர் வாயிலாக நிலையான போர் நிறுத்தத்திற்கு வழிகோலுமாறு சலாடினைக் கேட்டுக்கொள்ளவும் கிறுத்தவப் படைகளை அங்கிருந்து அவர்கள் நாட்டிற்குத் திருப்பி அனுப்பவும் முடிவு செய்து, அச்செய்தியை அத்துறவியாருக்குக் கூறும் வண்ணம் என்னை அங்கு அனுப்பினர்' என்று கென்னத் கூறினன். தன்னுடன் புனிதப் போரில் பங்குகொள்ளும் பொருட்டு அந் நாட்டிற்குச் சென்றிருந்த மற்றைய அரசர்கள் இத்தகைய ஒரு முடிவிற்கு வந்ததைக் குறித்து ரிச்சர்டு பேரரசர் மிக்க சினமடைந்தார். அத்தகைய திட்டத்தில் பங்குகொண்டதற்காக அந்தப் போர் வீரன்மீதும் சீற்றமுற்றார். பின்னர் அவனை நோக்கிக் கடுமையான குரலில், 'நீ எங்காடி மடத்திலிருந்தபோது என்னுடைய அரசியையும் அவளுடனிருந்த மற்றையப் பெண்மணிகளையும் கண்டாயா ?' என அப்பேரரசர் வினவினார்.

இங்ஙனம் தன்னை நோக்கி அவ்வரசர் கேட்ட போது அவ்வீரன் மிகுந்த துன்பத்திற்கு உள்ளானான். அதற்கு என்ன விடை கூறுவது என்றே அவனுக்குத் தெரியவில்லை. இறுதியில் அவ்வீரன், 'அம்மடத்துத் தலைவரால் நான் ஒரு தேவாலயத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டேன். அங்குப் பல பெண்கள் அவ்வாலயத்தை வலமாக வந்ததைக் கண்ணுற்றேன். ஆயின் அவர்கள் முகங்களை நான் காணவில்லை. எனவே இங்கிலாந்து நாட்டுப் பேரரசி அங்கு இருந்தனரா என்பதை நான் உறுதியாகக் கூற இயலாது' என்று பணிவுடன் விடை பகர்ந்தான்.

உடனே அவ்வரசன் அவனை நோக்கி, 'அப்பெண்மணிகளுள் உனக்குத் தெரிந்தவர்களில் ஒருவரும் இல்லையா ?' என்றார்.

கென்னத் சிறிது நேரம் திகைத்து நின்றான். அவர் மீண்டும் அதே வினவை உரத்துக் கேட்டார்.

மிகுந்த தயக்கமின்றிக் கென்னத், 'எனது தலைவரே! நான் ஒருவாறு யூகிக்கக்கூடும்' என்று சொன்னான்.

அரசர் மிகவும் சினந்தவராய், கடுமை நிறைந்த குரலில், 'நானும்கூட யூகிக்கக்கூடும். ஆனல் இதுவே சாலும். புலியாகிய நீ ஒரு அரிமாவைச் சோதிப்பதைக் குறித்து எச்சரிக்கையாயிரு. மதியைக் காதலிப்பது மடமையான செயல். ஆயின் ஒரு கோபுரத்தின் உச்சியிலிருந்து சந்திரனைப் பிடிக்கத் தாவுதல் பைத்தியக்காரச் செயல். நீ இப்போது போய் தாமஸையும்

அரேபிய மருத்துவரையும் இங்கு அனுப்புக. என்னுடன் புனிதப்போரில் பங்குகொள்ளும் பொருட்டுக் கூடிவந்துள்ள கேளிர்களைவிட சலாடின் மன்னரே என் நம்பிக்கைக்குப் பெரிதும் உரியவர்' என்றார்.

கென்னத் என்னும் வீரன் ரிச்சர்டு அரசரது கேள்விகளிலிருந்து தப்ப விரும்பியவனாய் உடனே வெளியேறினான்.

இந்நிலையில் புனிதப்போரில் பங்குகொள்ள வந்திருந்த இரண்டு தலைவர்கள் அரசரைக் காண வந்திருந்த செய்தியை அங்கிருந்த ஒருவன் ரிச்சர்டு அரசருக்கு அறிவித்தான். அவர்களில் ஒருவர் மத ஊழியர்களாக இருந்து புனிதப் போரில் பங்குகொள்ள வந்திருந்த வீரர்களின் தலைவரும் கான்ராடு என்பவருமாவர்.

மத ஊழியர்கள் முதன்முதலில் இயேசுபிரானது ஆலயத்தை அந்நியர் பிடியிலிருந்து விடுவிக்க எண்ணி அப்போரில் பங்குகொண்டனராயினும் நாளடைவில் அவர்கள் போரையே தொழிலாகக் கொண்டவர் போல மாறிவிட்டனர். அவர்கள் தங்கள் தலைவரைத்தவிர மற்றவர்களின் ஆணைக்குக் கீழ்ப்படியவில்லை. அவர்களின் தலைவரோ சூழ்ச்சியும் பேராசையும் நிறைந்தவர். சலாடின் மன்னருடன் இரகசிய உறவுடையவர் என்றும் சிலர் அவரைக் குறித்து ஐயுற்றிருந்தனர். அவருடைய குணங்களும் செயல்களும் மற்றவர்களுக்கு ஒரு புதிராகவே இருந்தன.

கான்ராடு என்பவர் பாலத்தீனத்தைச் சேர்ந்த ஒரு சிறிய பகுதியை ஆண்டுவந்த மன்னர். அவர் மன உறுதியும் அழகும் உடையவர். அவரது அறிவுத் திறமைக்காகவும் உடலின் தோற்றத்திற்காகவுமே அவரது நண்பர்கள் அவரை மிகவும் விரும்பினர். ஆயினும் அவரும் தன்னலமிக்கவர்; பேராசையுடையவர் எனக் கருதப்பட்டார். அவர் தன் நலனைக் காக்கப் புனிதப் போரின் நலனையும் விருப்பத்துடன் துறக்க விரும்பும் இயல்பினர்.

ரிச்சர்டு அரசர் தன்னைக் காண வந்திருந்த அவ்விருவரையும் அவர்க்குரிய தகுதிக்கேற்ப வரவேற்றார். வழக்கமான உபசரிப்பிற்குப் பிறகு அவர்களிருவரும் தாங்கள் வந்த காரியத்தை ரிச்சர்டு அரசருக்குக் கூறலாயினர். ரிச்சர்டு பேரரசர் அரேபிய மருத்துவரிடம் சிகிச்சை பெறலாகாது என்ற மற்றைய அரசர்களின் வேண்டுகோளை அவருக்கு அறிவிக்கவே அவ்விருவரும் அங்கு வந்திருந்தனர். அவர்கள் வேண்டுகோளை ஏற்றுக்கொள்ளும் மனநிலை அப்போது அவ்வரசருக்கு இல்லை. எனவே உடனே அரேபிய மருத்துவரை உள்ளே அழைத்து வருமாறு அவர் ஆணையிட்டார். அம்மருத்துவரும் அவ்விடம் வந்து அரசரது நாடியை நீண்டநேரம் பரிசோதித்தார். பின்னர் மருந்தைத் தயாரித்து அதை அரசரிடம் அளித்தார். ஆனால் அரசர் அதனை உடனே வாங்கிக் கொள்ளாது அம்மருத்துவரை நோக்கி, ‘சிறிது நேரம் பொறுத்துக்கொள். நீர் என்னுடைய நாடியை ஆய்ந்தீர் அன்றோ?

நான் உம் நாடியை இப்போது பார்க்கிறேன்’ என்றார்.

அம்மருத்துவரும் யாதொரு தயக்கமுமின்றித் தம் கையை அரசர் அருகில் நீட்டினார். அரசரும் அவருடைய விரல்களால் அம்மருத்துவருடைய நாடியை ஆய்ந்தார். பின்னர் அவர், ‘அம்மருத்துவருடைய நாடி ஒரு குழந்தையினுடையதைப் போன்று அமைதியுடையதாக இருக்கிறது. அது அரசர்களுக்கு நஞ்சூட்டுபவனுடையதைப் போன்றில்லை. தாமஸே! நான் பிழைத்தாலும் இறந்தாலும் இம்மருத்துவரைப் பாதுகாப்புடனும் மதிப்புடனும் வெளியே அனுப்புக’ என்று கூறி, பின்னர் அம்மருத்துவரை நோக்கி, ‘நண்பரே! நான் அவருடைய நல்ல நம்பிக்கையை எப்போதும் ஐயுற்றதில்லை என்று அப்பெருமைக் குணமுடைய சலாடின் மன்னருக்குக் கூறுக’ என்றார்.

பின்னர் அரசர் அம்மருத்துவரிடமிருந்து மருந்துள்ள கோப்பையைப் பெற்று அருந்திய பின்னர் உறங்கும் பொருட்டுத் தன் படுக்கையில் சாய்ந்தார். அவ்வறையிலிருந்தவர் அனைவரும் வெளியேறினர். தாமஸும் மருத்துவரும் மட்டும் அரசரது படுக்கையின் பக்கத்தில் இருந்தனர். அரசர் தங்கியிருந்த கூடாரத்திற்கு வெளியே அவரது தூக்கத்திற்கு நேரக்கூடிய இடையூறுகளைத் தவிர்ப்பதற்காக அரசரது ஆட்கள் ஒரு வட்ட வடிவில் நின்று காவல் புரிந்து வந்தனர்.

7. சதி

ரிச்சர்டு பேரரசரின் கூடாரத்தைவிட்டு வந்த பின்னர் மதப் பிரசாரகராயிருந்து புனிதப்போரில் பங்கு கொண்ட வீரர்களின் தலைவரும் கான்ராடும் ஒன்றாகவே நடந்து சென்றனர். ஒவ்வொருவருக்கும் மற்றவரது இரகசிய எண்ணமும் ஆவலும் நன்கு தெரியும். எனினும் அவர்கள் ரிச்சர்டு அரசரிடம் அவர்களுக்கிருந்த வெறுப்பையும், அவர் வெற்றி பெற்றுவிடுவாரோ என்று அவர்களுக்குள் இருந்த அச்சத்தையும் அவர்கள் அதுவரை வெளிப்படையாக வாய்விட்டுக் கூறிய தில்லை. அதற்கு ஒரு வாய்ப்பு அப்போது அவர்களுக்குக் கிடைத்தது. அவர்கள் அப்போது பேசிய பேச்சு அவர்கள் எங்ஙனம் ரிச்சர்டு அரசரைப் பற்றியும் புனிதப்போரின் பலாபலன்களைப் பற்றியும் ஒரே விதமான கருத்துடையவராக இருந்தனர் என்பதைப் புலப்படுத்தியது. சலாடின் அரசரின் தோல்வி அவர்களது சொந்த நலனுக்கு மாறானது என்பதை அவர்கள் அறிந்திருந்தனர். அங்ஙனம் நேரின் அந்த மதப்பிரசாரகரின் தலைவர் அப்போது வகித்துவந்த தலைமைப் பதவியை அவர் இழக்க நேரிடும். ஏனெனில், ஐரோப்பிய அரசர்கள் ஒன்று சேர்ந்து ஒற்றுமைப்பட்டால், தங்களுக்குள் நிகழும் பூசலில் அல்லது சலாடினுக்கு எதிராக நிகழ்த்தும் போரில் அவரது உதவி அவர்களுக்கு அதற்குமேல் தேவையற்றதாகும். கான்ராடு என்னும் மற்றவரோ அப்போது பாலத்தீனத்தைச் சேர்ந்த ஒரு சிறிய பகுதிக்குத் தலைவனாயிருந்தார். புனிதப்போரில் ரிச்சர்டு அரசர் வெற்றி பெற்றால் அவர் உறுதியாக பாலத்தீனத்திற்கு வேறு ஒருவரை அரசராக்குவார். முடிபுனையவேண்டும் என்னும் கான்ராடின் எண்ணம் நிறைவேறாததொன்றாகும். மாறாக அவர்கள் புனிதப்போரில் ஈடுபட்டிருந்த அரசர்களைப் பிரித்துவைப்பதனாலே யன்றிப் பிறவழிகளிலோ சலாடின் மன்னருக்கு உதவி வந்தால், அதற்கு ஈடாக நல்ல பரிசைப் பெறக்கூடும். ஆயின் அதனை எங்ஙனம் செய்வது ?

பிரான்சு அரசராகிய பிலிப்பும், ஆஸ்திரிய மன்னரும் ரிச்சர்டு அரசரது செல்வாக்கையும் வன்மையையும் கண்டு அழுக்காறு கொண்டிருந்தனர் எனவும், அவர்கள் மனத்தை மேலும் கெடுத்து அவர்களது படைகளைப் போரில் பங்கு கொள்ளாது திருப்பி யனுப்பிவிடுமாறு செய்வதாகவும், கான்ராடு கூறினார். அங்ஙனஞ் செய்யின் ரிச்சர்டு வெற்றி பெறாது தோல்வியுறுவாரென்பது கான்ராடின் நம்பிக்கை. ஆனால் மதப் பிரசாரகர்களின் தலைவரோ அதைக் கேட்டுத் தன் தலையை யசைத்து கான்ராடின் காதுகளில், 'ரிச்சர்டு அரசர் அவரது நோயினின்று குணமடைந்து எழாமலிருக்கச் செய்வதே சரியானதும் உறுதியானதுமான வழியாகும்' என்று மிகவும் மெல்லிய குரலில் கூறினார்.

இத்தகைய பயங்கரத் திட்டத்தைக் கேட்டு கான்ராடும் ஒரு கணம் திகைப்புற்றார். பின் நினைவு அவர்களது பிரச்சினைக்கு அது எளிய

முடிவு என்பதை விளக்கியது. எனினும் அவர் முதலில் ஆஸ்திரியாவுக்கும் இங்கிலாந்திற்கும் இடையில் நிலவியிருந்த நட்பு நிலையைக் கெடுக்கவே விரும்பினுர்.

அடுத்த நாள் கான்ராடு ஆஸ்திரிய அரசருக்குச் சில உயர்ந்தரக திராட்சைப் பானங்களைப் பரிசாக அனுப்பினுர். அதற்குப் பதிலாக அவ்வரசர் தம்முடன் விருந்துண்ணுமாறு கான்ராடை அழைத்தார். அவ்வழைப்பைக் கான்ராடு உடனே ஏற்றுக்கொண்டார் என்று கூறவேண்டியதில்லை.

லியோபோல்டு என்னும் ஆஸ்திரிய மன்னர் ஜெர்மானிய பேரரசின் ஒரு சிறந்த பகுதியின் அரசராவர். ஆயின் அவரது சொந்த குண நலன்கள் அப்பதவிக்கு ஏற்றனவாக இல்லை. அவர் ஒரு வன்மையற்றவரும் வீணருமாவர். அவருக்குப் பிரான்சு வேந்தராகிய பிலிப்பிடமிருந்த அறிவுச் சிறப்போ அன்றி ஆங்கில அரசராகிய ரிச்சர்டு என்பாரிடமிருந்த வீரமோ இல்லை. இவற்றின் குறைவை அவர் தன்னைச் சுற்றியிருந்த ஆடம்பரப் பொருள்களாலும் பெருமித வாழ்க்கையாலும் போக்கி வந்தனர். அவரது குணநலன்களை அவருக்கு மதுவின்மீதிருந்த பற்றுதலும், அவரை அவருக்கு முன்னுலேயே புகழும்போது ஏற்படும் மகிழ்ச்சியும்,மேலும் குறைந்தன. அவர் அப்புனிதப் போரில் ரிச்சர்டு அரசரது கவர்ச்சிகரமான தோற்றத்தால் ஈர்க்கப்பட்டுச் சேர்ந்தார். ஆங்கில அரசரது நட்பினுல் அவர் மகிழ்ச்சியுடனேயே வாழ்ந்திருப்பார். ஆனுல் ரிச்சர்டு

அரசர் அவரது குறைகளை விரைவிலேயே கண்டு கொண்டார். இதனுல் அவர் லியோபோல்டு வேந்தரை ஒளிவு மறைவு இன்றி வெளிப்படையாகவே வெறுக்கத் தலைப்பட்டார். எனவே அவ்வரசர் ரிச்சர்டு பேரரசரை நேசிக்க இடமில்லாது போய்விட்டது.

இதனை யறிந்த கான்ராடு அவரது திட்டங்களை இவ்வடிப்படையின் மேல் தீட்டத் தொடங்கினுர். அவர்கள் விருந்துண்ண அமர்ந்திருந்த போது கான்ராடு, ரிச்சர்டு அரசரைப் பற்றியும் அவரது செருக்கைப் பற்றியும் பேசுவதற்கான வாய்ப்பை நாடிக் கொண்டிருந்தார். அவ்வாய்ப்பும் அவருக்கு விரைவிலேயே கிட்டியது. ஆஸ்திரிய அரசரின் பாடகர்களில் ஒருவன் ஆஸ்திரியாவின் புகழைக் குறித்தும், அந்நாட்டுக் கொடியின் சின்னமாகத் தீட்டியிருந்த கழுகினைக் குறித்தும் ஒரு பாடலைப் பாடினுன்.

அப்பாடகன் பின்னர் அப்பாடலில் விளக்கமாக, ‘எல்லாப் பறவைகளிலும் கழுகே மிக்க உயரத்திலும் சூரியனுக்கு மிக அருகிலும் பறக்கிறது’ என்றுன்.

உடனே கான்ராடு கவலையற்றவராய் ‘அக்கழுகைவிட உயரமாகச் சிங்கம் பாய்கிறது’ என்றுர்.

லியோபோல்டு மன்னர் மதுவினுல் பாதிக்கு மேல் அறிவு மயங்கிய நிலையில் இருந்தபோதிலும் கான்ராடு கூறியதன் கருத்தை உணர்ந்துகொண்டார். எனவே அவர் கான்ராடை நோக்கி,

‘ரிச்சர்டு அரசர் அவரது துணைவர்களைக் காட்டிலும் உயர்ந்தவராகத் தன்னை நினைக்கிறாரா?’ என்றார்.

‘அது எனக்கு எப்படித் தெரியும்? ஆனால் நமது முகாமின் நடுவில் சிங்கச் சின்னமுள்ள இங்கிலாந்து நாட்டுக்கொடி பிறநாட்டுக் கொடிகளைவிட உயரத்தில் பறத்தலைக் காண்கிறேன்’ என்றார் கான்ராடு.

ஆங்கிலப் படை அந்த முகாமில் நடுப்பகுதியில் தங்கியிருந்தது. அவ்விடத்தின் அருகில் ஒரு மண்மேடு அமைந்திருந்தது. ஆங்கில வீரர்கள் அம்மேட்டில் தங்கள் நாட்டுக்கொடியைப் பறக்க விட்டிருந்தனர். அம்மணல் மேட்டிற்கு அவர்கள் தூய ஜியார்ஜ் மேடு எனப் பெயரிட்டிருந்தனர். எனவே ஆங்கிலக் கொடி மற்றையக் கொடிகளைவிட உயரமாகப் பறந்தது. இவை யாவும் உண்மையே யாயினும் அவை தற்செயலாக நேர்ந்ததேயாம். ஆனால் கான்ராடு இதனைத் தம் தீய திட்டத்தை நிறைவேற்ற ஒரு கருவியாகப் பயன்படுத்திக் கொண்டார்.

லியோபோல்டு, கான்ராடின் பொறியில் எளிதில் சிக்கிக்கொண்டார். எனவே, அவர் கான்ராடை நோக்கி, ‘இத்தகைய அவமதிப்பை நீர் ஏன் மிகப்பொறுமையுடன் சகித்துக் கொண்டிருக்கிறீர்கள்?’ என்றார்.

அதற்கு மறுமொழியாகக் கான்ராடு, ‘ஒரு பேரரசராகிய தாங்களே அதைப் பொறுமையுடன் சகித்துக்கொண்டிருக்கும்போது எளிய சிற்றரச

னாகிய யான் என்ன செய்ய இயலும்? தங்களால் மகிழ்ச்சியுடன் பொறுத்துக் கொள்ளக்கூடிய அவமதிப்பு எனக்கு அவமதிப்பாக எங்ஙனம் இருக்கக்கூடும்?’ என்றார்.

இதைக் கேட்ட ஆஸ்திரிய மன்னர் சினத்துடன், ‘ஆஸ்திரிய மன்னனாகிய நானா ஒரு தீவின் பாதி பாகத்திற்கும் குறைவான நிலப்பரப்பின் அரசனாகிய ரிச்சர்டுக்கு அடங்கியிருக்கிறேன். இவ்வாஸ்திரிய மன்னன் என்ன செய்வான் என்பதை நீர் விரைவிலேயே காண்பீர்!’ என்றார்.

இதைக் கூறிக்கொண்டே அவர் தன் ஆட்களை நோக்கி, ‘நண்பர்களே! எழுந்திருங்கள். என்னைப் பின்தொடர்ந்து வாருங்கள். ஆஸ்திரிய நாட்டுக் கழுகினை ஆங்கில நாட்டுச் சிங்கம் பறக்கும் அளவிற்கும் உயரமாகப் பறக்கச் செய்வோம்’ என்றார்.

இவ்வாறு கூறிக்கொண்டே அவர் தூய ஜியார்ஜ் மணல் மேட்டை நோக்கி விரைந்தார். கான்ராடோ, ‘என் தலைவரே! அது அறிவுடைமை யாகாது. இன்னுஞ் சிறிது காலம் பொறுத்திருத்தலே......’ என்று கூறித் தடுப்பதுபோல நடித்தார்.

‘அடங்கியிருப்பதா? அது இனி ஒரு கணமேனும் முடியாது’ என்று அந்தக் குடிவெறியிலிருந்த மன்னர் இறைந்து கத்தினார். தன் கையில் கொடியைப் பிடித்துக்கொண்டு அவரை ஊக்கிக் கொண்டிருந்த அவரது ஆட்கள் பின் தொடர்ந்து வர அவர் தூய ஜியார்ஜ் மணல்

மேட்டை நோக்கிச் சென்ருர். பின்னர் ஆங்கிலக் கொடி பறந்து கொண்டிருந்த மரத்தைப் பிடிங்கி எறிபவரைப்போல அதன்மீது அவர் தன் கையை வைத்தார். அவரது ஆட்களில் அவரைக் காட்டிலும் அதிக அறிவுடையவனுயிருந்த ஒருவன், 'என்னருமைத் தலைவரே! என்னருமைத் தலைவரே! எச்சரிக்கையாயிருங்கள்! எச்சரிக்கையாயிருங்கள்! சிங்கத்திற்குப் பற்களுண்டு' என்றுரைத்த வண்ணம் அவரைப் பிடித்துப் பின்புறமாக இழுத்துக்கொண்டான்.

'கழுகுக்கும் நகங்களுண்டு' என்ருர் அவ்வரசர். அந்நிலையில் அவரது கரங்கள் கொடி மரத்தின் மீதிருந்தாலும் அதனைத் தரையிலிருந்து பிடுங்குவதற்கு அவர் தயங்கினுர். அந்நிலையில் அவரது காவலன் திடுமென ஓர் எண்ணங் கொண்டவனுய்த் தன் அரசனை நோக்கி, 'சிங்கம் விலங்குகளுக்கு அரசனுய் இருத்தலைப் போன்று கழுகு பறவைகளுக்கு அரசனுய் இருக்கிறது. எனவே அவற்றுக்கிடையில் போட்டி வேண்டுவதில்லை. பெருந்தன்மையுள்ள கழுகும், சிங்கமும் அமைதியுடன் அடுத்து அடுத்துப் பறக்கட்டும்' என்ருன்.

இக்கூற்ருல் லியோபோல்டு அரசர் மகிழ்ச்சியுற்ருர். எனவே தன் நாட்டுக் கொடியை ஆங்கில நாட்டுக் கொடியின் பக்கத்தில் அம் மணல் மேடையின்மீது குடிவெறியிலிருந்த அவர் தன் ஆட்களின் கை தட்டுதலுக்கிடையே பறக்கவிட்டார். பின்னர் கான்ராடைக் காணச் சுற்றுமுற்றும் நோக்கினுர். ஆனுல் அவரோ மறைந்து போனுர். ஒருவேளை அவர் லியோ-போல்டின் செய்கையில் தனக்கும் பங்கு உண்டு என மற்றவர்கள் நினைக்கக்கூடாது என எண்ணியிருக்கலாம். பின்னர் அம்மன்னர் ஒரு பாத்திரம் நிறைய மதுவைக் கொண்டுவருமாறு தன் ஆட்களுக்குக் கட்டளையிட்டார். அம் மது கொண்டுவரப்பட்டதும், அவரும் அவரது ஆட்களும் பிறரும் அதனைக் குடித்து அவர்கள் நாட்டுக் கொடியைச் சுற்றியிருந்து களியாட்டங்களில் ஈடுபட்டனர். அவர்கள் எழுப்பிய ஒலி அந்த முகாமிலிருந்த யாவருக்கும் அச்சமூட்டுவதற்குப் போதியதாயிருந்தது.

8. சொற்போர்

ரிச்சர்டு பேரரசர் தமது நீண்ட நேர உறக்கத்திலிருந்து கண்விழித்தார். அரேபிய மருத்துவர் அவரைப் பரிசோதித்த பின்னர், அவரது காய்ச்சல் முற்றிலும் குணமாய்விட்டதாகக் கூறி, இரண்டாம் முறை மருந்து கொடுக்கத்தேவையே இல்லை என்றும் கூறினர். ரிச்சர்டு அரசர் தாம் நன்கு குணமுற்றதை உணர்ந்து அவரது பெட்டியிலிருந்த செல்வமனைத்தையும் அம்மருத்துவருக்குப் பரிசாக அளிக்குமாறு தாமஸுக்குக் கட்டளையிட்டார். ஆனல் அம்மருத்துவர், 'நான் இறைவனருளிய அறிவை விற்பதில்லை' என்று கூறி அப்பொருள்களைப் பெற மறுத்துவிட்டார். 'பேரரசராகிய ரிச்சர்டு மன்னர் முற்றிலும் குணமுற்றதே எனக்குரிய பரிசுப் பொருளாகும். ஆயினும் நீர் உமது முழு வலிமையையும் மீண்டும் பெறும் வரையிலும் ஓய்வாக இருக்க வேண்டும்' என்றுர்.

ரிச்சர்டு மன்னர் தன் படுக்கையில் மீண்டும் படுக்கச் சென்றபோது மதுக்களிப்பால் ஆரவாரித்துக்கொண்டிருந்த ஆஸ்திரிய நாட்டு வீரர்கள் எழுப்பிய அரவத்தைக் கேட்டார். எனவே அதற்கான காரணத்தைக் கண்டுவருமாறு தாமஸை அனுப்பினர்.

தாமஸும் சில நிமிடங்களில் திரும்பியவனய் ஆஸ்திரிய மன்னனும், அவனுடைய வீரர்களும் தங்கள் களியாட்டங் காரணமாக எழுப்பிய ஒலியே அது என்று சுருக்கமாகக் கூறினன்.

'குடிகார மடையன்' என்றுர் அரசர்.

அச்சமயத்தில் கான்ராடு மிகவும் அவசரமாக உள்ளே நுழைந்தார். 'ஏன்? என்ன செய்தி?' என்று ரிச்சர்டு மன்னர் அவரைக் கேட்டார்.

'மேன்மை தங்கிய அரசரே! ஆஸ்திரிய அரசனது மூடச் செயல்கள் அளவுகடந்து விட்டன. இப்போது அவன் ஆங்கில நாட்டுக் கொடியைத் தூயஜியார்ஜ் மணல் மேட்டிலிருந்து அகற்றிவிட்டு அவ்விடத்தில் தன் நாட்டுக் கொடியை ஏற்றிக்கொண்டிருக்கிருன்' என்று கான்ராடு கூறினர்.

'நீ என்ன கூறினய்?' என்று ரிச்சர்டு அரசர் இறந்தோரையும் எழுப்பக்கூடிய உரத்த குரலில் கத்தினர். அதே நேரத்தில் தன் படுக்கையினின்றும் பாய்ந்து சென்று தனது வாளை எடுத்துக் கொண்டார். தாமஸும் அரேபிய மருத்துவரும் அவரைப் பிடித்து நிறுத்த முயன்றனர். ஆனல் அவர் அவர்களைப் பிடித்துத் தள்ளிவிட்டுக் கூடாரத்தினின்றும் வெளியே பாய்ந்தார். நன்றியுள்ள தாமஸ் பின் தொடர்ந்து வர அவர் தூய ஜியார்ஜ் மணல் மேட்டை அடைந்தார். வழியில் கவசமும் வாளும் தரித்திருந்த ஸ்காத்லாந்திய வீரன் அவருடன் சேர்ந்துகொண்டான்.

மணல் மேட்டின் உச்சியில் லியோபோல்டும், அவனுடைய வீரர்களும் ஆரவாரித்துக்கொண்டு நின்றிருந்தனர். அவர்கள் அவ்விரு நாட்டுக் கொடிகளையும் சூழ்ந்துகொண்டு ஒரு வட்ட

வடிவில் நின்றிருந்தனர். தன்னுடைய இரு நண்பர்களும் தன்னைப் பின்தொடர்ந்து வர அந்த வட்டத்தின் மையத்தில் சென்று நின்றார். ஆஸ்திரிய நாட்டுக் கொடியின்மீது தம் கையை வைத்தவாறே, 'இங்கிலாந்து நாட்டுக் கொடிக்குப் பக்கத்தில் இக்கந்தையை வைக்கத் துணிந்தவன் யார்?' என்று இடிபோல முழங்கினார்.

பின்னர் அக்கொடிக் கம்பத்தைப் பிடுங்கி எடுத்துத் துண்டு துண்டுகளாக உடைத்து கொடிச் சீலையைத் தரையில் வீசி, அதன்மீது தன் காலை வைத்து மிதித்தார். லியோபோல்டு மன்னனும், அவனது ஆட்களும் வாயடைத்து நின்றனர். ஆனால் அவர்கள் நாட்டுக் கொடிக்குச் செய்யப் பட்ட அவமதிப்பை வீரமிக்க ஜெர்மானிய வீரர்களால் பேசாமல் பொறுத்துக்கொள்ள இயலவில்லை. எனவே வாலன்ரோடு என்னும் பெருத்த உருவினனான ஹங்கேரியைச் சேர்ந்த ஒரு வீரன் தன் வாளை ஏந்தி ரிச்சர்டு அரசரைத் தாக்கினான். ஆனால் கென்னத் அந்த அடியைத் தன் கவசத்தின் மீது ஏற்று அரசரைக் காப்பாற்றினான்.

ரிச்சர்டு அரசர், 'யாருடைய தோள் சிலுவையைத் தாங்கிக் கொண்டிருக்கிறதோ அவரைத் தாக்குவதில்லை என நான் உறுதி செய்துள்ளேன். எனவே வாழ்ந்திரு. ஆனால் இங்கிலாந்து மன்னரான ரிச்சர்டு அரசரை நினைவில் கொண்டிருக்கும் பொருட்டு 'வாழ்ந்திரு' என்று சொல்லிக் கொண்டே அவ்வீரனது இடுப்பைப் பிடித்து அவனைத் தூக்கிப் பக்கத்திலிருந்தவர்கள் தலைக்கு

மேலே செல்லுமாறு அவனைத் தூர எறிந்தார். வாலன்ரோடு அம்மேட்டிலிருந்து உருண்டு சென்று இறந்தவனைப் போலத் தரையில் விழுந்து கிடந்தான்.

இதற்கிடையில் அவர்களது சொற்போரைப் பற்றிய செய்தி அம்முகாம் முழுவதும் பரவியது. பிரான்சு மன்னராகிய பிலிப் தன் பிரபுக்கள் சிலருடன் அம்மணல் மேட்டை வந்தடைந்தார். நோயுற்றுப் படுக்கையில் இருப்பதாகக் கருதப் பட்ட ரிச்சர்டு அரசர் அங்கிருந்ததைக் கண்டு அவர் வியப்புற்றார். சிலுவைப் போரில் பங்கு பெற்றிருந்த மற்றைய மன்னர்களைப் போலவே அவரும் ரிச்சர்டுடைய உடல் வலிமை, வீரம் ஆகியவை குறித்து அழுக்காறுடையவராய் இருந்தார். அதே நேரத்தில் ரிச்சர்டு அரசரை விட அறிவில் தான் சிறந்தவர் என்பதையும் அவர் உணர்ந்திருந்தார்.

எனவே அவ்வரசர் புனிதப் பணியில் ஈடுபட்டிருந்த அவ்விருவரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்று அவர்களை வேண்டிக் கொண்டார். லியோபோல்டு மன்னன் அவன் நாட்டுக் கொடியை அம்மணல் மேட்டின்மீது பறக்கச் செய்தது எவ்விதத்தில் தவறான செயல் என்பதை அவனுக்கு எடுத்துக் காட்டினார் பிலிப். அவ்வரசரே ரிச்சர்டு மன்னரைப் புனிதப்போர்ப் படையின் தலைவராக ஏற்றுக்கொண்டது உண்மையே. எனினும் அவர் பதவியில் ஆங்கில அரசருக்குத் தாழ்ந்தவர் என்பது அதற்குப் பொருளன்று.

இது மற்றைய மன்னர்களுக்கும் பொருந்துவ வதாகும்.

பிரான்சு அரசரின் இந்த வாதத்தை ரிச்சர்டு அரசர் சிறிதும் விரும்பவில்லை என்றாலும், அவர் தன் தவறை அப்போது உணர்ந்தார். உண்மையில் ஆஸ்திரிய நாட்டுக் கொடியைப் பற்றிய செயலில் அவர் அவசரப்பட்டுச் செய்த செயலுக்காக வெட்கமும் அடைந்தார். எனவே அவர் விருப்பத்துடனேயே பிலிப் மன்னரின் கைகளை நட்பின் அறிகுறியாகப் பற்றிக்கொண்டு குலுக்கினார். ஆயின் அதே செயலை ஆஸ்திரிய மன்னனுக்கும் செய்யவேண்டும் என்று பிலிப் அவரைக் கேட்டுக்கொண்டபோது ரிச்சர்டு மன்னர் அலட்சியமாக, 'நான் அறிவிலிகளைப் பற்றியோ அவர்களது மடத்தனமான செயல்களைப் பற்றியோ நினைப்பதில்லை' என்று கூறிவிட்டார். எனவே ரிச்சர்டு அரசரை நோக்கி முன்னால் வந்த ஆஸ்திரிய நாட்டு அரசனை லியோபோல்டு இந்த வார்த்தைகளைக் கேட்டு மிக்கச் சினத்துடன் திரும்பிச் சென்றுவிட்டான்.

பின்னர் ரிச்சர்டு மன்னர் தாமஸையும் கென்னத்தையும் நோக்கி, 'இதன் முடிவை நான் இன்னும் காணவில்லை என்பது எனக்கு உறுதியாகத் தெரியும். இந்தக் கொடியை இரவில் பாதுகாப்பின்றி விட நான் விரும்பவில்லை. உள உறுதி கொண்ட ஸ்காத்லாந்து வீரனே! இக்கொடியை நீ காத்திருந்து பகைவரிடமிருந்து உன் உயிரைக் கொடுத்தேனும் இதனைக் காப்பாற்றுவாயா?' என்றார்.

அதற்குக் கென்னத், 'விருப்பத்துடன் செய்வேன். அவ்வாறு செய்யத் தவறினால் அதற்காக என் தலையை அளிக்கிறேன்' என்றான்.

ரிச்சர்டு மன்னரும் பிலிப் அரசரும் இரவு வணக்கம் கூறித் தங்கள் தங்கள் கூடாரங்களை நோக்கிச் சென்றனர்.

அன்று இரவு அந்த முகாமிலிருந்தவர்களில் மிக்க மகிழ்ச்சியாயிருந்தவர் கான்ராடேயாவர். ஏனெனில் அவரது சதித் திட்டம் வெற்றிபெற்றது. இங்கிலாந்திற்கும் ஆஸ்திரியாவுக்கும் இடையிலிருந்த இணைப்பை அவர் தளர்த்திவிட்டார்.

9. சிவப்புக்கல் மோதிரம்

நள்ளிரவு நேரம். வானத்தில் வெண்மதி பால் போன்ற தன் கதிர்களை வீசிக்கொண்டு தலைக்கு நேராக விளங்கியது. கென்னத் வீரன் அம்மணற் குன்றின்மீது ஆங்கில நாட்டுக் கொடியைப் பாதுகாத்துக்கொண்டு அங்குமிங்குமாக நடந்துகொண்டிருந்தான். அப்போது அவனுடன் உற்ற துணையாக இருந்தது அவனது வேட்டை நாயாகிய ராஸ்வல் என்பதுதான். தன் தலைவன் பாது காவலுக்குரிய அரிய பொருள் அங்கிருந்த ஆங்கில நாட்டுக் கொடிதான் என்பதை யறிந்து கொண்டதுபோல அந்நாய் அக்கொடிக்கம் பத்தின் அடியில் படுத்துக்கொண்டிருந்தது.

அவ்வீரனின் உள்ளம் மகிழ்ச்சியான நினைவுகளால் நிரம்பியிருந்தது. அவன் இனியும் பலரில் ஒருவனைப் போலப் பெயர் தெரியாதவன் அல்லன். ரிச்சர்டுப் பேரரசரே அவனது சேவையையும் வீரத்தையும் அறிந்துகொண்டிருந்தார். அதனாலேயே அபாயம் நிறைந்ததாகிய ஆங்கில நாட்டுச் சின்னமாகிய கொடியைப் பாதுகாக்கும் பணியை அவர் அவனிடத்தில் ஒப்படைத்தார். இச்செயல் அவனுக்கும் அவன் காதலியாகிய எடித் சீமாட்டிக்கும் இடையிலிருந்த இடைவெளியை வெகுவாகக் குறைத்துள்ளதாக அவன் கருதினான்.

இத்தகைய இன்ப நினைவுகள், அவன் நாய் திடீரென, கோபத்துடன் குரைத்ததனால் கலைக்கப்

பட்டன. நிழல்களின் இடையில் கூர்ந்து கவனித்து அம்மணற் குன்றை நோக்கி ஒரு குட்டையான உருவம் வருவதை அவன் கண்டான்.

'நில்! வருவது யார்?' என்று கென்னத் கத்தினான்.

அதற்கு அவ்வுருவம், 'நான்தான் நெக்டபானஸ் மன்னன். நான் ஒரு முக்கியமான செய்தியைக் கொண்டு வருகிறேன். முதலில் உனது நாயைக் கட்டிப் போடு. இல்லை எனில் நான் அருகில் வர இயலாது' என்றது.

அக்குள்ளனை எங்காடி மடத்துத் தேவாலயத்தில் தான் சந்தித்தது அவ்வீரனின் நினைவிற்கு வந்தது. எனவே தன் நாயை அவன் பிடித்துக் கொண்டு, 'மேலே வா' என்றான்.

அக்குள்ளன் வீரனுக்கு அருகில் வந்து, 'வீரனே! உன்னை அழைத்தவர்களைக் காணும் பொருட்டு உடனே என்னுடன் வருக' என்றான்.

'நெக்டபானஸ் மன்னரே! என்னை மன்னிப்பீராக. யாருக்காகவும் பொழுது புலரும் வரை நான் இவ்விடத்தைவிட்டு வர இயலாது' என்று கென்னத் கூறினான்.

'ஓ வீரனே! இந்த அடையாளத்தை முதலில் பார்த்துவிட்டுப் பின்னர் நீ வர இயலுமா, இயலாதா என்பதைக் கூறுக' என்று கூறியவனாய் அக்குள்ளன் தான் கொண்டு வந்திருந்த சிவப்புக்கல் பதித்த மோதிரம் ஒன்றைக் கென்னத்திடம் நீட்டினான். அம்மோதிரம் அவ்வீரன் எடித் சீமாட்டியின் கையில் பார்த்த மோதிரமாகும். அதனைத் தன் கையில் வாங்கியபோது அவ்வீரனின்

உள்ளம் மகிழ்ச்சிப் பெருக்கால் துள்ளியது. அவன் செய்யத் தக்கது யாது? தன் கடமையைத் தவறவிட்டுக் காதலியைச் சென்று காண்பதா? அன்றிப் போகாமலே இருப்பதா? அவனுக்குக் கொடுக்கப்பட்டிருந்த அபாயம் நிறைந்த வேலையை அறிந்தும் அவள் அவனை அழைத்து வருமாறு பணித்திருப்பாளா? காதலுக்கும் கடமைக்கும் இடையில் அகப்பட்டுச் செய்வதறியாதவனுய் அவன் அக்குள்ளனை நோக்கி, 'நெக்டபானஸே! நான் மிகவும் அவசரமாக வர வேண்டுமா? என் வருகையைப் பொழுது விடியும் வரைத் தள்ளிப் போடுதலாகாதா?' என்ருன்.

அதற்கு அவன் 'முடியாது. அவள் உன்னை இப்பொழுதே உடனே காண விரும்புகிருள். அவள் கூறிய வார்த்தைகளைக் கேள். அவை ரோஜா மலர்களைச் சிதறிய கரங்கள் அவனுக்கு வெற்றியை விளைவிக்கக் கூடும் என்பதே' என்ருன்.

எனவே கென்னத் உடனே சென்று அவளைக் காணுவதாக முடிவு செய்தான். ஏனெனில் அச்சீமாட்டி யிருந்த கூடாரம் அங்கிருந்து வெகு தொலைவில் இல்லை. அவன் சில நிமிடங்களுக்குள்ளாகவே அங்குச் சென்று திரும்பக் கூடும். அச்சிறு இடைவெளியில் ஒன்றும் நேரிட இயலாது. யாராவது அக்கொடியினருகில் வரின் அவனது நாய் அவனை எச்சரிக்கும். அந்த அளவிற்கு அவன் அதனை நம்பலாம்.

மேற்கூறிய வண்ணம் நினைத்து இறுதியில் செல்வதென முடிவு செய்த கென்னத் என்னும்

வீரன் தன் நாயை அழைத்து, 'ராஸ்வல்! இங்கிருந்து காவல் செய். யாரையும் நெருங்கவிடாதே' என்ருன். பின்னர் அவ்வீரன் குள்ளனை நோக்கி, 'நெக்டபானஸ் அரசே! இப்போது வாரும். நீர் கொண்டுவந்த ஆணைக்கு விரைந்து அடிபணிவோம்' என்ருன்.

ஆயின் நெக்டபானஸ் விரைந்து செல்லும் எண்ணமுடையவனுக இல்லை. மேலும் அவன் தன் நடையின் வேகத்தையும் குறைத்துக் கொண்டான். எனவே பொறுமையற்ற கென்னத்துக்கு ஒரே ஒரு வழிதான் இருந்தது. அதன்படி கென்னத் அக்குள்ளனைத் தூக்கித் தன் தோள்மீது வைத்துக்கொண்டு அவன் எவ்வளவு வேகமாக ஓடக் கூடுமோ அவ்வளவு வேகமாக அரசியார் தங்கியிருந்த கூடாரத்தை நோக்கி விரைந்து ஓடினுன். அவ்விடத்தை அடைந்ததும் அக்குள்ளன் கூடாரத்தினுள் துணிக்கு அடியில் கென்னத்தை ஊர்ந்து செல்லுமாறு செய்தான். பின்னர் தான் திரும்பி வரும் வரையில் கென்னத்தை அங்கேயே காத்திருக்குமாறு கூறிவிட்டுச் சென்ருன்.

கென்னத் தங்கியிருந்த அவ்விடம் ஒரு கூடாரத்தின் பெரியதொரு பகுதியாகும். அங்கு ஒரு தடித்த துணியாலான திரைக்குப் பின்னுல் மங்கிய ஒளியைக் கென்னத் கண்டான். பெண்கள் மகிழ்ச்சியுடன் பேசிக்கொண்டும் சிரித்துக்கொண்டும் இருந்ததனுல் உண்டான ஒலியையும் அவன் கேட்டான்.

ஒரு குரல், 'நெக்டபானஸே! நீ ஒரு அரச தூதுவனாக இருக்கத் தகுதியுடையவன். அவ் வீரனை நீ எவ்வளவு எளிதில் இங்குக் கொண்டு வந்துவிட்டாய்' என்றது. அக்குரல் பெரெங்காரியா என்னும் அரசியின் குரல் என்பதைக் கென்னத் உடனே கண்டு கொண்டான்.

'அவ்வீரன் இங்கு வந்துள்ளதால் அவனை என்ன செய்வது?' என்று அரசியார் கேட்டார்.

உடனே அவளது தோழியர் நகைத்துக் கொண்டே, 'நெக்ட பானஸின் மனைவியை அனுப்பி அவனைப் போகச் சொல்லலாம்' என்றனர்.

ஆயின் அரசியார், 'நம் தங்கை எடித் அவன் இவ்விடத்தை விட்டுப் போவதற்கு முன் அவனைக் காணுமாறு செய்தல் வேண்டும். அவள் அவனைப் பற்றி மிகவும் உயர்ந்த எண்ணங்கொண்டிருக் கிருள். அவன் தன் கடமையில் தவறியுள்ளதை அவள் தன் கண்களாலேயே காணுதல் வேண்டும்' என்ருர்.

அரசியின் இவ்வார்த்தைகள் அவ்வீரனது உள்ளத்தை வருத்தின. அவன் சினமும் அவமதிப்பும் ஒருங்கே கொண்டான். அவனை அங்கு வரச் செய்தவள் அவன் காதலியாகிய எடித் அன்று என்பதை அவன் அறிந்தான். அவனது கடமையிலிருந்து அவனைத் தவறச் செய்தவர்கள் முன் நினைவற்ற இளைய அரசியாரும் அவளது அற்பத் தோழியருமே என்பதையும் அவன் உணர்ந்தான்.

அந்நிலையில் அவன் காதலியாகிய எடித்தே, 'மதிப்பிற்குரிய அரசியாரே! நான் படுக்கச்

சென்றுகொண்டிருந்தேன். ஆனால் தாங்கள் என்னைக் காண விரும்பியதாகக் கேள்விப்பட்டேன்' என்று கூறியதைக் கேட்டான்.

'ஆம்! தங்கையே. நீ உனது பந்தயத்தை இழந்து விட்டாய். உன்னுடைய பெயரையும், ஆழியையும் பயன் படுத்திக் கென்னத் என்னும் வீரனைத் தன் கடமையை மறந்து இவ்விடம் வருமாறு நெக்டபானஸ் என்பவன் செய்துள்ளான்' என்ருர் அரசியார்.

அதனைக் கேட்ட எடித் மிகவுந் தடுமாற்ற முற்ருள். 'பேரரசியே! நான் ஒரு பந்தயமும் கட்டவில்லையே. நீர் என்னிடமிருந்து என் ஆழியைப் பெற்றபோது அதனை இவ்வாறு பயன் படுத்துவீர் என்று நான் சிறிதும் எதிர்பார்க்க வில்லை. உமது இச்செயலால் ஒரு உளஉறுதியுள்ள வீரன் அவமதிப்புக்கும் ஒரு சமயம் தண்டனைக்கும் ஆளாயிருக்கிருன். காலங்கடப்பதற்கு முன்பே அவனைத் திருப்பி அனுப்புமாறு தங்களை வேண்டிக்கொள்கிறேன்' என்ருள்.

'தங்கையே! உனது உண்மையுள்ள வீரனது பாதுகாப்பைக் குறித்து நீ கவலைப் படவேண்டாம். அரச கட்டளையை மீறியதற்காக அளிக்கப்பட வேண்டிய தண்டனையிலிருந்து அவனைக் காப்பதற்கு வேண்டிய செல்வாக்கு அரசரிடம் எனக்குண்டு' என்ருர் அப்பேரரசியார்.

எடித் அவ்வரசியின் பாதங்களைப் பணிந்து 'மேன்மை தங்கிய பேரரசியே! ரிச்சர்டு அரசரைப் பற்றி உமக்கு ஒன்றும்தெரியாது. நீர் அவரை ஆறு மாதங்களுக்கு முன்புதான் திருமணம்

புரிந்துள்ளீர். உம்மிடம் அவருக்குள்ள அன்பின் காரணமாகவும் இராணுவத்தவறினை அவர் மன்னிக்க மாட்டார். அவர் இன்னும் இவ்விடத்தி லிருப்பின் அவரை உடனே அனுப்பிவிடுமாறு கடவுள் பேரால் கேட்டுக் கொள்ளுகிறேன்' என்ருள்.

அதைக்கேட்ட அவ்வரசியார் நெக்டபானஸை நோக்கி 'அவ்வீரன் எங்குள்ளான் ?' என்ருள்.

அவனும் 'பேரரசியாரே! அவன் அந்தத் துணித்திரைக்குப் பின்ஞல் உள்ளான்' என்ருன்.

'நாம் பேசிக்கொள்ளும் ஒவ்வொரு வார்த்தையையும் கேட்கக் கூடிய தூரத்திலா ?' என்று அவ்வரசியார் வியப்பும் வேதனையும் உடையவராய்க் கேட்டார். 'மடச் செயலின் தலைவனே! உடனே வெளியேறு' என்று அவனுக்குக் கட்டளையிட்ட அவ்வரசியார் எடித்தை நோக்கி அவள் காதுகளில் மட்டும் கேட்கும் வண்ணம் 'நாம் இப்போது என்ன செய்யலாம்?' என்ருர்.

எடித் சில அடிகள் முன்நோக்கிச் சென்று மெல்லிய துணியாலான ஒரு திரையை விலக்கினுள். அது விலகியதும் கென்னத் நின்றிருந்த பகுதிக்குச் செல்லும் ஒரு வழி காணப்பட்டது.

எடித் அவ்வீரனைநோக்கி, 'வீரமிக்கவனே! விரைந்து உன் கடமையை ஆற்றச் செல்வாயாக. நீ ஏமாற்றப்பட்டுள்ளாய். வேறு கேள்விகளைக் கேட்காதே ' என்ருள்.

கென்னத் அவள் முன் முழந்தாள்படியிட்டு அவளை வணங்கியவனுய் ' நீ என்னைக் கூப்பிட்டனுப்பினுய் என நினைத்ததற்கு என்னை மன்னிக்குமாறு வேண்டிக்கொள்ளுகிறேன்' என்ருன்.

'நான் உன்னை மன்னிப்பதற்கு ஒன்றுமில்லை. நான் உனக்குத் தீங்கு செய்துவிட்டதாக அஞ்சுகிறேன். உடனே இவ்விடத்தைவிட்டு விரைந்து செல்க ' என்ருள் எடித்.

கென்னத் அவளது ஆழியை அவளிடம் நீட்டினுன். ஆனல் அவள் அதனைப் பெற்றுக் கொள்ளவில்லை. 'அதனை என் மதிப்பின் அறிகுறியாக நீயே வைத்துக்கொள்க. உனக்காக அல்ல எனினும் எனக்காகவாவது விரைந்து செல்க' என்று அம்மாது கூறினுள்.

அக்கூடாரத்தை விட்டுத் தன் கடமையை ஆற்றச் சென்றபோது கென்னத் மிகவும் மகிழ்ச்சியுடையவனுய் இருந்தான். தூயஜியார்ஜ் மேட்டுக்குப் பாதி வழியில் செல்லும்போதே அவனுடைய நாய் கோபத்துடன் குரைக்கும் ஒலியை அவன் கேட்டான். அடுத்தகணம் வலியின் காரணமாக எழுப்பப்படும் ஒலியையும் அவன் செவியுற்ருன். ஒரு மானைக் காட்டிலும் வேகமாக அவ்வீரன் அம்மணற்குன்றை நோக்கிச் சென்ருன். சில விஞடிகளில் அவன் அம்மணற்குன்றின் உச்சியையடைந்தான். எனினும் அவன் அவ்விடத்தைக் காலந்தாழ்த்தியே அடைந்தான் என்பதை அச்சத்துடன் உணர்ந்தான். ஏனெனில் இங்கிலாந்து நாட்டுக் கொடி அங்குக் காணப்படவில்லை. அக்கொடி கட்டப் பட்டிருந்த ஈட்டி உடைக்கப்பட்டுத் தரையின்மீது விழுந்துகிடந்தது. அதற்குப் பக்கத்தில் அவனுடைய தன்றியிக்க நாய் இரத்த வெள்ளத்தில் படுத்துக்கிடந்தது.

10. ஸ்காத்லாந்துப் போர்வீரனும் அரேபிய மருத்துவரும்

அவ்வீரன் முதலில் அச்செயலைச் செய்த ஆளைக் கண்டுபிடிப்பதற்காகச் சுற்று முற்றும் பார்த்தான். ஆயினும் அதற்கான அறிகுறி ஒன்றும் அங்குக் காணப்படவில்லை. பின்னர் அவன் நாயின் அருகில் முழந்தாள்படியிட்டு அமர்ந்து அதன் நிலையை ஆய்ந்தான். நாய் இறந்து கொண்டிருப்பதுபோல் தோன்றியது. அதன் புயத்தில் உடைபட்ட ஈட்டியின் ஒரு துண்டு அப்போதும் பதிந்திருந்தது. அதனைப் பிடுங்கி எடுப்பதற்கு அவ்வீரன் முயன்றான். ஆனால் அச்செய்கை அந்நாயின் துன்பத்தை மிகுதிப்படுத்தியதைக்கண்டு அவ்வாறு செய்வதை அவன் நிறுத்திக்கொண்டான். இறந்து கொண்டிருக்கும் அந்நாயின் துன்பத்தினால் அவன் வாய் விட்டு உரக்க அழுதான்.

எனினும் அவன் அங்கு நெடுநேரம் தனித்து இருக்கவில்லை. அவன் திரும்பிப் பார்த்தபோது அம்மேட்டின்மீது அரேபிய மருத்துவர் அவனருகில் நின்றிருந்ததைக்கண்டு அவ்வீரன் மிகவும் வியப்புற்றான். எதிர்பாராது அவ்விடம் வந்த அம்மருத்துவர் அவ்வீரனை உற்சாகப்படுத்தி அந்நாய்க்குச் சிகிச்சை செய்வதாகக் கூறினார். அந்நாய்க்குச் செய்யும் எவ்வித சிகிச்சையும் பயன் தராது என்று அவ்வீரன் நினைத்த போதிலும் அவன் மருத்துவரின் வேண்டுகோளுக்கிணங்கி

னான். உடனே அம்மருத்துவர் அந்நாயின் உடலில் தைத்திருந்த உடைந்த ஈட்டித்துண்டைப் பிடுங்கி எடுத்து, கட்டுகளைக் கட்டி இரத்தப் போக்கை நிறுத்தினார். பின்னர் அவனுடைய அடிமைகளில் இருவரை அழைத்து தன்னுடைய கூடாரத்திற்கு, அந் நாயைச் சிகிச்சை செய்யும் பொருட்டுத் தூக்கிச் செல்லுமாறு கட்டளையிட்டார்.

அந்நாயைத் தூக்கிச்சென்றபோது அவ்வீரன் அதனைநோக்கி 'எனது கடைசி நண்பனும் ஒரே நண்பனுமாகிய உனக்கு நன்மை உண்டாகுக' என்று அதனை வாழ்த்தியருளினான். பின்னர் அவ்வீரன் அம்மருத்துவரை நோக்கி 'இந்த நாய் பிழைத்துக் கொண்டால் இதனை என்னுடைய இலவசப்பரிசாக நீர் ஏற்றுக்கொள்க. எனக்கு இனி மேல் நாயினாலோ அல்லது குழலினாலோ ஒருவிதப் பயனுமில்லை. இன்று இரவுமுடிவதற்குள் நான் இழிந்த முறையில் இறந்துபடுவேன்' என்றான்.

அரேபியர் அவன் மீது இரக்கங் கொண்டு அவனுடைய துயரங்களைத் தன்னிடம் கூறும்படிக் கேட்டுக்கொண்டார். எனவே கென்னத் சுருக்கமாக அவருக்கு நிகழ்ந்தவைகளைக் கூறி, ரிச்சர்டு அரசரது தண்டனைக்கு அவன் தன்னை ஏன் தயார் செய்து கொள்ளவேண்டும் என்பதையும் விளக்கினான்.

அதைக்கேட்ட அம்மருத்துவர் அவனைநோக்கி 'வீரனே! நீ என் அறிவுரைப்படி நடந்தால்அதற்குத் தேவையேயில்லை. சலாடின் மன்னர் தாராள மனப்பான்மையுடைய பகைவர். அவர் உன்னையும், ரிச்சர்டு அரசரையும் போன்ற வீரர்களை

விரும்புபவர். எனக்கு அவரிடம் செல்வாக்கு உண்டு. நான் உன்னை அவர்பால் அனுப்ப இசைவாயாக. நீ அப்படிச் செய்தால் ரிச்சர்டு அரசரின் தண்டனையிலிருந்து தப்புவதுடன், நல்ல பரிசையும் பெறுவாய். கிறுத்தவ அரசர்கள் ரிச்சர்டு பேரரசரை வெறுப்பதையும், சலாடின் மன்னரோடு போர் நிறுத்த உடன் படிக்கை செய்து கொள்ள விரும்புவதையும் என்னைவிட நீ நன்கு அறிவாய். அந்தச் செய்தியையும் நீயே எங்காடி மடத்துத் துறவியிடம் எடுத்துச் சென்றாய். ஒருவேளை அச்செய்தியின் முழு விவரமும் உனக்குத் தெரியாதிருக்கலாம். எனவே நான் கூறுவதைக் கேட்டு அதனை அறிந்து கொள்க. ரிச்சர்டு அரசரின் துணைவர்களாகிய கிறுத்தவ அரசர்கள் அவரைக் கைவிட்டுச் சலாடின் மன்னருடன் சமாதானம் செய்துகொள்ள விழைகின்றனர். அவர்களில் சிலர் சலாடினுடன் சேர்ந்து கொண்டு ரிச்சர்டு மன்னருக்கு எதிராகப் போரிடவும் விழைகின்றனர். ஆயின் சலாடின் இந்த துரோகிகளுடன் உறவு கொள்ளார். மன்னர் மன்னராகிய அவர், சிங்க அரசராகிய ரிச்சர்டுடனேயே உறவு கொள்வார். ரிச்சர்டு மன்னரின் நிபந்தனைகளுக்கு அவர் தாராளமாக விட்டுக் கொடுத்து இணங்குவார். அவர் கிறுத்தவர்கள் தாராளமாக யாத்திரை செய்வதற்கு அனுமதியளிப்பார். கிறுத்தவப்படைகள் பாலத்தீன நகரில் தங்கியிருக்கவும் இசைவார். மேலும் அப்பேரரசருக்கு எருசலேம் நகரத்தின் பாதுகாவலர் என்னும் பட்டத்தையும் அவர் அளிப்பார். இதற்கு மேலும் அவர் செய்வார். ஏனெனில் ரிச்சர்டு அரசரை

அவர் அந்த அளவுக்கு உயர்வாக மதித்து வியக்கிறார். ரிச்சர்டு அரசரின் குடும்பத்தைச் சேர்ந்த எடித்சீமாட்டி என்னும் பெயரை உடைய கிறுத்தவப் பெண்ணையும் அவர் மணப்பார்' என்றார்.

தான் கேட்ட செய்தியால் அதிர்ச்சியடைந்த வனாய்க் கென்னத் 'நீர் யாது கூறினீர்? அதனை கிறுத்தவன் ஒருவனும் ஏற்றுக்கொள்ளான்' என்றான்.

அம்மருத்துவர் நகைத்துக்கொண்டே 'நீ கூறுவது தவறு. டயர் நகர மடத்துத் தலைவரே இதைக் குறித்து ரிச்சர்டு அரசரிடம் கூறப்போகிறார். மேலும் அச்செயலில் தான் வெற்றியடையக் கூடும் என்றும் அவர் உறுதியாக நம்புகிறார். ஆகையால், வீரனே! எழுந்து குதிரையின் மீது ஏறி, சலாடின் மன்னரிடம் செல்க. நல்ல எதிர்காலம் உனக்குக் காத்திருக்கிறது' என்றார்.

உடனே அவ்வீரன் மருத்துவரை நோக்கி 'கடவுள் அத்தகைய செயலைச் செய்வதினின்றும் என்னைத் தடுத்தாட் கொள்வாராக. இவ்வளவு நேரமும் நீர் கூறியதைப் பொறுமையுடன் நான் கேட்டுக்கொண்டிருந்ததற்குக் காரணம் நீர் என்னுடைய தோழன் உயிரையும், என் தலைவராகிய ரிச்சர்டு அரசரின் உயிரையும் காப்பாற்றியதேயாகும். இதை வேறு யாரேனும் கூறியிருப்பின், இதற்குள் நான் அவனைத் துண்டு துண்டாக என் உடைவாளால் வெட்டி எறிந்திருப்பேன். நீர் உம்முடைய வேலையைப் பார்த்துக் கொண்டுபோம். நான் இறப்பதற்கு என்னைத் தயாரித்துக்கொள்ள வேண்டும்' என்றான்.

அதனைக்கேட்ட மருத்துவர் மெதுவாக அம் மேட்டினின்றும் நடந்து சென்றார். தான் கேட்ட விநோதச்செய்திகளைப் பற்றி நினைத்துக்கொண்டே கென்னத் அமர்ந்திருந்தான். அவன் காதலியாகிய எடித் கோமாட்டிக்கு விரோதமாகச் செய்யப்பட்ட சதிச் செயலை நினைத்தபோது அவன் குருதி கொதித்தது. அதைத் தடுக்க அவன் ஏதேனும் செய்தல் வேண்டும். அவன் குதித்தெழுந்து தன் கவசத்தை வீசி எறிந்து ரிச்சர்டு அரசரின் கூடாரத்தை நோக்கி நடந்தான்.

11. தீர்ப்பு

அவ்வீரன் அவ்விடத்தைப் பொழுது புலரும் நேரத்தில் சென்றடைந்தான். ரிச்சர்டு மன்னர் அப்பொழுதும் உறங்கிக்கொண்டிருந்தார். அவரது நம்பிக்கைக்குரிய தாமஸும் அவர் படுக்கைக் கருகில் உறங்கிக் கொண்டிருந்தான். கென்னத் அரசரது படுக்கை யறைக்குள் மெதுவாக நடந்து நுழைந்தான். அவன் நடையில் துயரம் கலந்திருந்தது. எப்பொழுதும் தூக்கத்தில் மென்மையான வனுகிய தாமஸ் விழித்தெழுந்து அவ்வீரனை அவனுடைய மன உறுதிக்காகக் கடிந்து கொண்டான். அவ்வீரன் மறுமொழி கூறுவதற்கு முன்னுலேயே ரிச்சர்டு அரசரும் விழித்துக்கொண்டு எழுந்து படுக்கையில் அமர்ந்தவராய் ' ஸ்காத்லாந்து வீரனே! பேசுக. நீ ஒரு நல்ல போர்வீரன் செய்வதைப்போல மதிப்புடனும், பாதுகாவலுடனும் காவல் புரிந்துள்ள செய்தியைக்கூற வந்திருக்கிறாய் என்பதற்கு ஐயமில்லை' என்றார்.

அவமானத்தால் தன் தலையைக் கவிழ்த்தவாறே அவ்வீரன் ' ஆங்கில நாட்டுக்கொடி எடுத்துச் செல்லப்பட்டது' என்றான்.

'என்ன! இதைச் சொல்வதற்காகவா நீ இன்னும் உயிருடன் இருக்கிறாய்? அவ்வாறிருக்க முடியாது. நீ மன உறுதியுடையவன் என்பதை யான் அறிவேன். உன் முகத்தில் ஒரு கீறலும் இல்லை. நீ சொல்வது உண்மையாய் இருக்க முடியாது' என்று ரிச்சர்டு அரசர் இரைந்தார்.

'நான் உண்மையைத்தான் கூறியுள்ளேன். தலைவரே' என்று கென்னத் வீரன் மீண்டும் கூறினன்.

அரசரோ அப்போதும் அவன் கூறிய செய்தியை நம்பவில்லை. ஆனல் அவ்வேளையில் அங்கு வந்த மற்றொரு பிரபு உண்மையில் ஆங்கில நாட்டுக்கொடி அகற்றப்பட்டுள்ள தெனவும் அவ்விடத்தில் செந்நீர், குளம்போல் ஊறிக்கிடந்தது எனவும் கூறினர்.

அரசர் மகிழ்ச்சியுற்றவராய் 'ஆ! நீ அக்கொடியைப் பாதுகாத்துள்ளாய். கள்வர்களில் எத்தனை பேர்களைக் கொன்ருய் என்பதைக் கூறுக' என்ருர்.

'என் தலைவரே! நான் ஒருவரையும் கொல்லவில்லை. அங்கே காணப்படும் செந்நீர்,கொடியைப் பாதுகாக்க முயன்ற என் நாய் சிந்தியது. அது தன் கடமையில் தனது தலைவனைக் காட்டிலும் அதிக உண்மையுடன் நடந்து கொண்டது' என்று கென்னத் கூறினன்.

'துரோகி' என்று கத்திக்கொண்டே அவ்வரசர் தனது கனமான போர்ப் பரசை அவ்வீரனை அடித்துக் கொல்லும் பொருட்டு உயர்த்தினர். ஆனல் கென்னத் உறுதியாகவும் அச்சமில்லாமலும் நின்றிருந்தான். அவன் முகத்திலிருந்த ஒரு தசைகூட அப்போது அசையவில்லை. அவனுடைய வியக்கத்தக்க மன உறுதியைக்கண்டு அவ்வரசரே திடுக்கிட்டார். தன்பரசைத் தாழ்த்தியவராய் அவர், 'பயமற்றவனையும் தன்னைப் பாதுகாத்துக்கொள்ள முயற்சி செய்யாதவனையும் என்னல் கொல்ல இயலாது' என்ருர்.

கென்னத் அவ்வரசரைப் பார்த்து 'என் தலைவரே! நான் தங்களிடம் கருணையை இரக்க வரவில்லை. ஆனல் தங்கள் அரசகுடும்பத்திற்கு எதிராகச் செய்யப்படும் சதியைப் பற்றிக் கூறவே வந்தேன்' என்ருன்.

'சரி. மேலே சொல்' என்ருர் ரிச்சர்டு.

ஸ்காத்லாந்து வீரன் மேலும் கூறத் தொடங்கியவனுய் 'என் தலைவரே! தங்கள் உயர்ந்த குடும்பத்திற்கு இழுக்குண்டாக்க ஒரு சதி நடக்கிறது. சிலுவைப்போரில் பங்கு கொண்டவர்களில் சிலர் தங்கள் உறவினளாகிய எடித் சீமாட்டியைச் சலாடின் மன்னருக்கு மணம் செய்வித்து பெருமைக்கு இழுக்கான முறையில் சமாதானத்தைப் பெற ஏற்பாடுகள் செய்து வருகிருர்கள்' என்ருன்.

இச்செய்தியைக் கேட்ட உடனே அவ்வரசர் திகைத்துப்போவார் என்று கென்னத் நினைத்தான். ஆனல் அவனுடைய வார்த்தைகள் அதற்கு முற்றிலும் மாருன பயனையே விளைவித்தன. நமக்கு முன்னரே தெரிந்துள்ளபடி ரிச்சர்டு அரசர் அவ்வீரன் எடித்தைக் காதலிக்கிருன் என்று ஐயுற்ருர். அவனுடைய மன உறுதியைப் பாராட்டினலும் அவர் அவனது செயலைக் குறித்து முன்னரே ஒருமுறை அவனை எச்சரித்து மிருக்கிருர். இப்போது அவன் தன் கடமையிலிருந்து தவறி அவமதிப்படைந்திருக்கிருன். எனவே அத்தகைய தகுதியற்ற ஒருவன் தன் உறவினளான ஒருத்தியின் பெயரைக் கூறக்கேட்டதும் ரிச்சர்டு மன்னர் மிகுந்த சினமுற்ருர்.

'வாயை மூடு. எமது உறவினளாகிய அச் சீமாட்டியின் பெயரைச்சொல்லஉனக்கு எவ்வளவு உள்ள உறுதியிருக்கவேண்டும். அவள் ஒரு கிறுத் தவனையோ அன்றி பிறமதத்தானையோ மணப் பதைக்குறித்து உனக்கு ஆக வேண்டுவது யாது?' என்று ரிச்சர்டு மன்னர் கத்தினர்.

சினமுற்ற அவர் தன் போர்ப்பரசை மீண்டும் ஒருமுறை உயர்த்தினர். ஆயின் கென்னத்தின் அமைதியும், உளவலிமையும் அந்த நினைவை மீண்டும் அழித்துவிட்டன.

அச்சமயத்தில் ஒருபணியாள் வந்து அரசியார் வந்திருப்பதாக அவருக்குத் தெரிவித்தான். அவ்வ ளவு காலையில் அரசியின் இந்த எதிர்பாராத வருகை அவருக்கு வியப்பை உண்டாக்கியது. அவர்தன் உடைகளை அணிந்துகொண்டு அரசி யை வரவேற்கத் தன்னை ஒழுங்கு படுத்திக் கொள்ளும்வரை அரசியைத்தாமதிக்கச் செய்தார். பின்னர் தாமஸை நோக்கி அவ்வரசர் அவ்வீரனைப் பின்புறக் கதவின் வழியாக வெளியே அழைத்துச் சென்று காவலில் வைக்குமாறு தாழ்ந்த குரலில் கட்டளை யிட்டார். ஒரு பாதிரியாரைப்பார்த்து தன் வழிபாடுகளை முடித்த உடனேயே அவ்வீர னைக் கொன்று போடுமாறு அவர் ஆணையிட்டார்.

தாமஸ் அவ்வீரனை அரசரிடமிருந்து வெளியே கொண்டுவருவதில் மகிழ்ச்சியடைந்தான். அவ னுக்கு ஸ்காத்லாந்திய சமுதாயத்தின் மீது பொதுவாக வெறுப்பிருப்பினும், கென்னத்திடம் அனுதாபமே ஏற்பட்டிருந்தது; முந்தின இரவில் நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றிய முழுத்

தகவலையும் அவ்வீரன் கூறவில்லை என்பதைத் தாமஸ் நன்கு உணர்ந்து கொண்டான். எனவே அவர்களிருவரும் தனித்திருக்கையில் தாமஸ் அவ் வீரனை நோக்கி உண்மையைக் கூறுமாறு கேட் டுக்கொண்டான். அப்படிச் செய்தால் தாமஸ் அரசரிடம் சென்று அவ்வீரனுக்குக் கருணைகாட்டு மாறு அவரை வேண்டிக்கொள்ள இயலும். ஆனால் தீவினை மிகுந்திருந்த அவ்வீரனே அரசரிடம் கூறியதையே மீண்டும் மீண்டுங் கூறினன். எனவே தாமஸ் துயரத்துடனும் வேதனையுடனும் அரசரின் இருப்பிடத்திற்குத் திரும்பி வந்தான்.

12. பெரெங்கேரியா அரசியார்

பெரெங்கேரியா அரசியார், நவாரே மன்னரது மகனாவார். அக்காலத்தில் வாழ்ந்திருந்த பேர் அழகிகளில் அவரும் ஒருவராகக் கருதப்பட்டார். அவர் இருபத்து ஒரு வயதுடைய வாலிபப்பருவத்தினளே எனினும், அதற்கும் இளையவளாகவே காணப்பட்டார். அவர் மற்றவர்க்குத் துன்பந் தரும் வேடிக்கைகளிலும், கேளிக்கைகளிலும் பெரு விருப்புடையவர். அவர் தமது கணவரை மிகவும் நேசித்தனரெனினும், அவரது முரட்டுத்தனத்திற்கு அஞ்சினர். எனினும் அம்மாதரசி ரிச்சர்டு பேரரசர் கடுமையாயிருந்த காலத்திலும் அவரைத் தம் விருப்பப்படி மாற்றக்கூடும் என்ற உறுதியுடையவராயிருந்தார். ஆகையால்தான் அந்த ஸ்காத்லாந்து வீரனை ஏமாற்றியதால் ஏற்படக்கூடிய விளைவுகளைக் குறித்து அவர் கவலைப் படவில்லை. அவ்வீரனுக்குத் தன் செயலால் ஒருவிதத் துன்பமும் நேரிடாது என்ற துணிவுடனேயே அவர் அன்று இரவு உறங்கச் சென்றார்.

ஆயின் மறுநாள் வைகறையில் எடித்சீமாட்டி அவரது அறைக்குள் துயரம் நிறைந்த முகத்துடன் நுழைந்தாள். கொடி காணமல் போய்விட்டது என்ற செய்தியும், அவ்வீரன் எங்கும் காணப்படவில்லை என்ற செய்தியும் அவளுக்கு எட்டின. அச்செய்திகளை அவள் அரசியாருக்கு அறிவித்து அவ்வீரனைக் காக்கும் பொருட்டு அவரை உடனே

அரசரிடம் செல்லும்படித் தூண்டினள். எதிர்பாராத இந்நிகழ்ச்சிகளால் பெரெங்கேரியா அரசியார் மிகவும் பயந்துபோனர். அவரது முன் நினைவற்ற செயல்களால் அவ்வீரனுக்குத் துன்ப முண்டாக்கிய செய்தியை அவ்வரசருக்குக் கூற அவ்வரசியார் அஞ்சினர். எனவே அவ்வீரனுக்கு ஒரு விதத் துன்பமும் ஏற்படாது என்று கூறித் தம்மையும் எடித் சீமாட்டியையும் ஏமாற்றிக் கொள்ள அவ்வரசியார் முயன்ரர். இவ்வாறு அவர் கூறிக் கொண்டிருக்கும்போது அவ்வீரனுக்கு மரண தண்டனை அளிக்கப்பட்ட செய்தி அவருக்குக் கிடைத்தது. ஆகையால் அரசியார் உடனே சென்று அரசரைக் காணவேண்டுமென எடித் வற்புறுத்தினள். ஆயினும் பெரெங்கேரியா அரசியாருக்கு அரசர் விரும்பாத செயலில் தான் ஈடுபட்டால் அதன் விளைவு யாதாயிருக்கு மென்பது தெரியாதன்று. எனவே அவ்வாறு செய்வதைத் தடுப்பதற்காக அவர் சாக்குப் போக்குகளை ஒன்றன்பின் ஒன்ருகக் கூறத் தொடங்கினர். எனவே எடித் சீமாட்டி அவளது பொறுமையை முற்றிலும் இழந்துபோனள். உடனே அரசியார் சென்று அவ்வீரனைக் காவாவிடின் தானே அரசரிடம் சென்று நிகழ்ந்ததனைத்தையும் அவருக்குக் கூறி நீதி வழங்குமாறு வேண்டப்போவதாக அரசியாரை அச்சுறுத்தினள். அதன்பிறகே அரசியார் நல்லுணர்வு பெற்று எடித் சீமாட்டியும், பிறபெண்களும் தம்மைச் சூழ்ந்துவர அரசர் இருந்த இடத்திற்கு விரைந்து சென்ரர்.

அரசியாரும், பிறபெண்களும் அரசரது கூடாரத்தை அடைந்தபோது வெளியிலிருந்தவாறே அரசர் யாருடனோ பேசிக்கொண்டிருப்பதைக் கேட்டனர். அவருடைய வார்த்தைகளிலிருந்து அரசர், கென்னத் வீரனைக் கொலை செய்யுமாறு கொலையாளிகளுக்குக் கட்டளை யிட்டுக்கொண்டிருந்தது தெரிந்தது. எடித் சீமாட்டி அவ்வார்த்தைகளை அதற்கு மேலும் கேட்டுப் பொறுக்க இயலாதவளானாள். எனவே அவள் வழிமறித்து நின்ற ஆளைப் பிடித்து, அப்பால் தள்ளி, அரசியாருடன் உள்ளே நுழைந்தாள். இங்ஙனம் அரசியாரும் எடித் சீமாட்டியும் திடீரென்று உள்ளே நுழைந்தது அரசருக்குப் பிடிக்கவில்லை. ஆனால் பெரெங்கேரியா அரசிக்கு அரசரை மகிழச் செய்யும் வழி தெரியும். எனவே அவர் அரசரது படுக்கையிடம் விரைந்து சென்று முழங்காற்படியிட்டமர்ந்து அரசருடைய கைகளைத் தன் கைகளால் பிடித்துக் கொண்டார். மிகவும் வருத்தந் தோய்ந்த பார்வையுடன் அவரை நோக்கி அரசியார் கூறுவாரானார்.

'எனது பெருமை மிக்க தலைவரே! என்னை மன்னித்தருள்க' என்றார் அரசியார்.

'எதற்காக மன்னிப்பது?' என்றார் அரசர்.

'இம்மகிழ்ச்சியற்ற ஸ்காத்லாந்து போர்வீரனுக்காக மன்னியுங்கள்' என்றார் அரசியார்.

'அவனைப் பற்றிப் பேசாதே. அவன் இறக்கிறான். அவன் முடிவு தீர்மானம்ஆன ஒன்று. என்னுடைய கடமையில் தலையிடுவது குறித்து நீ

எச்சரிக்கையாக இருப்பது நலம்' என்று அவர் கடுமையான குரலில் கூறினார்.

பெரெங்கேரியா அரசியார் தனது தோல்வியை ஏற்றுக்கொண்டவராய்த் தன் முயற்சிகளைக் கைவிட்டார். ஆயின் எடித் சீமாட்டி தன்னிடத்தினின்று சிறிது முன்னேறி, 'என் தலைவரே! உமது உறவினளாகிய யான் தங்களிடமிருந்து கருணையையன்று, நீதியை இரக்கிறேன். நீர் மரணதண்டனை விதித்துள்ள அவ்வீரன் கோழையோ அல்லது துரோகியோ அல்லன். என் பெயரால் அனுப்பப்பட்ட ஒரு செய்தியினால் தன் கடமையில் தவறுமாறு ஏமாற்றப்பட்டான்' என்றாள்.

'ஆயின் தங்கையே நீ அவனைக் கண்டாயா?' என்று அரசர் தன் சினத்தை அடக்க முயன்றவராய்க் கேட்டார்.

'ஆம், தலைவரே! நான் அவ்வாறே செய்தேன். ஏன் அப்படிச் செய்தேன் என்று விளக்குவதற்கு இது ஏற்ற வேளையன்று. ஆயின் நான் அவரை அரசியாருடைய கூடாரத்தில் கண்டேன். என்பெருமை குறைவுபடாததற்கு அரசியே சான்றாவர். எனவே வன்மையான சோதனை காரணமாக நிகழ்ந்த குற்றத்தை மன்னித்து வீரனாகிய அந்த ஸ்காத்லாந்து வீரனுக்குக் கருணை புரியுமாறு வேண்டிக் கொள்கிறேன்' என்றாள் அச்சீமாட்டி.

அதைக்கேட்ட ரிச்சர்டு அரசர் வெறுப்புடன் 'நீ எடித் பிளாண்டாஜெனெட் போன்று பேசாமல், காதல் நோயுற்ற ஒருத்தி தன் காதலன் உயிருக்குப் பரிந்து பேசுவதுபோலப் பேசுகிறாயே' என்றார்.

'நீரே இப்போது கூறிவிட்டதுபோல அவர் உண்மையில் என்னுடைய உண்மைக் காதலரே யாவர். ஆயின் அவர் என்னிடமிருந்து ஒரு தயவையும் நாடியதில்லை. பக்தர்கள், அவர்கள் மதத் தலைவர்களை வழிபடுவது போன்று அவர் என்னைத் தூரத்திலிருந்தவாறே பூசித்து வந்தார். எங்கள் தகுதியில் மிகுந்த ஏற்றத்தாழ்வு இருப்ப தால், தாங்கள் எங்கள் வாழ்நாளில் எப்பொழுதும் ஒன்றுபடுதல் இயலாதாயினும் மரணம் உயர்வை யும், தாழ்வையும் ஒன்றாக இணைக்கும்' என்று எடித் சீமாட்டி கூறினாள்.

எடித்தின் இத்தகைய தைரியமுடைய பேச் சைக் கேட்டு ரிச்சர்டு அரசரே ஒருகணம் திகைத் துப்போனார். அவர் அவளுக்குச் சினத்துடன் மறு மொழி கூறத் தொடங்கியபோது, ஒரு மடத்தைச் சேர்ந்த துறவியொருவர் திடுமென அவ்விடத்திற்கு வந்தபடியால் அவர் பேச்சுத் தடைபட்டது. அப் போது வந்த அத்துறவியார் அரசர் முன்பு முழந் தாள் படியிட்டு வணங்கி, அந்த ஸ்காத்லாந்து வீரனுக்கு அளிக்கப்பட்ட மரணதண்டனையை, நிறைவேற்றாது நிறுத்தி வைக்குமாறு அரசரை வேண்டிக்கொண்டார்.

'என்னுடைய வாளும் செங்கோலும் சான்றாக என்னைப் பித்தனாக்க ஒரு சதி நடக்கிறது! முட் டாள்களும், பெண்களும், துறவிகளும் என் வேலை யில் ஒவ்வொரு நிலையிலும் குறுக்கிடுகின்றனர்' என்று அவ்வரசர் கத்தினார்.

தலைவரே! நான் சிறிது நேரத்திற்கு முன்னர் தான் மரணதண்டனை விதிக்கப்பெற்ற வீரனது வாய்மொழிகளைக் கேட்டேன். நான் யாருக்கும்

கூற இயலாத ஒரு இரகசியத்தை அவன் எனக் குக் கூறினான். ஆயின் நீர் அவனுக்கு அளித் துள்ள தண்டனையை நிறைவேற்றாமல் அது நிறுத்த வல்லது' என்றார் அத்துறவி.

'நல்லது தந்தையே! அந்த இரகசியத்தை நீர் எனக்குக் கூறின் பின்னர் செய்யத்தக்க சிறந்த செயல் யாது என்பதை நான் சிந்திப் பேன்' என்று ரிச்சர்டு வேந்தர் இயம்பினார்.

உடனே அத்துறவி தன் மேலங்கியை அகற்றி னார். உடனே அவர்தான் எங்காடி மடத்துத் தலைவர் என்பதை அரசர் கண்டார். பின்னர் அத்துறவி அரசரை நோக்கி, 'தலைவ! நான் இரு பது ஆண்டுகாலம் தவம் செய்தேன். எனக்கு வாழ்க்கையில் ஒருவிதப் பற்றுமில்லை. நான் ஒரு பொய்யையோ அன்றி மரணமடைவோர் கூறும் செய்தியையோ அரசரிடத்திலுங் கூடச் சொல்லு வேன் என்று நினைக்கிறீர்களா?' என்று வினவி னார்.

அத்துறவியின் வார்த்தைகளும் அவ்வரசரது மன உறுதியைத் தளர்த்தக் கூடவில்லை. அவ் வீரன் தண்டனையை மாற்ற விரும்பும் எவ்வித வேண்டுகோளுக்கோ, நிர்பந்தங்களுக்கோ இணங்குவதில்லை என்று அவர் முடிவு செய்திருந் தார்.

'வெளியே செல்! வெளியே செல்! ஆங்கில நாட்டுக்கொடிக்கு இழைக்கப்பட்ட அவமதிப்பு பழிவாங்கப் படாமல் இன்னும் உள்ளது. தூய ஜியார்ஜின் மீது நான் ஆணையிடுகிறேன்.' என்று அவ்வரசர் கூறுகையில், 'வேண்டாம். அவ்வாறு

ஆணையிடவேண்டாம் என்று கூறும் ஒருகுரல் அவர் வார்த்தையை இடைமறித்தது. அவ்வாறு கூறியது அப்போதுதான் கூடாரத்திற்குள் வந்து கொண்டிருந்த அரேபிய மருத்துவருடைய குரலே யாகும்.

அரசர் அம்மருத்துவரை வியப்புடன் நோக்கினார். பின்னர் தன்னைச் சரிப்படுத்திக் கொண்டவராய் அவர் பெரெங்கேரியா அரசியாரைநோக்கி, அவரது கணவரின் உயிரைக் காப்பாற்றியதற்காக அம் மருத்துவருக்கு நன்றி தெரிவிக்குமாறு கூறினார்.

ஆயின் அம்மருத்துவர் தன்தலையை வணங்கி 'அழகை வெளிப் படுத்தாமலிருப்பது எனக்கு ஏற்றதன்று. நான் தனிமையில் தங்களுக்கு ஒரு அவசரச் செய்தியைக் கூறவேண்டும்' என்றார்.

'பெரெங்கேரியா அரசியே! வெளியேபோ. எடித் சீமாட்டியே நீயுந்தான். அவ்வீரன் நண்பகலுக்கு முன்னர் இறவான். இவ்வளவுதான் நான் செய்யக் கூடிய உதவி' என்று கூறிய ரிச்சர்டு மன்னர் அரேபிய மருத்துவர் நீங்கலாக மற்ற யாவரும் அவ்விடத்தை விட்டு உடனே நீங்கும் வண்ணம் கடுமையான குரலில் கூறினார்.

13. மருத்துவரின் பரிசு

அரேபிய மருத்துவருடன் தான் தனித்திருந்தபோது, ரிச்சர்டு மன்னர் அம் மருத்துவரை நோக்கி, 'நாம் உமக்குச் செய்யக் கூடிய உதவி யாது?' எனக் கேட்டார். 'பேரரசே! மரணமடைபவர்களுக்கு ஏற்படக் கூடிய நோயினின்றும் உங்களைக் குணப்படுத்தும் ஒரு கருவியாக நான் இருந்துள்ளேன். எனவே நீரும் ஓர் உயிரைக் காப்பாற்றும் கடமையை உடையவராவீர். இதனைத் தாங்கள் எனக்குச் செய்யவேண்டாம். என்னுள் இருந்து என்னை நடத்துகின்ற அச்சத்திக்குச் செய்யுங்கள்' என்று அம்மருத்துவர் கூறினார்.

'நீர் காப்பாற்றிய உயிருக்குப் பதிலாக மற்றொரு உயிரை நீர் விரும்புகிறீர் என எண்ணுகிறோம்' என்றார் ரிச்சர்டு மன்னர்.

'ஆம் அரசே! நான் இந்த நல்ல வீரனின் உயிரைக் காப்பாற்றுமாறு வேண்டிக் கொள்ளுகிறேன். அவன் இழைத்த ஒரே தவறு அவன் ஒரு பெண்ணால் ஏமாற்றப் பட்டதேயாகும்' என்றார் அம்மருத்துவர்.

'நீருமா! மருத்துவரே!! என்ன இக்கட்டான நிலை; நியாயப்படி மரணதண்டனை அளிக்கப் பட்டவனோ ஒருவன். அரசனாகிய எனக்கு அவ் வீரன்மீது ஒருவித அதிகாரமும் இல்லாதது போலக் காணப்படுகிறது. மனைவி, உறவினள், துறவி, மருத்துவர் முதலியோர் அவனுக்காக

வேண்டிக்கொள்ள ஒருவர்பின் ஒருவராக மாறி மாறி வருகின்றனர். இது ஒரு தேவதையின் கதையைப் போலவே செல்கிறது ' என்று சொல்லி வாய் விட்டுச் சிரித்தார். எப்பொழுதுமே நிலைத்து வெகு நேரம் ஒரேவிதமாக நிற்காத அவருடைய மனோநிலை மாறத் தொடங்கியது.

இதைக்கண்ட மருத்துவர் ' நான் உம்முடைய வேண்டுகோளுக்கிணங்கி யிருக்கிறேன்' என்று கூறுமாறு அரசரை வற்புறுத்தத் தொடங்கினார்.

' நீர் ஆயிரம் கைதிகளின் உயிரைக் கேளும். இக்கணமே நான் அவர்களை விடுதலை செய்கிறேன். ஆயின் இவனது வாழ்நாள் முடிந்த விட்ட ஒன்று ' என ரிச்சர்டு அரசர் கூறினார்.

' நம்முடைய வாழ்வும் அத்தகையதே. கடவுள் நம்மிடம் கருணையுடையவராக இருப்பது போலவே, ஓர் அரசரும் கருணையுடையவராக இருத்தல் வேண்டும். மேலும் நான் எனக்காக எந்த தயவையும் விரும்பவில்லை. இவ்வீரனின் உயிரைச் சார்ந்து பல உயிர்கள் உள்ளன ' என்றார் அம்மருத்துவர்.

' அது எப்படி?' என்றார் ரிச்சர்டு மன்னர்.

' பேரரசரே ! கேட்பீராக. நான் உமக்குக் கொடுத்த மருந்து ஒரு மாயசக்தி உடையது. நான் அதை ஒரு கோப்பைநீரில் குறிப்பிட்டநேரம் வரை தோய்த்து வைத்திருப்பேன். பின்னர் தகுந்த நேரத்தை யறிந்து அதனை நான் நோயாளிக்குக் கொடுப்பேன். அம் மருந்து தன் பண்பை நிலையாகப் பெற்றிருக்கப் பல நிபந்தனைகள் நிறை வேற்றப்படவேண்டும்.

அவற்றுள் ஒன்று அம்மருந்தைப் பயன்படுத்துபவர் ஒவ்வொரு மாதமும் பன்னிரண்டு உயிர்களைக் காப்பாற்ற வேண்டும் என்பதே. அந்த எண்ணிக்கையை நிறைவுபடுத்த நான் இன்னும் ஒரு உயிரைக் காப்பாற்ற வேண்டும்' என்று அம்மருத்துவர் கூறினார்.

ரிச்சர்டு அரசர் அவர் வார்த்தைகளை நம்பவில்லை. ' ஒரு குற்றவாளியின் உயிரைக் காப்பதனால் உமது அதிசய மருந்தின் ஆற்றல் எங்ஙனம் அதிகமாகும் என்பது எனக்கு விளங்க வில்லை ' என்றார்.

அவ்வரசரது நம்பிக்கையின்மை அம்மருத்துவருக்குத் துயரத்தை அளித்தது. எனவே அவர் உடனே தன் இடத்திலிருந்து எழுந்து, தன் பணிவான இயல்பை விடுத்தவராய், அதிகாரத் தொனியில் ' பேரரசராகிய ரிச்சர்டு தன் உயிரைக் காப்பாற்றியவருக்குப் பரிசளிக்கும் முறை இதுதானோ? இதனை நான் ஆசியாவிலும், ஐரோப்பாவிலுமுள்ள ஒவ்வொரு அரச சபையிலும் விளம்பரப் படுத்துகிறேன். எங்கெல்லாம் உமது வீரச்செயல்களைக் குறிக்கும் பாடல்கள் பாடப்படுகின்றனவோ, அங்கெல்லாம் ரிச்சர்டு அரசர் கொடியவரும், வள்ளல் தன்மையற்றவரும் என்பது அறிவிக்கப் படும் ' என்றார்.

ரிச்சர்டு மன்னர் சினத்தால் குதித்தெழுந்து, அவரது வாளின்மீது கையை வைத்தார். ஆயின் அம்மருத்துவரின் அஞ்சாத்தன்மை அவரைத் தயங்கச் செய்தது. அவ்வரேபியர் கூறிய வார்த்தைகளை அவர் சிறிது நேரம் சிந்தித்தார்.

பின்னர் அவர் அவசரமாகச் சிலவரிகளை கிறுக்கி அதனை அம்மருத்துவரிடம் கொடுத்து 'நீர் கேட்ட வரத்தைப் பெற்றுக்கொள்ளும். நீர் அவனை அழைத்துச் சென்று உம்முடைய அடிமையாகப் பயன்படுத்திக்கொள்ளும். ஆனால் அவனை எப்பொழுதும் இங்கு வரவிடாதீர்' என்று கூறினார்.

அம்மருத்துவர் மீண்டும் தன்னுடைய பணிவான இயல்புடன் அக்கடிதத்தை அவ்வரசரிடமிருந்து வாங்கிக் கொண்டார். தன்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக் கொண்டு அவ்விடத்திலிருந்து விரைந்து சென்றார்.

14. அரசர்களின் ஆலோசனைச் சபை

அம்மருத்துவர் அவ்விடத்தை விட்டுச் சென்றபிறகு டயர் நகரத்துப் பாதிரியார் சிலுவைப் போரில் ஈடுபட்ட வீரர்களின் தலைவர்களது இரகசியக் கூட்டத்திற்கு ரிச்சர்டு பேரரசரை அழைப்பதற்காக அங்கு வந்தார். அவர் கொண்டு வந்த செய்தி துயரம் நிறைந்ததாக இருந்தது. பிரான்சு மன்னர் தலைமையில் ஐரோப்பிய மன்னர்கள் புனிதச் சிலுவைப் போரைக் கைவிட்டுத் தங்கள் நாடுகளுக்குத் திரும்பிச் செல்ல முடிவு செய்திருந்தனர். அந்நிலையில் சலாடின் மன்னர் தம் படைகளையெல்லாம் போருக்குத் திரட்டிக்கொண்டிருந்தார். ரிச்சர்டு அரசர்மட்டும் அவருடைய வீரர்களுடன் பகைவனை எதிர்க்கத் தனியாக விடப்படுவார். அப்போரின் முடிவைக் குறித்து ஐயம் கொள்ள வேண்டுவதில்லை என்று கூறிய அப்பாதிரியார் ரிச்சர்டு அரசரைச் சமாதான உடன்படிக்கையை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டிக் கொண்டார்.

'எவ்விதமான உடன்படிக்கை?' என்று அவ்வரசர் கேட்டார்.

'நாம் எதிர்பார்க்கக் கூடிய மிகச் சிறந்த உடன்படிக்கை தான். சலாடின் மன்னர் உம்மை மிகவும் மதிக்கிறார். எனவே அவர் மிகவும் நியாயமான நிபந்தனையையே விதிக்க விழைகிறார். அவர் நமது புனிதத் தலத்தை நமக்குத் திருப்பித் தரவும், அவர் நாட்டில் பல இடங்களில் வன்மை வாய்ந்த நமது படைவீரர்கள் தங்கும்

கோட்டைகள் கட்டிக்கொள்ளவும், அவற்றிற்கு மேலாக உம்மை எருசலேம் நகர ஆலயக் காவலராக நியமித்து அந்நகரின் பாதுகாப்பைப் பலப்படுத்தவும் இசைகிறுர்' என்ருர் அப்பாதிரியார்.

'எப்படி! நான் அப்புனித நகரின் அரசகாவலன். இது போர் செய்யாமலே நமக்குக்கிடைக்கும் மிகப்பெரிய வெற்றியாகும். எனினும் சலாடின் மன்னர் எருசலேம் நகரத்தின் மீது தனக்குள்ள அதிகாரத்தைத் தன்னிடம் வைத்துக் கொள்ளவே விரும்புவார் அன்ருே?' என்ருர் ரிச்சர்டு மன்னர்.

'ஆம், தங்களுடைய நண்பராகவும், கூட்டு அரசர்களாகவும், மேலும் நான் சொல்ல அனுமதிக்கப்பட்டால், திருமணத்திற்கு தாங்கள் இசைந்தால்; தங்கள் உறவினராகவும்!' என்ருர் அப்பாதிரியார்.

'திருமணத்தாலா!' என்று வியப்புற்றவராக ரிச்சர்டு வினவினுர். ஆயின் அப்பாதிரியார் எதிர் பார்த்த அளவிற்கு அவ்வரசர் வியப்புறவில்லை. 'ஆ! ஆம், எடித் பிளாண்டாஜெனட். நான் இதைப்பற்றிக் கனவு காண்கிறேனு, அல்லது இதைப்பற்றி யாராவது எனக்குக் கூறினுர்களா? அப்படிக்கூறியவர் ஸ்காத்லாந்தியனு?' எங்காடித் துறவியா? அன்றி அரேபியமருத்துவரா? எனக்கு நினைவில்லை' என்று அம்மன்னர் நினைத்தார்.

'அநேகமாகத் துறவியாகத் தான் இருக்கும்.' ஏனென்ருல் இப்புனிதப் பணியில் அவர்தான் மிகவும் முயன்று வந்துள்ளார். கிறுத்தவத் தலைவர்களிடையில் மிகுந்த மனத்தாங்கல் நிலவுவதையும், அது புனிதச் சிலுவைப் போரின் தோல்விக்கு

வழிகோலும் என்பதையும் அவர் அறிவார். எனவே அவர் இருதரப்பாரிடமும் கருத்துக்களைப் பரிமாறிக் கிறுத்தவர்களுக்கு மிகவும் நன்மை தரும் உடன்படிக்கைக்கு வழிகோலினுர்' என்ருர் அப்பாதிரியார்.

'ஆயின் என் உறவினளை ஒரு சாரசினுக்கு மணமுடிக்க...' என்று ரிச்சர்டு மன்னர் தன் கண்களில் தீப்பொறி பறக்கக் கூறினுர்.

'போப்பாண்டவரின் அனுமதியை முதலில் பெறவேண்டும். ஆனுல் ரோமாபுரியில் மிகுந்த செல்வாக்குள்ள எங்காடி மடத்துத் துறவி அதனைக் கவனித்துக் கொள்வார்' என்ருர் பாதிரியார். 'எப்படி?நம் இசைவைப் பெருமலா?' என்ருர் ரிச்சர்டு.

'ஓ; இல்லை. உம்முடைய இசைவின் பேரிலேதான். அத்தகைய ஒரு மணம் ஸ்பெயின் நாட்டில் போப்பாண்டவர் அனுமதியுடன் நடைபெற்றுள்ளது. நாளடைவில் எடித், சலாடின் மன்னரையும் கிறுத்தவ மதத்தைத் தழுவச் செய்யலாம்' என்று அப்பாதிரியார் விரைந்து கூறினுர்.

'அதற்கான அறிகுறிகள் அம்மன்னரிடம் தெரிகின்றனவா?' என்று வினவினுர் ரிச்சர்டு மன்னர்.

'அவர் நம் மதகுருமார்கள் கூறியதைப் பொறுமையுடன் கேட்டுள்ளார்' என்ருர் அப்பாதிரியார்.

ரிச்சர்டு மன்னர் சிறிது நேரம் சிந்தனையில் மூழ்கியிருந்து பின்னர், அப் பாதிரியாரை நோக்கி, 'சிறிது நேரத்திற்கு முன்பு யாரேனும்

இவ்வித எண்ணத்துடன் எம்மை அணுகியிருப்பின் யாம் அவரைக் கொன்றிருப்போம். ஆயின் இப்போது அது எமக்குப் புதுமையாகத் தோன்றவில்லை. என் மதத்தைச் சேர்ந்த அரசர்கள் என்னையும், மதத்தின் நலனையும் கைவிட்டு விடுகையில் நாம் ஏன் வீரனும், நீதிமானும், வள்ளலுமாகிய சாரசனின் உறவைப் பெறக் கூடாது? ஆயின் பெருமை மிக்க பாதிரியாரே! கிறுத்தவர்களின் ஒற்றுமையைக் காப்பாற்ற நாம் கடைசி முயற்சி ஒன்றையும் செய்து விடுவோம். அதில் நமக்குத் தோல்வி ஏற்படின், நீர் கூறியதைப் பற்றிப் பிறகு சிந்திக்கலாம். அதற்கிடையில் நீர் கூறிய வார்த்தைகளை நான் ஏற்றுக் கொள்ளவோ, நிராகரிக்கவோ இல்லை. வாரும், நாம் விரைந்து அவ்வரசர்களின் ஆலோசனைக் கூடத்தையடைவோம். அங்கு இங்கிலாந்து அரசராகிய ரிச்சர்டு எவ்வளவு பொறுமையும் தாழ்மையும் உடையவர் என்பதை நீர் காணலாம்' என்றார்.

அவர்கள் செல்வதற்கு முன்பே அச்சபை கூடியிருந்தது. அங்கிருந்தோர் ரிச்சர்டு மன்னரின் வரவிற்காகவே சிறிது நேரமாகக் காத்திருந்தனர். அது போழ்து அவர்கள் ரிச்சர்டு அரசரின் செருக்கைப் பற்றி அவரை இகழ்ந்து பேசிக்கொண்டிருந்தனர். அவர் வரும்போது அவருக்கு எந்த விதமான தனிப்பட்ட மதிப்பையும் கொடுப்பதில்லை என்று முடிவு செய்திருந்தனர். ஆயின் அவர்கள் அவரது பெருந்தன்மை பொருந்திய உருவினையும் கவர்ச்சிகரமான அவரது கண்களையுங் கண்ட உடனே யாவரும் ஒரே நேரத்தில்

எழுந்து நின்று 'இங்கிலாந்து மன்னராகிய ரிச்சர்டுவைக் கடவுள் காப்பாராக. வீரமிக்க சிங்கநெஞ்சினரான அவர் நீண்ட நாட்கள் வாழ்வாராக' என்று முழக்கினர்.

ரிச்சர்டு மன்னர் மிகவும் மகிழ்ச்சியுற்றார். அவர் தன் வேலையைத் தொடங்கு முன்னர் ஒரு சிறிய சொற்பொழிவாற்றினார். நெடுங் காலங் கழித்து அவர் அக்கூட்டத்திற்கு வந்தபோது அவருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பிற்காக யாவருக்கும் அவர் நன்றி கூறினார். தாம் ஒரு போர் வீரரே எனவும், அவர் நாக்கைவிட அவர் கரம் பணியாற்றுவதற்குத் தயாராக இருக்கிறதெனவும், அவருக்கு இனிமையாகப் பேசிப் பழக்கமில்லை எனவும் கூறினார். அவர் அவசரத்தில் கூறியிருந்த சொற்களை மறந்து அவர்கள் மேற்கொண்ட புனிதப்போரில் அவர்கள் ஒன்றுகூடுபடுவார்களா என்று கேட்டார்? அவருடைய சொல்லாலோ அன்றிச் செயலாலோ அங்குள்ளவர்களில் யாருக்கேனும் அவர் தவறுதலாக வருத்தத்தை ஏற்படுத்தியிருப்பின் அதற்காக அவர் தன் செயலாலும், வார்த்தையாலும் பரிகாரஞ் செய்வதாகக் கூறினார். பின்னர் அங்குக் கூடியிருந்தவர்களில் ஒவ்வொருவரையும் நோக்கினார்.

முதலில் ரிச்சர்டு மன்னர் பிரான்சு மன்னராகிய பிலிப்பை நோக்கி 'பெருந்தன்மை வாய்ந்த சகோதரரே! நான் தங்களுக்கு ஏதேனும் தீங்கிழைத்துள்ளேனா?' என்றார்.

'பிரான்சு மன்னருக்கு இங்கிலாந்து மன்னர் மீது குறைபட்டுக் கொள்ளக் காரணமேதுமில்லை'

என்று பிலிப் மன்னர் அன்புடனும் பெருமையுட னுங் கூறினர். மேலும் அவர் 'இச்சிலுவைப் போரிலிருந்து நான் நீங்கி என் நாட்டிற்குத் திரும்பத் தீர்மானிப்பதற்குக் காரணம், ஆங்கில மன்னராகிய தங்களிடம் எனக்குள்ள எந்தவித மனக் குறையினுலுமன்று; என் சொந்த நாட்டிலுள்ள நிலைமையை முன்னிட்டே யாகும்' என்றார்.

பின்னர் ரிச்சர்டு, ஆஸ்திரிய மன்னரான லியோபோலிடம் சென்றார். அவர் உடனே உணர்ச்சியால் தூண்டப்பட்டு மரியாதையாக எழுந்து நின்றார். 'ஆஸ்திரியநாடு இங்கிலாந்திடம் குறைபட்டுக் கொள்ளக் காரணம் இருப்பதாக நினைக்கிறது. அதேவிதமாக இங்கிலாந்தும் ஆஸ்திரியாவைக் குறை கூறக் காரண மிருப்பதாகக் கருதுகிறது. எனினும் புனிதப்போரின் நலனையும் வெற்றியையுங் கருத்தில் கொண்டு நமது குறைகளையும், பகைமையையும் மறப்போம். லியோபோல்டு மன்னர் ஆங்கிலக் கொடியினைத் திருப்பித் தருவாராக. ரிச்சர்டு மன்னரும் ஆஸ்திரிய நாட்டுக் கொடிக்கு அவர் இழைத்த அவமதிப்பிற்காக மனம் வருந்துவார்!' என்றார்.

ஆஸ்திரிய மன்னர் தன் செயலுக்காக வருந்தியவராய் வாய்பேசாது நின்றார்.

நல்வினைப் பயனாக எருசலேம் ஆலயத்தலைவர், லியோபோல்டு மன்னர் ஆங்கில நாட்டுக் கொடியின் திருட்டைப் பற்றித் தனக்கு ஒன்றும் தெரியாது என்று அவரிடம் கூறியுள்ளதாகச் சொல்லி, அவருக்கு உதவினார்.

'அவ்வாறாயின் நாம் ஆஸ்திரிய மன்னருக்குத் தவறு செய்துள்ளோம். அவர் மீது ஐயுற்றதற்காக அவர் மன்னிப்பைக் கோருகிறோம்' என்றார் ரிச்சர்டு மன்னர்.

பின்னர் ரிச்சர்டு மன்னர் மற்ற மன்னர்களையும் நோக்கி 'இங்கிலாந்து மன்னராகிய ரிச்சர்டு மீது இங்குள்ள வேறு எவரேனும் குறைகூற விரும்புகிறீர்களா? அங்ஙனம் செய்யின் ரிச்சர்டு மன்னர் அதற்கான பரிகாரஞ் செய்யத் தயாராக உள்ளார்' என்றார்.

அவர் அங்கு வருவதற்கு முன்னர் அங்கிருந்த ஒவ்வொருவரும் அவரைப் பற்றிக் குறை கூறிய போதிலும் அவர் அவ்வாறு வினவியபோது ஒருவரும் தன்னுடைய வாயைத் திறக்கத் துணியவில்லை. கான்ராடு அரசர் மட்டும், 'ரிச்சர்டு மன்னர் எல்லாப் புகழையும் மற்றவர்க்கும் பகிர்ந்தளிக்காது தானே எடுத்துக் கொள்ளுகிறார் என்பதைத் தவிர எங்களுக்கு வேறொரு குறையுமில்லை' என்றார்.

மதபோதகர்களின் தலைவர் மட்டும் இவையனைத்தையும் மனக்குறையுடன் கவனித்து வந்தார். அக்குழு ரிச்சர்டு மன்னரைத் தலைமைப் பதவியிலிருந்து நீக்கிவிடும் என அவர் நினைத்தார். நிகழ்ச்சிகள் அவர் நினைத்ததற்கு மாறாகச் சென்றன. ரிச்சர்டு மன்னர் அங்கிருந்ததால் அந்த அவையினர் யாவரும் அவரால் கவரப்பட்டுக் கட்டுண்டிருந்தனர். எனவே அவர் எழுந்து நின்று அம்மன்னர் செருக்குடையவர் என்றும், மற்றவரை மதியாதவர் எனவும் வெளிப்படையாகக் குறைகூறி

ஞர். மேலும் அவர் ரிச்சர்டு மன்னரது அஞ்சா நெஞ்சத்தையும், ஊக்கத்தையும், ஆற்றலையும் அங்கிருந்தோர் அனைவரும் பாராட்டினராயினும், அவர்கள் ரிச்சர்டு மன்னர் தங்களை அவருக்கு ஒப்பானவர் என்று நினைக்காமல் அவரது பணியாளர்களைப் போல நினைத்து நடத்தினர் என்று கருதியதாகவுங் கூறினர். அவர் கூறியவை அனைத்தும் அவரது சொந்தக் கருத்துக்கள் அன்று எனவும், அங்கிருந்த ஒவ்வொருவருடைய எண்ணமும் அதுவே எனவும் கூறினர்.

அவ்வார்த்தைகளை ரிச்சர்டு மன்னர் மன வருத்தத்துடனேயே கேட்டுவந்தார். அந்த மதப் போதகர்களின் தலைவர் தந்திரமாகத் தன்னை சினமடையச் செய்ய முயல்வதையும், அவர் அவ்வாறு சினமடையின் அவர் முயற்சிகள் அனைத்தும் வீணாகு மெனவும், உணர்ந்தார். எனவே மிகுந்த பொறுமையுடன் தன் உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டு, ரிச்சர்டு வேந்தர் 'அப்படியா, நண்பரே! எனது இயல்பான இக்குறையைத் தாங்கள் மன்னிக்கக்கூடாதா? நான் எப்போதேனும் அதிகமான ஆர்வங்காட்டி யிருப்பின், அது நம் நோக்கத்தின் புனிதத் தன்மையை முன்னிட்டேயாகும்' என்றார்.

'எப்போதேனும் நான் சில கட்டளைகளை உங்களைக்கலக்காமல் இட்டிருப்பின் அதற்குக்காரணம் அவையைக்கூட்டி முடிவுசெய்யப் போதிய அவகாச மின்மையே யாகும். இத்தகைய என்னுடைய குறைகளுக்காக நீங்கள் மேற்கொண்ட புனிதப் பணியைக் கைவிட்டு விடுவீர்களா? புனித

ஆலயத்திற்குச் செல்லும் வழி உங்களுக்கு முன்னால் திறந்துள்ளது. ரிச்சர்டு மன்னர் தன் உணர்ச்சி மிகுதியால் தவறு செய்ததற்காக உங்கள் கடமையை மறந்து விடுதல் நலமாகுமா? என் தவறுகளை என் சேவைகள் மறக்கச் செய்யும் என்று நான் நினைத்தேன். இப்போரில் மற்றைய நாடுகளில் எதையும் விட இங்கிலாந்தே அதிகப் பொருளையும், வீரர்களையும் ஈடுபடுத்தியது என்பது நீங்கள் அறிந்ததேயாம். அந்நாட்டுச் செல்வமே என்னுடைய வீரர்களுக்கும், உங்களுடைய வீரர்களுக்கும், உணவும் மருந்தும் வாங்கப் பயன்பட்டுள்ளது. இருந்தும் போரின் புகழையன்றி வேறு எதையேனும் நான் எனக்காகப் பெற்றுள்ளேனா? ஆயினும் நானே மறந்து விட்ட அச்செய்திகளை உங்களுக்கு நினைவுபடுத்துவது சரியன்று. எனவே நாம் இனிச் செய்ய வேண்டியதைக் கருதுவோம். ரிச்சர்டு மன்னரின் செருக்கும், ஆர்வமும் இனி உமது செயலுக்குத் தடையாயிரா. இந்தக் கூட்டை அழிப்பதற்கு என் குறைபாடுகள் காரணமாயிருப்பின் என் வாணாளளவும் நான் வருத்தப்பட வேண்டியிருக்கும். அதைவிட என்னுடைய போர் வீரர்களுக்கும், தலைமை வகிக்கும் உரிமையை நான் இப்போதே விட்டுக்கொடுக்க இசைகிறேன். உங்களுக்குவிருப்பமான தலைவரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். நீங்கள் யாரை உங்கள் தலைவராகத் தேர்ந்தெடுப்பினும் அவர்கள் தலைமையில் நான் மகிழ்ச்சியுடன் பணியாற்றுவேன். நீங்கள் இப்போரையே விரும்பா

விடின், என்னுடன் பதினைந்தாயிரம் வீரர்களை விட்டுச் செல்லுங்கள். உங்கள் குறிக்கோளை நான் நிறைவேற்றுகிறேன். எருசலேம் வெல்லப்பட்டால் என்னுடைய பெயரே அல்லாமல் உங்கள் பெயரே அவ்வாலயத்தின் கதவுகளில் பொறிக்கப்படும்' என்றார்.

ரிச்சர்டு மன்னரின் பெருமை மிக்க ஆர்வமும் பேச்சுத் திறனும் புனிதப் போர்வீரர்களின் மங்கிக் கொண்டு வந்த ஊக்கத்தைக் கிளர்ந்தெழச் செய்தன. அவர்கள் ரிச்சர்டு மன்னரிடம் தங்களுக்கிருந்த சிறு பூசல்களை யெல்லாம் அப்போதே மறந்தவர்களாய், ஒரே குரலில் 'சிங்க உள்ளம் படைத்த வீரரே! எங்களை எருசலேமை நோக்கி நடத்திச் செல்க' என்று முழங்கினர்.

அவர்கள் முழக்கம் முதலில் வெளியில் காவல் புரியும் வீரர்களுக்கும், பின்னர் தூரத்தில் வீண்காலம் கழித்திருந்த மற்றைய வீரர்களுக்கும் பரவியது. சில விநாடிகளுக்குள் அம்முகாம் முழுவதும் 'எருசலேத்தை நோக்கி, எருசலேத்தை நோக்கி' என்ற முழக்கம் முழங்கியது.

15. தாக்குதல்

அன்றைய நிகழ்ச்சிகளால் மகிழ்ச்சி யடையாத இருவர் அம்முகாமில் இருந்தனர். அவர்கள் புனிதப் போர்வீரர்களின் தலைவர்களெனினும், அவர்கள் மனத்தில் அழுக்காறு குடிகொண்டிருந்தது. அவர்கள் கோயிலார் தலைவரும், கான்ராடுமே யாவர். அவர்கள், அக்கூட்டம் ஒற்றுமையின்மையால் குழப்பத்தில் முடியும் எனவும், போர் முயற்சிகள் தடைபட்டு விடு மெனவும், எதிர்பார்த்தனர். ஆனால் அவர்கள் எதிர்பார்த்த வண்ணம் நிகழ்ச்சிகள் நடவாமற்போனது அவர்களுக்கு மிகுந்த ஏமாற்றத்தையும், மனக்கசப்பையும் உண்டாக்கின.

எனவே கோயிலார் கோமான் கான்ராடை நோக்கி 'இந்த அறவிலிகளைப் பார். ரிச்சர்டு மன்னர் தன் வாயைத் திறந்த உடனே அவர் காலில் விழ அவர்கள் தயாராக உள்ளனர்" என்றார்.

அதற்குக் கான்ராடு 'இது நிலைத்திராது என்பதை நீர்விரைவில் காண்பீர். அவர்கள் மீண்டும் பகைத்துக் கொள்வர்' என்றார்.

'அவர்கள் கூட்டு உடைபட்டாலும் அதனால் விளையக்கூடிய பயன் யாது? போர் உடன்படிக்கையின்படி ரிச்சர்டே எருசலேமுக்கு மன்னராவார். நீரும் நானும் ஒளிந்து கொள்வதற்கு ஏதேனும் ஒருவனையைத் தேடவேண்டுவதே' என்றார் கோயிலார் கோமான்.

ஆயின் கான்ராடு அக்கூற்றை மறுத்தவராய், 'அந்தக் கர்வியான ரிச்சர்டு மன்னர் தன் உறவினளாய எடித் கோமாட்டியை ஒரு முகம்மதிய மன்னருக்கு அளிக்க உடன்பட்டார். அது உடன்படிக்கையின் நிபந்தனைகளில் ஒன்று என்பதையும், நான் அதனை அவ்வுடன்படிக்கையின் நிபந்தனைகளில் ஒன்றாகச் சேர்த்ததற்குக் காரணம் இது நிறைவேறாத வண்ணம் தடுப்பதற்காகவே என்பதையும் நீர் அறியீரா?' என்றார்.

'உமக்கு ரிச்சர்டு அரசரைப் பற்றி அதிகம் தெரியாது. டயர் மதத்தலைவரே என்னிடம் நீர் நினைப்பதற்கு மாறான செய்தியை இரகசியமாகக் கூறியுள்ளார். நீர் ரிச்சர்டு சிங்கத்தை உமது அழகிய வலையில் பிடிப்பது இயலாத செயல். உம் சதித் திட்டம் தோல்வியுற்றது. எனவே நான் எனது திட்டத்தைப் பயன்படுத்துதல் வேண்டும். தாக்கும் வீரர்களைக் குறித்து நீர் கேட்டிருக்கிறீரா?' என்று அத்துறவி வீரர்களின் தலைவர் கான்ராடை வினவினார்.

'தங்கள் பகைவர்களை நஞ்சினாலோ, வாளினாலோ கொல்லும் அரேபிய மத வெறியர்களைக் குறித்துக் கூறுகிறீரா?' என்றார் கான்ராடு.

'ஆம். என் வீரர்கள் அவர்களில் ஒருவனைப் பிடித்து வைத்துள்ளனர். அவன் ரிச்சர்டு மன்னரைக் கொல்வதாகச் சூளுரைத்துள்ளதாக அறிகிறேன். அவன் தற்போது எனது கைதியாக இருக்கிறான். ஆயின் முற்காலத்தில் சிறைக் கூடங்கள் உடைக்கப்பட்டும், கைதிகள் தப்பிச் சென்றும் உள்ளனர். அக்கைதி விடுவிக்கப்பட்டால் அவன் தன் இரையைத் தொடர்வானன்றோ?' என்றார்.

கான்ராடு பிரபு, 'உம் திட்டம் எனக்கு விளங்குகிறது. அது மிகவும் பயங்கரமானதாயினும் இப்போதுள்ள சூழ்நிலைக்குத் தகுதியுடையது அதுவே', என்றார்.

இதற்கு நான்கு நாட்களுக்குப் பிறகு ஒரு நாள் ரிச்சர்டு மன்னர் தன் கூடாரத்தில் சமாதான உடன்படிக்கையின் முடிவில் நடக்கவிருக்கும் புனிதப்போரைக் குறித்துத் திட்டமிட்ட வண்ணம் தனித்து அமர்ந்திருந்தார். சலாடின் மன்னரிடமிருந்து அவரைக் காண ஒரு தூதுவர் வந்திருந்ததாகச் செய்தி வந்தது. உடனே ரிச்சர்டு மன்னர் அத்தூதுவரை ஏற்ற மரியாதையுடன் தன்னிடம் அழைத்து வருமாறு ஆணையிட்டார்.

அத்தூதுவன் ஒரு நுபிய அடிமையைப்போலக் காணப்பட்டாலும் கவர்ச்சியான தோற்றமுடையவனாகத் தோன்றினான். அவன் கருமை நிறமுடையவனெனினும், உயரமாகவும் வன்மையுடனும் காட்சி யளித்தான். அவன் உடலுறுப்புக்கள் ஒரு நீக்ரோவனுடையவை போலன்றி அழகுடன் விளங்கின. அவன் ஒரு வெண்மையான தலைப்பாகையையும், ஒரு வெண்மையானதும் தளர்த்தியானதுமான மேலங்கியையும் அணிந்திருந்தான். அதற்கு உட்புறத்தில் புலித் தோலாலான ஆடையை யணிந்திருந்தான். அவனது இடையிலிருந்து ஒரு கன்மான வாள் தொங்கிக் கொண்டிருந்தது. அவன் தனது

வலதுகரத்தில் ஒரு சிறிய ஈட்டியையும், இடதுகரத்தில் ஒரு வேட்டை நாயையும் பிடித்திருந்தான்.

அந்த அடிமை ரிச்சர்டு அரசரின் கூடாரத்திற்குள் நுழைந்த உடனே அரசருக்கு முன்னால் தரையில் விழுந்து வணங்கி பொன்னுடையில் சுற்றி வைக்கப்பட்டிருந்த சலாடின் மன்னரது கடிதத்தை ரிச்சர்டு அரசரிடம் கொடுத்தான். ரிச்சர்டு மன்னர் உடனே அதனைப் பிரித்து வாசித்தார். அக்கடிதத்தில் சலாடின், ரிச்சர்டு அரசர் நட்புக்குப் பதிலாகப் பகைமையையும், அமைதிக்குப் பதிலாகப் போரையும் மேற்கொள்ள முடிவு செய்திருந்ததைக் குறித்து வருத்தந் தெரிவித்திருந்தார். எனினும் அத்தகைய சிறந்த பகைவரைப் போர்க்களத்தில் சந்திக்கும் வாய்ப்பிற்கு மகிழ்ச்சி தெரிவித்திருந்தார். இதற்கிடையில் இங்கிலாந்தின் சிங்கமாகிய அவரிடம் தான் கொண்டிருந்த மதிப்பிற்கறிகுறியாக அவர் ஒரு கரிய அடிமையை அனுப்பியிருப்பதாகவும், அவ்வடிமை அறிவும், நன்றியுடைமையும், வியத்தகு ஆற்றலுமுடையவன் எனவும் குறித்திருந்தார்.

ரிச்சர்டு மன்னர் அவ்வடிமையை அடி முதல் முடிவரையும் கூர்ந்து நோக்கி மகிழ்ச்சியுற்றார்.

பின்னர் அவர் அவ்வடிமையை நோக்கி, 'நீ ஒரு கிறுத்தவனா அன்றி வேறு மதத்தைச் சேர்ந்தவனா?' என்று வினவினார்.

அவ்வடிமை சைகைகளின் வாயிலாக அவன் ஒரு கிறுத்தவனெனவும் பிறவியிலிருந்தே ஊமை எனவும் அறிவித்தான்.

'நீ எனக்கு மிகவும் ஏற்றவன். ஏனெனில் நீ பேச இயலாதவனாக இருப்பதால் கோள் சொல்லவோ அன்றி உனது அறியாமை நிறைந்த கேள்விகளால் என்னைத் துன்புறுத்தவோ உன்னால் இயலாது', என்றார் அவர்.

பின்னர் அவ்வரசர் சுவரில் தொங்கிக்கொண்டிருந்த தன்னுடைய கேடயத்தை அவனுக்குக் காட்டி அதனைத் துடைத்து ஒளிபெறச் செய்யுமாறு கட்டளையிட்டார். அவ்வடிமையும் உடனே அவ்வேலையில் ஈடுபட்டான். வெளிச்சம் அந்தக் கேடயத்தின்மீது நன்கு படும்பொருட்டு அவன் அக்கூடாரத்தில் தன் முதுகு வாயிலை நோக்கி இருக்குமாறு அமர்ந்திருந்தான். ரிச்சர்டு மன்னர் வாயிலருகில் ஒரு இருக்கையில் அமர்ந்து இங்கிலாந்திலிருந்து அவருக்கு அன்று வந்திருந்த கடிதங்களைப் படித்துக்கொண்டிருந்தார். அக்கடிதங்களில் அந்நாட்டின் அப்போதைய துயர நிலையும் அவர் உடனே திரும்ப வேண்டிய இன்றியமையாமையும் எழுதப்பட்டிருந்தன. அவ்வெண்ணங்களில் அவர் மூழ்கியிருந்தபடியால் அக்கம் பக்கத்தில் நிகழ்ந்தவற்றை அவர் கவனிக்கவில்லை.

அவரது காவலாளிகள் சிறிது தொலைவில் அமர்ந்திருந்தனர். அவர்களிற் சிலர் உறங்கிக் கொண்டும், சிலர் கதைகளைக் கூறிக்கொண்டும், வேறு சிலர் விளையாடிக் கொண்டும் இருந்தனர்.

சூரியன் மறையும் நேரத்தில் அந்தக் கறுப்பு அடிமை கண்ணாடி போன்று ஒளிவீசிக்கொண்டிருந்த அக்கேடயத்தில் வாயிலினருகில் அமர்ந்திருந்த அரசரின் உருவத்தைக் கண்டான்.

திடீரென்று அரேபியன் ஒருவன் தரையில் குப்புறப் படுத்து மிக்க விழிப்புடன் ஒரு பாம்பைப் போல அரசரை நோக்கி ஊர்ந்து வந்ததையும் அக்கேடயத்தில் கண்டான். இது அவன் உள்ளத்தில் ஐயத்தை உண்டாக்கியபடியால் தானும் செயல்பட அவன் தன்னைத் தயாரித்துக்கொண்டான்.

இதற்கிடையில் அந்தப் பதுங்கித் தாக்கும் அரேபியன் ரிச்சர்டு மன்னருக்கு ஒன்பது மீட்டர் தூரத்திற்குள் ஊர்ந்து வந்திருந்தான். பின்னர் அவன் குதித்தெழுந்து, ரிச்சர்டு மன்னர் இருந்த இடத்திற்கு ஒரு புலியைப் போன்று பாய்ந்து சென்று, தம் கையிலிருந்த உடைவாளை அம்மன்னரைத் தாக்கும் பொருட்டு ஓங்கினான். ஆயின் அவ்வடி அரசர்மீது விழுமுன்னரே அவ்வாறு உயர்த்தப்பட்ட அக்கொலைஞனின் கரம் கரிய அடிமையின் கைகளால் பற்றப்பட்டது. தன் கோபத்தினால் அந்த உடைவாளை அவ்வரேபியன் அவ்வடிமையின் பக்கமாய்த் திருப்பினான். என்றாலும் அவ்வடிமையின் ஒரே அடியினால் தரையில் அந்த அரேபியன் வீழ்ந்துபட்டதால் அவ்வாளினால் அவ்வடிமையின் கரத்தில் ஒரு சிறு காயம் மாத்திரம்தான் ஏற்பட்டது. இதற்கிடையில் அரசர் தன் சிந்தனைகளிலிருந்து விழிப்புற்றவராய் நடந்தவைகளை ஒரு நொடிப்பொழுதில் அறிந்துகொண்டார். அவர் அமைதியாகத் தன் இருக்கையைக் கையில் எடுத்து அதனால் அவ்வரேபியனது தலையைப் பலதுண்டுகளாக உடைத்தார்.

இதற்குள் காவலர்களும் அவ்விடத்திற்கு விரைந்து வந்தனர். அவர்களது பொறுப்பின்மைக்காக அரசர் அவர்களைக் கடிந்துகொண்ட பிறகு தன் நன்றியைத் தெரிவிக்கும் பொருட்டு அவ்வடிமையிருந்த பக்கம் திரும்பினார். அப்போது தான் அவ்வடிமையின் கையிலிருந்த காயத்தைக் கவனித்தவராய் அம்மன்னர் தமது காவலாளிகளை நோக்கி, 'அது ஒரு நஞ்சு தோய்ந்த கருவியாக இருக்கலாம் என்று ஐயுறுகிறேன். எனவே உங்களில் ஒருவர் அந்த நஞ்சை வாயால் உறிஞ்சி அகற்றுங்கள்', என்றார்.

ஆயின் அவர்களனைவரும் சற்றுப் பின்னால் போய்விட்டனர். அவர்கள் தங்கள் உயிரை அவ்வாறு செய்வதன் வாயிலாக இழக்கத் துணிந்த போதிலும், அவர்களில் ஒருவனும் அக்கரிய அடிமையின் தசையில் தன் வாயை வைக்கும் அளவிற்குத் தன்னைத் தாழ்த்திக்கொள்ள விரும்பவில்லை. வேறொன்றுங் கூறாது, ரிச்சர்டு மன்னர் உடனே அக்காயமிருந்த இடத்தில் தன் உதடுகளை வைத்தார். அவர் தன் தலையை உயர்த்திய உடனே அவ்வடிமை தன் காயத்தை ஒரு துண்டினால் மூடிக்கொண்டான். அரசர் அவனை ஊன்றிக் கவனித்தார்.

அரசரது அந்தரங்க அதிகாரியாகிய நெவில் என்பார்,தங்கள் கடமையை அலட்சியஞ் செய்ததற்காக,அக்காவலாளிகளை ஒறுக்குமாறு, அரசரைத் தூண்டினார். ஆயின் அரசரோ, 'அதைக் குறித்துப் பேசாதே. இங்கிலாந்து நாட்டுக் கொடி களவாடப்பட்ட குற்றமே இன்னும் தண்டிக்கப்படாமலுள்ளது. அங்ஙனமாகவும் எனக்குண்டான இச்சிறு தீங்குக்காக நான் இவர்களைத்

தண்டிப்பது முறையாகுமோ?' என்றார். திடீரென ஒன்றை நினைத்துக் கொண்டவராய் அவர் அந்த கரிய அடிமையை நோக்கி, 'உனது மாட்சி மிக்க தலைவர் உனக்கு அரிய திறமைகள் உள்ளதாகக் கூறியிருந்தார். இங்கிலாந்துக்கொடியைத் திருடிய வரை நீ கூறக் கூடுமாயின் நான் உனக்கு உன் எடைக்குச் சரியான பொன்னை அளிப்பேன். நீ அதனைக் கூறமுடியுமா ?' என்றார்.

அவ்வடிமை அதற்குத் தன் தலையை அசைத் தவனாய் அரசரது வினாக்களுக்கு அவன் எழுத்து மூலம் விடையளிப்பதாகத் தன் சைகைகள் வாயி லாகத் தெரிவித்தான். எழுது கருவிகள் அவனுக்கு வருவித்துத் தரப்பட்டன. அவ்வடிமை ஒரு மூலையில் அமர்ந்து தன் விடையை எழுதினான். அதில் அவன் புனிதப்போர் வீரர்கள் ஒருவர்பின் ஒருவராகச் செல்லும் இடத்தில் தன்னை நிறுத்தி வைப்பின், அக்கொடியைக் களவாடிய கள்வன் தன்னை எப்படி மாறுவேடத்தால் மறைத்திருப் பினும், அவனை உறுதியாகக் கண்டுபிடிக்கஇயலும் என்று கூறியிருந்தான்.

அதனைப் படித்த உடனே அரசராகிய ரிச்சர்டு மன்னர் மிகவும் மகிழ்ச்சி யடைந்தார். தன் அந்தரங்க அதிகாரியை நோக்கி அவ்வரசர், 'நாளை நாம் நம் வீரர்களையெல்லாம் கூட்டும் போது, அரசர்கள், நமது கொடிக்கு, ஒருவர்பின் ஒருவராக அணிவகுத்துச் சென்று வணக்கம் செலுத்த இசைந்துள்ளனரன்றோ? அப்போது நாம் நம் பக்கத்தில் இவ்வடிமையை நிறுத்தி வைத்துத் திருடனைப் பிடித்துவிடலாம்', என்றார்.

எனினும், அவ்வதிகாரியோ, 'ஆறிவரும் புண்ணைக் கிளறுவதைக் குறித்து எச்சரிக்கையுட னிருக்க வேண்டும். நீர் இப்போது செய்ய நினைக் கும் செயலை மேற்கொண்டால் குறைகளுக்கு அது இடமளிப்பதுடன் சில நாட்களுக்கு முன் பெற்ற நல்லெண்ணத்தையும் நீர் இழக்க நேரும். மேலும் உமது பெரும்பகைவராகிய சலாடின் மன்னர் அனுப்பிய இந்த அடிமையை நீர் எந்த அளவிற்கு நம்பலாம் என்பதையும் நன்கு சிந்தித் துப் பாரும்', என்றார்.

உடனே அரசர், 'நெவிலியே! உமது அறிவுரை போதும். இங்கிலாந்தின் மதிப்பைப் பாதிக்கும் அந்நாட்டுக் கொடியைத் திருடிய கள்வனைக் கண்டுபிடிக்க முயற்சி செய்வதில்லை என நான் அம்மன்னர்களுக்கு எப்போதும் வாக் களிக்கவில்லை. இவ்வடிமையைக் குறித்துக் கூறுவ தாயின், நம் பார்வைக்குத் தோன்றுவதைக் காட்டிலும் இவனிடம் நாம் காணவேண்டியவை பல உள்ளன. அவனை நன்கு நடத்துமாறு கவனித்துக் கொள். எங்காடி மடத்துத் தலைவரை அழைத்து வருமாறு ஆட்களை உடனே அனுப்பு' என்றார்.

பின்னர் அம்மன்னர் அவ்வடிமையைப் பார்த்து, 'நீ நாளைச் செய்வதாகக் கூறியுள்ள செயலைச் செய்துமுடிக்க உன்னைத் தயாரித்துக் கொள்க. நீ அச்செயலில் வெற்றியடையின், உனக்கு விருப்பமான பரிசை நீயே-தேர்ந்தெடுக் கலாம்' என்றார்.

16. மாறுவேடம்

இந்நிலையில் நாம் சிறிது பின்னோக்கிச்சென்று அரேபிய மருத்துவருடன் சென்ற கென்னத் என்ன ஆனான் என்று பார்ப்போம். தன்னைக் காவலிலிருந்து விடுதலை செய்த உடனே, கென்னத் தனது புதிய தலைவராகிய அரேபிய மருத்துவரைப் பின் தொடர்ந்து சென்றான். அங்கு அவன் ஒரு படுக்கையில் விழுந்து, தன் தலையைக் கையில் பதிய வைத்துத் தன் துயரம் தீர அழுதான். மருத்துவர் அவனைத் தேற்ற முயன்றும் அவரால் அவ்வாறு செய்ய இயலவில்லை.

மறுநாள் மருத்துவர் தன் பிரயாணத்தைத் துவக்கத் தொடங்கினார். மருத்துவரும் கென்னத்தும் தங்கள் குதிரைகளின்மேல் சென்றனர். ஒட்டகங்கள் தங்கள் நீண்ட பிரயாணத்தைத் துவக்கின. வழி நெடுக தனது துயர நிலையைப் பற்றிய எண்ணங்களில் மூழ்கியவனாய்க் கென்னத் ஒன்றும் பேசாமலேயே சென்றான். மருத்துவர் அவனுடைய கவனத்தை வேறு வழியில் திருப்ப முயன்றார். ஆயினும் அதனால் பலன் ஒன்றும் ஏற்படவில்லை. பின்னர் அம்மருத்துவர் அவனைத் தன் போக்கிலேயே விட்டுவிட்டுத் தன் பணியாள் ஒருவன் பாடிய பாடலைக் கேட்டுக் களிப்படையத் தொடங்கினார்.

அன்று மாலை அவர்கள் அப்பாலைவனத்தின் இடையில் வளர்ந்திருந்த ஒரு சோலையைச் சென்றடைந்தனர். அச்சோலை முன்னர் தான் ஷீர்காப்

என்னும் அரேபிய அதிபருடன் தங்கியிருந்த டைமன் சோலை என்பதைக் கென்னத் உடனே கண்டுகொண்டான். முன்னர் அவன் அவ்விடத்திற்கு வந்தபோது இருந்த அவனது நிலையோடு அவனது அப்போதைய நிலையை ஒப்பிட்டுப் பார்த்தான். அப்போது அவன் அரசர்களது செய்தியைத் தாங்கிச் செல்லும் அளவுக்குப் பெருமை வாய்ந்த போர் வீரனாக விளங்கினான். ஆனால் இப்போதோ அவன் அரேபிய மருத்துவருடைய அடிமைகளில் ஒருவன். 'மேலும் அவன் ஒரு நம்பிக்கைத் துரோகியும்,போர் வீரர் முகாமிலிருந்து கடத்தப்பட்ட இழிந்தவனுமாவான். அவனது துயரம் அவன் உடல் நிலையைக் கெடுத்ததை அம்மருத்துவர் கவலையுடன் கவனித்தார். அவனுடைய நாடிகள் காய்ச்சலின் குறியைக் காட்டின. அவன் கண்கள் இரத்தம் போலச் சிவந்தும், வெப்பமுடையனவாகவுமிருந்தன. எனவே அம்மருத்துவர் அவனுக்கு ஒரு சிறிது மருந்து கொடுத்து அவனை உறங்கச் செய்தார்.

அவன், நெடுநேரம் நன்கு உறங்கி விழித்த உடனே, தான் முற்றிலும் வேறுபட்ட ஒரு இடத்தில் இருந்ததைக் கண்டான். குளிர்ந்த பசிய புல்தரையில் உறங்கிக் கொண்டிருந்த கென்னத் மிருதுவான பட்டு மஞ்சத்தில் தான் படுத்திருப்பதைக் கண்டு வியப்புற்றான். அவன் தலைக்கு மேல் அச்சோலையில் காணப்பட்ட நீல வானத்திற்குப் பதிலாக வெல்வெட்டாலான ஒரு விரிப்பு விளங்கியது. அவன் தங்கியிருந்த அந்தக் கூடா-

ரமே ஆடம்பரப் பொருள்களால் நிறைந்திருந்தது. அவற்றிற்கு மேலாக அவனது உடையே அரேபியர் அணியும் ஆடைபோலப் பட்டினுல் ஆக்கப் பட்டிருந்தது அவனுக்கு மிக்க வியப்பினை யளித்தது.

அவ்வீரன் எழுந்து குளித்துவிட்டுத் தன் ஆடைகளை அணிந்துகொண்ட போது அம்மருத்துவர் கூடாரத்திற்கு வெளியே நின்றுகொண்டு உள்ளே வர அவனது இசைவைக் கோரியது கேட்டது.

அதைக் கேட்ட கென்னத் வெறுப்புடன் 'தன் அடிமையின் கூடாரத்தினுள் வர அவன் தலைவருக்கு எவ்வித அனுமதியும் வேண்டியதில்லை', என்ருன்.

அப்போதும் உள்ளே வாராது அம்மருத்துவர் 'தலைவன் என்ற முறையில் வாராவிடின்' என்ருர்.

'ஒரு மருத்துவருக்குத் தன்னுடைய நோயாளியை வந்து பார்க்கும் உரிமை எப்போதுமுண்டு' என்ருன் கென்னத்.

'நான் ஒரு மருத்துவர் என்ற முறையிலும் இப்போது வரவில்லை,' என்ருர் அம்மருத்துவர்.

'அங்ஙனமாயின் நீர் என்னுடைய நண்பர் என்ற முறையில் வரலாம். எனது நண்பருக்கு என் வாயில் எப்போதும் திறந்தே இருக்கும்', என்ருன் அவ்வீரன்.

'நான் நண்பன் என்ற முறையிலும் வாராவிடின்' என்ருர் அம்மருத்துவர்.

பொறுமை இழந்த கென்னத், 'எப்படி வந்தாலும் வருக', என்ருன்.

'அப்படியாயின் நான் உன்னுடைய பழைய பகைவன் என்ற முறையில் வருகிறேன்' என்று சொல்லிக்கொண்டே அம்மருத்துவர் உள்ளே நுழைந்தார். கென்னத் நம்பிக்கையற்றவனுய் அவரை விழித்துப் பார்த்தான். அவருடைய குரல் மருத்துவருடைய குரல் போலவும், உடை அரேபிய அதிகாரியாகிய எமிருடையது போலவுமிருந்தன. பேசாமல் அவரைக் கென்னத் உற்று நோக்கிக் கொண்டிருந்ததைக் கண்ட அம்மருத்துவர், 'நீ மிக்க வியப்புறுகிருயா? மனிதர்கள் அவர்கள் காணப்படுவதைப் போலன்றி, வேறுவிதமாகவும் இருப்பர் என்பதை அறிந்துகொள்ளுமளவிற்கு, நீண்ட நாள் வாழவில்லையா நீ? நீயுந்தான், நீ காணப்படுவதுபோல உள்ளாயா?' என்ருர்.

'தூய ஆண்டுரு சான்ருக நான் அவ்வாறு இல்லை. உலகம் என்னை ஒரு துரோகி என நினைக்கிறது. ஆயினும் குற்றம் புரிந்தவனெனினும் நான் உண்மையானவனே' என்ருன் கென்னத்.

'நானும் உன்னைப் பற்றி அவ்வாறு நினைத்தமையால்தான் ரிச்சர்டு அரசரிடம் உன்னைக் காப்பாற்றுமாறு வேண்டிக் கொண்டேன்' என்ருர் அம்மருத்துவர்.

'உண்மையில் ஒரு துரோகி அடையும் மரணத்திலிருந்து என்னைக் காப்பாற்றியதற்காக நான் உமக்கு மிகவும் கடமைப்பட்டுள்ளேன். உமது கருணைக்கு நான் எங்ஙனம் உரியவனுனேன் என்பதை என்னுல் அறியக்கூடவில்லை' எனக் கென்னத் கூறினுன்.

'இல்லை வீரனே! நானுங்கூட உனக்கு ஓரளவு

கடமைப்பட்டவனுவேன். எனக்கு ரிச்சர்டு அரச ரின் குடும்பத்தைச் சேர்ந்த பெண்மணிகளின் எழிலைக் குறித்துக் கூறியவன் நீயே யன்ருே ? எனவே நான் மாறுவேடத்தில் அரச குடும்பத் தைச் சேர்ந்த மாதர்கள் இருந்த கூடாரத்திற்குச் சென்று பேரரசி பெரெங்கேரியாவையும் எடித் கோமாட்டியையும் கண்டு களிக்கும் பேறுபெற் றேன். அவள் உண்மையில் சலாடின் மன்னருக்கு மனைவியாதற்கு மிகவுந் தகுதியுடையவள் ஆவாள்' என்ருர் அம்மருத்துவர்.

'நீர் ரிச்சர்டு அரச குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணைக் குறித்துப் பேசுவதைப் பற்றி எச்சரிக் கையாயிரும்' என்ருன் கென்னத்.

'நான் எடித் கோமாட்டியார் சலாடின் மன்னரின் மனைவியாதற்கு மிகவுந் தகுதியுடை யவர் என்று கூறும்போது மிக்க மரியாதையுட னேயே பேசுகிறேன். இப்பேச்சை இத்துடன் நிறுத்திக் கொள்ளுவோம். நாம் ஒருவர்மீது ஒருவர் சினங்கொள்ளுதல் தகாது. நாம் இருவரும் நண்பர்கள் அன்ருே ? மேலும் எனக்கு இப்போது உன்னுடைய உதவியும் மிகுதியாகத் தேவைப்படு கிறது' என்ருர் மருத்துவர்.

'மருத்துவரே! நீர் என்னைப் பரிகசிக்கிறீர். உமது அடிமையிடமிருந்து உமக்கு எவ்வித உதவி தேவைப்படும் ?' என்ருன் கென்னத்.

'இங்கிலாந்து நாட்டுக் கொடியைத் திருடிய வனைக் கண்டுபிடித்து உனக்கு ஏற்பட்டுள்ள களங்கத்தைப் போக்கிக்கொள்ள நான் உனக்கு ஒரு வழியைக் காண்பித்தால், நீ எனக்கு

ஒரு உதவியைச் செய்வாயா ?' என்ருர் அந்த அதிகாரி.

'எனது மதக் கோட்பாடுகளுக்கும், எனது நன்றியுடைமைக்கும் மாறுபடாத எவ்வித உதவி யையும் நான் உவப்புடன் செய்வேன். நீர் கூறியதைச் செய்து அதன் பரிசாக என் உயிரை எடுத்துக் கொள்ளும்', என்ருன் அவ்வீரன்.

'அங்ஙனமாயின் வீரனே கேட்பாயாக. உனது சிறந்த நாய் இப்போது முற்றிலும் குண மடைந்துள்ளது. அதன் வாயிலாக ஆங்கில நாட்டுக் கொடியைத் திருடியவனும், அதை இறக்கும் அளவிற்குத் துன்புறுத்தியவனும் ஆகிய அக்கொடியவனை, நீ எளிதில் கண்டு பிடிக்கலாம்', என்று கூறினுர் அம்மருத்துவர்.

'ஆ! எனக்கு இப்போதுதான் எல்லாம் புரி கிறது. இது எனக்கு ஏன் முன்பே தோன்றவில்லை?' என்ருன் கென்னத்.

'வீரனே! உன்னுடைய நாயைப்பற்றி அறிந் தவர் எவரேனும் உனது முகாமிலுள்ளனரா ? கூறுக', என்று கேட்டார் அம்மருத்துவர்.

'யாரும் இல்லை. அதைப் பற்றி அறிந்த ஒருவனும் என் நாட்டிற்குத் திரும்பிவிட்டான். அவன்தான் உம்மால் குணப்படுத்தப்பட்ட எனது பணியாள். ஆனுல் நான் திரும்பிச் சென்ருல் என்னை எளிதில் யாவருங் கண்டுபிடித்துவிடுவர்', என்ருன் கென்னத்.

'வீரனே! அஞ்சற்க. நான் உன்னையும் உனது நாயையும், உன் உடன்பிறந்தவனுங்கூட அறிந்து கொள்ள இயலா வண்ணம் மாற்றிவிடுகிறேன்.

நீ எனக்குச் செய்யவேண்டிய உதவியைக் கேட்பாயாக. நீ எடித் கோமாட்டிக்குச் சலாடின் மன்னர் எழுதிய கடிதத்தை எடுத்துச் சென்று அவளிடம் சேர்க்கவேண்டும்', என்று அம்மருத்துவர் கூறினார்.

இந்த எதிர்பாராத நிபந்தனையைக் கேட்டு கென்னத் திடுக்கிட்டான். ஆயின் அம்மருத்துவர் அக்கடிதத்தில் அச்சீமாட்டியின் பெருமையைப் பாதிக்கக் கூடிய செய்தி ஒன்றும் இருக்காது என்று உறுதி கூறியதைக்கேட்ட பின்னரே அவன் அம்மருத்துவரின் வேண்டுகோளுக்கிணங்கினான்.

இதற்குள் அக்கரிய அடிமை யாரென்பதையும், அவன் ஏன் மீண்டும் ரிச்சர்டு மன்னரின் முகாமிற்குத் திருப்பி அனுப்பப்பட்டான் என்பதையும், வாசகர்கள் யூகித்திருக்கலாம்.

17. கண்டுபிடிப்பு

அரேபிய மதவெறியன் ரிச்சர்டு அரசரைத் தாக்க முயன்ற நாளுக்கு அடுத்தநாள் புனித சிலுவைப் போரில் பங்குகொண்ட அரசர்களின் படைகள் யாவும் தூய ஜியார்ஜ் மேடையைச் சுற்றி இராணுவ முறையில் அணிவகுத்து நிறுத்தப் பட்டிருந்தன. அம்மணல் மேட்டின் உச்சியில் ஆங்கில நாட்டுப் புதிய கொடி காற்றில் பெருமிதத்துடன் பறந்துகொண்டிருந்தது. அதன் பக்கத்தில் ரிச்சர்டு அரசர் தன் குதிரை மீதமர்ந்து இருந்தார். அவருக்கு அருகில் அவரது கரிய நிறமுடைய அடிமை வாரால் கட்டப்பட்டிருந்த தன் நாயைப் பிடித்தவண்ணம் நின்றிருந்தான். அங்குச் சென்ற பின்னர் மேனாட்டு மன்னர்கள் ஆப்பிரிக்க நாட்டு மக்களைத் தங்களது அடிமைகளாக ஏற்றிருந்த காரணத்தால் அக்கரியஅடிமை ரிச்சர்டு அரசருக்கு அருகில் நின்றிருந்ததை யாரும் பொருட்படுத்தவில்லை. அரசருக்குப்பின்னால் மரத்தால் செய்யப்பட்ட ஒரு கோபுரத்தில் அந்த அணிவகுப்பைக் காண்பதற்காக அரசியாரும் அவரது தோழிகளும் அமர்ந்திருந்தனர். அவர்களுக்கு நுபிய அடிமையைப் பற்றியோ அவனது நாயைப் பற்றியோ ஒன்றும் தெரியாது.

கொடி வணக்கத்தைத் தொடங்குவதற்கான கட்டளை பிறப்பிக்கப்பட்ட உடனே ஒவ்வொரு அரசராகத் தங்கள் படைக்கு முன்னால் அம்மணல்

மேட்டிற்கு அருகில் மெதுவாகத் தங்கள் குதிரைகளின் மீது அமர்ந்து சென்றனர். அவர்கள் கொடிக்கு எதிரில் வந்தபோது வீரர்கள் தங்கள் வேல்களைத் தாழ்த்தினர். அவர்கள் தலைவர்கள் அம்மேட்டின்மீது சில அடிகள் முன்னேக்கிச் சென்று ரிச்சர்டு அரசருக்கும், அவர் நாட்டுக் கொடிக்கும் தங்கள் மரியாதையைச் செலுத்தினர். ரிச்சர்டு அரசரும் ஒவ்வொரு அரசருக்கும் அவர் தகுதிக்கு ஏற்றமுறையில் பதிலுக்கு மரியாதை செலுத்தினர்.

அந்த அணிவகுப்பில் பிரான்சு மன்னராகிய பிலிப்புக்கு முதலிடம் தரப்பட்டது. அவருடைய படைகள் அம்மேடையை நெருங்கியதும் அம் மன்னர் மேட்டின்மீது அங்கிருந்த கொடிக்கு வணக்கம் செலுத்தும் பொருட்டு ஏறினர். ரிச்சர்டு மன்னரும், பதவியிலும் ஆற்றலிலும் தமக்கு ஒப்பான அம்மன்னருக்கு பதில் வணக்கம் செய்யவும் அவரிடம் தமக்குள்ள மதிப்பைப் புலப்படுத்தவும், அம்மேட்டில் பாதிதூரம் வந்தார். அம்மன்னர்கள் இருவரும் நட்புரிமையோடு ஒருவருக்கொருவர் வணக்கஞ் செலுத்தியதைக் கண்ட அனைவரும் தங்கள் கைகளைத் தட்டி அவர்களைப் பாராட்டினர். எனினும் உண்மையில் அவர்கள் ஒவ்வொருவருக்கும் மற்றவர்மீது மனக்குறை இருந்தது.

அடுத்து கோயிலார் கோமான் வந்தார். அவர் படைகள் பிரான்சு நாட்டுப் படைகளைவிட நேர்த்தியான உடைகளை அணிந்திருந்தன. அப் படைத் தலைவராகிய செருக்குடைய கோமான்

தன் நிலைக்கேற்ப, ரிச்சர்டு அரசருக்கு வணக்கஞ் செய்யாது, அவரை வாழ்த்திவிட்டுச் சென்ருர். ரிச்சர்டு மன்னரும் அவருக்கு அன்பற்ற முறையிலேயே தன் வணக்கத்தைச் செலுத்தினுர்.

அதன் பின்னர் ஆஸ்திரிய மன்னராகிய லியோபோல்டு தன்படைக்கு முன்னர் தன்குதிரையூர்ந்து வந்தார். அவர்கள் மேட்டை நெருங்கும் போது ரிச்சர்டு மன்னர் தம் அடிமையை விழிப்புடன் இருக்குமாறு எச்சரித்தார். அம்மன்னர் வெறுப்புடனும், அலட்சியமாகவும் ரிச்சர்டு மன்னரை நெருங்கினுர். அவர் அருவருப்பான முறையில் தன் மரியாதையை ரிச்சர்டு மன்னருக்குச் செலுத்திவிட்டு விரைந்து சென்றுவிட்டார். ரிச்சர்டு மன்னர் பல முறை தன் கரிய நிறமுடைய அடிமையையும், அவனுடைய நாயையும் பார்த்தார் என்ருலும், அவர்கள் அசையவே இல்லை. எனவே, அவர் ஏமாற்றமுற்ருர். அவ்வடிமை தன் வாக்குறுதியைக் காப்பாற்றிக் கொள்ளும் வாய்ப்பை இழந்துவிட்டதாகவே அவர் கருதினுர்.

அடுத்து வர இருந்தவர் கான்ராடாவர். ஐரோப்பிய மன்னர்களின் படைகளைவிட, அவரது படை சிறியதாகும். அக்குறையை அவர் தனது ஆடை அலங்காரத்தாலும் மனஉறுதியுடைய செயல்களாலும் நிறைவு செய்திருந்தார். அவர் ரிச்சர்டு மன்னரால் மிகுதியாக மதிக்கப்பட்டவர். இந் நிலையை அவர் தன் தகுதியால் பெற்றவர் அல்லர். அம்மன்னரைப் புகழ்ந்து பேசியதனுலேயே அந் நிலையை அவர் அடைந்திருந்தார். எனவே கான்ராடு மன்னரைக் கண்ட உடனே

ரிச்சர்டு அரசர் ஒன்று அல்லது இரண்டு அடிகள் முன்வந்து அவருக்கு நட்பு முறையில் தன் வணக்கத்தைச் செலுத்தினர். கான்ராடு பதில் கூற முயல் கையில் நாய் சினத்துடன் குரைத்து முன்னேக்கிப் பாய்ந்தது. நுபிய அடிமை உடனே தான் பிடித்திருந்த வாரை விட்டுவிட்டான். அந்நாய் கான்ராடின் தொண்டையின்மீது பாய்ந்து அவரைக் குதிரையினின்றும் இழுத்துத் தரையில் தள்ளியது.

உடனே ரிச்சர்டு மன்னர் தன் அடிமையை நோக்கி, 'உனது நாய் சரியான ஆளையே பொறுக்கியுள்ளது. அந்நாய் அவனைக் கொல்லு முன் அதனை அப்பால் இழுத்துக் கொள்', என்றுர்.

தரையில் அப்போதும் விழுந்து கிடந்த கான்ராடு மன்னரிடமிருந்து அவ்வடிமை தன் நாயை இழுத்துக்கொண்டான். அவனுடைய ஆட்களில் சிலர் அவனை விரைந்து தூக்கிக் கோபத்துடன், 'அந்த அடிமையைக் கொல்லுங்கள். அவனுடைய நாயைத் துண்டுதுண்டாக வெட்டுங்கள்', என்று கத்தினர்.

ஆனல் ரிச்சர்டு மன்னர் அவர்கள் கோபத்துடன் கத்திய குரலுக்கு அதிகமாகத் தன் குரலை உயர்த்தி, 'எவனுவது அந்நாயைத் தொட்டால் அவன் ஒரு துரோகி யடையும் முறையில் கொல்லப்படுவான்', என்றுர்.

பின்னர் அவர் கான்ராடை நோக்கி, 'கான்ராடு மன்னரே! நில்லும். நீர் ஒரு துரோகி என்று உம்மீது குற்றஞ் சாற்றுகிறேன்', என்றுர்.

இதற்குள் பல அரசர்களும், பிரபுக்களும் மேடையருகில் வந்து கூடிவிட்டனர். கான்ராடு

தன்னைச் சரிப்படுத்திக் கொண்டு, 'இத பொருள் யாது? என்மீது சாற்றப்படும் கு யாது? இதுதான ரிச்சர்டு பேரரசர் தன்னுடை துணைவர்களை நடத்தும் முறை?' என்றுர்.

கோயிலார் கோமான், 'புனிதப் போரில் பங்கு கொண்டுள்ள அரசர்கள்மீது ரிச்சர்டு மன்னர் தம் வேட்டை நாயை ஏவும் அளவிற்கு அவர்கள் முயல்களாகவும், மான்களாகவும் மாறிவிட்டனரா?' என்றுர்.

அப்போதுதான் அவ்விடத்திற்கு வந்த பிலிப் மன்னர், இது தற்செயலாக நேர்ந்த வருந்தத்தக்க நிகழ்ச்சியாகும்', என்றுர்.

ரிச்சர்டு மன்னர் அவர்கள் கூறிய வார்த்தைகளைப் பொருட்படுத்தாது, மீண்டும் அவர் கான்ராடை நோக்கி, 'உமக்குத் தைரியமிருந்தால், கான்ராடே! நிமிர்ந்து நின்று இந்த வாயில்லாப் பிராணி உமக்கு விரோதமாகக் கொண்டு வந்த குற்றச்சாற்றிற்குப் பதில் சொல்லும்' என்றுர்.

கான்ராடு மிகவும் பதற்றத்துடன், 'நான் அக் கொடியைத் தொடவே இல்லை' என்றுர்.

'உம்முடைய வார்த்தைகளே உம்மைக் காட்டிக்கொடுத்து விட்டன. நான் கொடியைப் பற்றித்தான் குற்றஞ்சாற்றுகிறேன் என்பதை உம் குற்றமுள்ள நெஞ்சினுலன்றி நீர் வேறு எங்ஙனம் அறிந்தீர்?' என்றுர் ரிச்சர்டுமன்னர்.

கான்ராடு விரைவில் தன்னைச் சமாளித்துக் கொண்டு, 'கொடி காணுமற் போனதிலிருந்து நீர் மிக்க கோபத்துடன் இருப்பதும், இன்றைய அணி

வகுப்பு நடைபெறுவதுகூட அதையொட்டியே என்பதும் இங்குள்ள ஒவ்வொருவருக்கும் தெரிந்ததுதானே ?' என்ருர்.

இதற்குள் பீதி எங்கும் பரவியது. அது தொடர்ந்து நடைபெற்ருல், போர் வீரர்கள் தங்களுக்குள்ளேயே போரிடத் தொடங்குவர் என்று தோன்றியது. அங்கிருந்த அரசர்களில் மிகவும் அறிவுடையவரான பிலிப் மன்னர், 'அரசர்களே! பிரபுக்களே! நம்முடைய படைவீரர்களுக்கு முன்ஞல் நாம் சச்சரவிட வேண்டாம். நம்முடைய படைகளை நம் இருப்பிடத்திற்கு நடத்திச் செல்வோம். ஒரு மணி நேரத்திற்குப் பிறகு அரச ஆலோசனை மண்டபத்தில் நாம் அனைவரும் கூடலாம்' என்ருர்.

ரிச்சர்டு மன்னர் அதற்கு இணங்கியதால் ஒவ்வொரு மன்னரும் தம் படையைத் தம் இருப்பிடத்திற்கு நடத்திச் சென்ருர்.

18. குற்றச்சாட்டு

குறித்த நேரத்தில் அரசர் ஆலோசனை அவை கூடியது. இடைப்பட்ட நேரம் கான்ராடுக்குத் தன் வழக்கமான உள்ள உறுதியைப் பெற உதவியது. மேலும் அவருக்குப் பல அரசர்களின் ஆதரவு மிகுந்தது. ஆலோசனைக் கூடத்தில் அம்மன்னர்கள் கான்ராடைச் சூழ்ந்து மிக நெருக்கமாக அமர்ந்திருந்தனர்.

ரிச்சர்டு அரசர் எவரையும் பொருட்படுத்தாது தமக்குரிய தன்மையுடன் அவ்விடத்திற்கு வந்தார். மன்னர் கான்ராடைச் சூழ்ந்து அமர்ந்திருந்தவர்களை அவர் கவனித்த போதிலும் அதனுல் அவர் துணுக்குறவில்லை. வெளிப்படையாகவே அவர் கான்ராடு ஆங்கில நாட்டுக்கொடியைத் திருடியதாகவும், நாயைக் காயப்படுத்தியதாகவும் குற்றஞ் சாற்றினுர். ஆயின், கான்ராடு, தான் குற்றமற்றவர் என்று கூறியதுடன், அக்குற்றச்சாற்றுகளை மறுத்தார்.

அதற்குப் பிறகு பிரான்சு மன்னராகிய பிலிப் என்பவர் ரிச்சர்டை நோக்கி, 'இங்கிலாந்து நாட்டு மன்னரே! இது ஒரு வழக்கத்திற்கு மாருன குற்றச்சாற்ருகும். நீர் கான்ராடுமீது சாற்றும் குற்றத்தைப் பற்றி உமக்கு நேரிடையாக ஒன்றும் தெரியாது. இந்நாய் அவரிடம் நடந்து கொண்ட முறையிலிருந்துதான் அவரைக் குற்றவாளி என்று நீர் கருதுகிறீர் அல்லவா? கான்ராடு மன்னர் அவர்களே அக்குற்றச் சாற்றுகளை மறுத்

துள்ளார். ஒரு அரசரும் வீரருமாயுள்ளவரது வார்த்தைகளுக்கு ஒரு நாயின் குரைப்புக்குக் கொடுப்பதைக் காட்டிலும் அதிகமான மதிப்புத் தருதலே முறையாகும்' என்ருர்.

அதைக் கேட்ட ரிச்சர்டு அரசர், 'நீர் கூறுவதே உண்மையாகும். மனிதனுக்கு நாயைத் துணைவனுகக் கொடுத்த இறைவன் அதற்குப் பெருந்தன்மையையும் அளித்துள்ளார். எனவே அது நண்பனையும் மறக்காது; பகைவனையும் மறக்காது. மனிதனுடைய அறிவில் அதற்குப் பங்குண்டு என்ருலும், அவனது கயமைக் குணத்தில் அதற்குப் பங்கில்லை. ஒருவனைக் கொல்லவோ, பொய்ச்சான்று கூறவோ மனிதனுக்குக் கையூட்டுக் கொடுத்து அவனைக் கெடுக்கலாம். ஆயின் தன் தலைவனுக்குத் துன்பத்தைத் தரவோ, தன் பகைவனை மன்னிக்கவோ, ஏற்றமுறையில் ஒரு நாயை மாற்ற இயலாது. நீர் உம்மால் இயன்ற அளவு சிறந்த முறையில் இவ்வரசரின் உருவத்தை மாற்றி நூறு மனிதர்களிடையில் அவரை ஒளித்துவைத்தாலும் அந்த நாய் அவரைக் கண்டுபிடிப்பது உறுதி யாகும். இதில் புதுமை ஒன்றும் இல்லை. கொலை யாளிகளும், கொள்ளையரும் நாய்களினுல் கண்டு பிடிக்கப்பட்டுள்ளனரன்ருே? இது உமது நாட்டிலும் நிகழ்ந்துள்ளது. ஒரு கொலை வழக்கு ஒரு மனிதனுக்கும், நாய்க்கும் நடைபெற்ற சண்டையின் முடிவை யொட்டித் தீர்மானிக்கப்பட்டுள்ளது. நாய் அச்சண்டையில் வெற்றி பெற்றதால் அம்மனிதன் குற்றத்தை ஒப்புக்கொண்டு தண்டனையும் பெற்றுள்ளான் அன்ருே?' என்ருர்,

பிலிப் மன்னர் ரிச்சர்டை நோக்கி, 'மதிப்புக்குரிய மன்னரே! நீர் கூறுவது உண்மையே யாகும். ஆனுல் அது வெகு நாட்களுக்கு முன்பு நிகழ்ந்த நிகழ்ச்சியாகும். மேலும் அம்மனிதன் கீழ்க்குடியில் தோன்றியவனும், சாதாரண மனிதனுமாவான். உண்மையாகவே ஓர் அரசர் ஒரு நாயுடன் போர் செய்வதை நீர் விரும்ப மாட்டீர் என நம்புகிறேன்' என்ருர்.

அதற்கு ரிச்சர்டு அரசர், 'அப்படிச் செய்ய நாம் எப்போதும் விரும்பியதில்லை. ஒரு சிறந்த நாயின் உயிரைக் கான்ராடு போன்ற ஒரு ஏமாற்றுக்காரனும், துரோகியுமான கீழ்மகன் ஒருவனுடன் போர் செய்துவிட்டு ஆபத்துக்குள்ளாக்குவதை நாம் விரும்பவில்லை. எனவே என்னுடன் போர் செய்து எங்களில் யார் கூறுவதுண்மை என்பதை நிறுவுமாறு அவரை அழைக்கின்றேன்' என்ருர்.

கான்ராடு அவ்வாறு ரிச்சர்டு அரசருடன் போர் செய்ய இசையவில்லை. தான் உடல் வன்மையிலேனும், திறமையிலேனும் ரிச்சர்டு அரசருக்கு நிகரானவர் அன்று என்பது கான்ராடுக்கு நன்கு தெரியும்.

அவர்களுக்குள் ஒற்றுமையை உண்டாக்க மீண்டும் பிலிப் மன்னரே பேசுவாரானுர். அவர், 'நாய் கான்ராடு அரசருக்கு எவ்வாறு ஒப்பாகாதோ, அங்ஙனமே கான்ராடு அரசர் ரிச்சர்டு வேந்தருக்கு இணையாகார். மேலும் ரிச்சர்டு அரசர் இவ்வீரர்களின் தலைவராவார். எனவே நாம் அவர் கான்ராடுடன் தம் விருப்பப்படி போர் செய்வதை அனுமதிக்க இயலாது' என்ருர்.

'அங்ஙன்மாயின் நான் போரிடுகிறேன்' என்று ரிச்சர்டு வேந்தரின் ஒன்றுவிட்ட தம்பியாகிய சாலிஸ்பரி பிரபு கூறினார்.

'அரசர்களே, பிரபுக்களே! நான் ரிச்சர்டு அரசர் நம் தலைவராயிருப்பதால் அவருடைய சவாலை ஏற்க விரும்பவில்லை. ஆனால் அவருடைய தம்பியுடனோ அன்றி வேறு எந்த வீரனுடனோ போரிட்டு என் குற்றமற்ற தன்மையையும், என் மதிப்பையும் நிறுவ நான் முழுமனத்துடன் இசைகிறேன்' என்றார் கான்ராடு.

இந்நிலையில் டயர் மடாலயத் தலைவர் குறுக்கிட்டு, 'கான்ராடு மன்னர் ஒரு அறிஞரைப் போலவும், பெருந்தன்மையுடையவர் போலவும் பேசியுள்ளார். எனவே இப்பூசல் யாருக்கும் அவமதிப்பில்லாமல் இத்துடன் நிற்கட்டும்' என்றார்.

'ரிச்சர்டு அரசர் தன் குற்றச்சாற்றைத் திரும்பப் பெற்றுக்கொள்வதாயின் இத்துடன் இப்பூசல் நிற்கலாம்' என்றார் பிலிப் வேந்தர்.

'பிலிப் வேந்தே! நான் என்னுடைய வார்த்தைகளைத் திரும்பப் பெறப் போவதில்லை. கான்ராடு மன்னர் இரவில் ஆங்கில நாட்டுக் கொடியைக் களவு செய்துள்ளார் என்பதில் எமக்கு இன்னும் முழு நம்பிக்கையுளது. எமது வார்த்தைகளின் உண்மையை நிறுவ நான் ஒரு வீரனைத் தேர்ந்தெடுக்கிறேன். அதற்குரிய நாளை நாம் இப்போதே தீர்மானிக்கலாம்' என்றார் ரிச்சர்டு அரசர்.

'இன்றைய ஐந்தாவது நாளே அதற்குரிய நாளாக நான் தீர்மானிக்கிறேன். ஆயின் இச்சண்டை நடைபெறுவதற்கான பொதுவிடம் எது என்பதை என்னால் கூற இயலாது. அவ்விடம் நமது முகாமிற்கு அருகில் இருத்தலாகாது. ஏனெனில் அது நம் படைகள் தமக்குள் போரிட ஒரு வாய்ப்பை யளிக்கும்', என்றார் பிலிப் மன்னர்.

அதற்கு ரிச்சர்டு வேந்தர், 'நாம் இதைப்பற்றி சலாடின் மன்னரைக் கேட்கலாம். அவர் நமது பகைவரும், வேறு மதத்தைச் சேர்ந்தவர் என்றாலும், மிகவும் பெருந்தன்மையுடையவர். அவர் நமக்கு உறுதியாக உதவுவார்', என்றார்.

'அதுவே சரி. நாம் ஒரு தூதுவரை அவரிடம் அனுப்புவோம். இதற்கிடையில் இக்கூட்டம் கலையட்டும். இங்கு நடைபெற்றவற்றை நீங்கள் யாரும் உங்கள் முகாமில் பேச வேண்டாம் என்று உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். இவ்வழக்கின் முடிவை நாம் இறைவனிடம் ஒப்படைத்துள்ளோம். அவர் உண்மைக்கு வெற்றி யளிப்பாராக?' என்றார் பிலிப் மன்னர்.

19. எடித் சீமாட்டி

ரிச்சர்டு மன்னர் அந்த ஆலோசனைக் கூடத்தினின்றும் திரும்பியதும், அவர் கரிய நிறமுள்ள அடிமையைத் தன்பால் அழைத்து வருமாறு கட்டளையிட்டார். அவனும் வந்து அவ்வரசரைப் பணிந்து அவரது கட்டளையை எதிர்பார்த்து நின்றிருந்தான். அரேபிய வெறியன் அரசரைத் தாக்க முற்பட்ட நிகழ்ச்சியிலிருந்து ரிச்சர்டு தன்னைப் பார்த்தவிதத்திலிருந்து தன் வேடத்தை அவர் அறிந்திருப்பாரோ என்று அவன் கவலை கொண்டிருந்தான். எனவே அவன் அப்போது தன் தலையைத் தாழ்த்திக்கொண்டும், நிலத்தை நோக்கிக் கொண்டும் ஒரு பிறவி அடிமையைப் போலவே தோன்றினான்.

'நீ மிக நன்றாக உன் வேலையைச் செய்துள்ளாய். ஆயினும் அது மட்டும் சாலாது. கான்ராடு தண்டிக்கப்பட வேண்டும். அப்பணியை நானே செய்ய விரும்பியிருப்பேன். ஆயின் நான் அதனைச் செய்ய இயலாது போலத் தோன்றுகிறது. எனவே, என்னுடைய கடிதத்தை எடுத்துச் சென்று சலாடின் மன்னரை இப்போர் நிகழ்தற்கேற்ற பொது இடமொன்றைத் தேர்ந்தெடுக்குமாறு வேண்டிக் கொள். அந்தப் போரைக் காண நான் அவரையும் அழைத்துள்ளேன். நீ யூகிக்கக் கூடுமாயின் அம்மன்னரின் முகாமிலேயே கான்ராடுடன் போர் செய்யக்கூடிய ஒரு வீரனையும்

தேர்ந்தெடுக்கலாம்', என்று ரிச்சர்டு மன்னர் கூறினார்.

அவ்வடிமையால் அவரது வார்த்தைகளை நம்பக்கூடவில்லை. அவன் தனது கண்களை உயர்த்தி முதலில் அப்பேரரசரை ஆவலுடன் நோக்கினான். பின்னர் நன்றியறிதலுடன் வானத்தைத் தன் கண்களினின்றும் நீர்ப்பெருக நோக்கினான்.

'அது சரி. நீ எனக்கு இந்த வேலையில் உதவிபுரிவாய் என்று நம்புகிறேன்', என்று கூறிப் பின்னர், திடீரென்று, 'நீ இன்னும் எடித் சீமாட்டியைக் காணவில்லையன்றோ?' என்றார் அவ்வரசர்.

மீண்டும் அவ்வடிமை தன் கண்களை உயர்த்தி அவ்வரசரை நோக்கினான். அவன் உதடுகள் பேச விழைவன போன்று அசைந்தன. ஆனால் அவன் தன் வார்த்தைகளை அடக்கிக்கொண்டு தன் தலையை மட்டும் அசைத்தான்.

'ஹா! நமது உறவினளின் பெயர் ஊமையையும் பேசச் செய்யும் ஆற்றல் வாய்ந்தது. நான் பரிசோதனை செய்ய விரும்புகிறேன். நீ இப்போது அவளைக் கண்டு, சலாடின் அவளுக்கு அனுப்பியுள்ள கடிதத்தை அவளிடம் கொடுக்கலாம்', என்றார் ரிச்சர்டு மன்னர்.

மீண்டும் மகிழ்ச்சியைப்புலப்படுத்தும் பார்வை அவ்வடிமையிடம் காணப்பட்டது. ஆயின் அவ்வரசர் அவன் தோள்மீது • தமது வலிய கரத்தை வைத்துக் கடுமையாக, 'நீ நமது உறவினளின் ஆற்றலால் மீண்டும் பேசும் ஆற்றலை

அடையின் ஒரு வார்த்தையும் நீ அவளிடம் பேச லாகாது என்று உன்னை எச்சரிக்கிறேன். அதற்கு மாறாகப் பேசினால் உனது நாக்கு வாயிலிருந்து பிடுங்கி எறியப்படும்' என்றார்.

அந்த நுபிய அடிமை மீண்டும் அவரை வணங்கித் தன்னுடைய கையைத் தன் உதடு களின்மீது வைத்து, அவன் ஒரு வார்த்தையும் எடித் சீமாட்டியிடம் பேசமாட்டான் என்பதைச் சைகையின் வாயிலாக அறிவித்தான். பின்னர் ரிச்சர்டு அரசர் அவனை எடித் சீமாட்டியிடம் அழைத்துச் சென்று அரைமணி நேரத்தில் மீண்டும் அங்கு அழைத்து வருமாறு நெவிலிப் பிரபுவுக்கு ஆணையிட்டார்.

நுபிய அடிமை நெவிலிப் பிரபுவைப் பின் தொடர்ந்து எடித் சீமாட்டியின் கூடாரத்திற்குச் சென்றான். அவன் மனது மிகவும் குழம்பியிருந் தது. ரிச்சர்டு மன்னர் அவன் யார் என்பதைக் கண்டு கொண்டார் என்பதற்கு ஐயமில்லை. எனினும் அவர் அவன்மீது கோபப்படாமலிருந் தது அவனுக்கு வியப்பை விளைவித்தது. மாறாக அவன் இழந்துபோன மதிப்பை, வஞ்சகனை கான் ராடுடன் போர்செய்து பெறுகின்ற வாய்ப்பையும் அவனுக்கு அளித்தார். அதற்குமேல் அவர் அவனுக்கு எடித் சீமாட்டியைச் சந்திக்கும் ஒரு வாய்ப்பையும் அளிக்கிறார். எனினும் அவளுடன் பேசலாகாது என்று தடையும் விதிக்கிறார். அர சரது இத்தகைய செயல்களின் பொருளை அவனால் அறிய இயலவில்லை.

சில விநாடிகளிலேயே நெவிலிப் பிரபு அவனை எடித்தின் கூடாரத்தில் அவளுடன் தனித்து விடுத்து வெளியே சென்றார். அவ்வீரன் அவள் முன் தன் கைகளை மார்பின்மீது கட்டிக்கொண்டு குனிந்த தலையுடன் முழங்காற்படியிட்டு அமர்ந் தான். எடித் சீமாட்டி சில அடி முன்வந்து அவனுடன் பேசுவதற்கு முன்பு அவனை உற்று நோக்கினார். பின்னர் அவள் ஆழ்ந்த வருத் தத்தைப் புலப்படுத்தும் வார்த்தைகளை உதிர்த் தாள்.

'சிறுத்தை வீரனும் ஸ்காத்லாந்து தேசத்தைச் சேர்ந்த வீரனுமாகிய நீயா இங்ஙனம் ஒரு அடிமைக் கோலத்திலுள்ளாய்?' என்றாள் அச் சீமாட்டி.

அவள் வார்த்தைகள் மிருதுவாகவும் இனிமை யாகவும் அவன் காதுகளில் ஒலித்தன. விடை கூறும் பொருட்டு வார்த்தைகள் அவன் உதடு களுக்கு விரைந்தன. எனினும் அவன் அரச ருக்கு அளித்த தன்னுடைய வாக்குறுதிகளை நினைவிற்கொண்டு ஒரு ஆழ்ந்த பெருமூச்சை வெளிப்படுத்தினான்.

'நான் உன்னைத் தூய ஜியார்ஜ் மேட்டில் பார்த்தபோதே நீயார் என்பதை யூகித்தேன். என் யூகம் சரியானதே. உனது நாயையும், நான் அப்போதே கண்டு அறிந்துகொண்டேன். உன் னுடைய எந்த வேடம் உன்னை உன் காதலி யிடமிருந்து மறைக்க இயலும்? எந்தவித அச்சமும் இன்றி உன் காதலியாகிய எடித்திடம் பேசுக', என்றாள் அச்சீமாட்டி.

அவ்வீரன் ரிச்சர்டு அரசருக்கு அளித்த வாக்குறுதிக்காகத் தன்னையே சபித்துக் கொண்டான். அந்நிலையில் அவன் ஒரு பெருமூச்சு விடுதலையும், தன் கைகளைத் தன் உதட்டின்மீது வைத்தலையும் தவிர அவனால் வேறு ஒன்றும் செய்ய இயலவில்லை. எனவே அவள் துன்புற்றுப் பின்னால் சென்றாள். அவனுடைய பிடிவாதமான மௌனத்தால் அவள் கலக்கமுற்றாள். திடீரென்று அக்கொடிய சாரசின்கள் அவனது நாக்கைத் துண்டித்திருக்கலாம் என்ற எண்ணம் அவளுக்குத் தோன்றியது. ஆனால் அவள் அதைக் குறித்து அவனை வினவியபோது அவன் தன் தலையை அசைத்தான். பின்னர் அவன் சலாடின் மன்னர் அவளுக்கு எழுதிய கடிதத்தை அவளிடம் நீட்டினான். இதற்குள் எடித் மிக்க சினமுற்றிருந்தமையால் அவள் அக்கடிதத்தை வாங்காது அலட்சியமாக இருந்தாள்.

'வெளியேறு. ஒரு மொழியும் பேச விரும்பாத ஒருவனிடம் நான் அதிக நேரம் பேசிவிட்டேன். நான் என் மதிப்பை மறந்து உன்னிடம் பேசியதால் என் மதிப்பை மிகவும் குறைத்துக்கொண்டேன்' என்று எடித் சினத்துடன் கூறினாள்.

அவ்வீரன் அவள் கூறியபடி வெளியேற முயலாமல் வருத்தத்துடன் தன் கைகளைப் பிசைந்துகொண்டு நின்றிருந்தான். எனவே எடித் அவனை நோக்கி, 'வெளியே போ. ஏன் இங்கு நின்றுகொண்டிருக்கிறாய்? உண்மையிலேயே நீ ஒரு ஊமை அடிமையாக மாறியிருக்க

வேண்டும். இல்லையெனில் இதுவரை நீ நன்றியுரை ஒன்றேனும் கூறியிருப்பாய்' என்றாள்.

அக்கடிதத்தை நோக்குவதன் மூலம் அவ்வீரன் விடை கூறினான். அவள் அவன் கைகளிலிருந்து அக்கடிதத்தைப் பறித்தவளாய் அது சலாடின் மன்னரால் தனக்கு எழுதப் பெற்றிருந்ததைக் கண்டு வியப்புற்றாள். அதைப் படித்து முடித்ததும் அவள் சினத்தால் நகைத்தாள்.

ஒரு தைரிய மிக்க வீரன் சாரசினது பாதத்தை வணங்கும் அடிமையாகமாறிகிறுத்தவப்பெண்ணை மணக்க விரும்பும் ஒரு சாரசின் கடிதத்தைக் கொண்டு வருவது வியக்கத் தக்கதே. எனினும் இதனை விரும்பும் அடிமையிடம் அதைப் பற்றிப் பேசிப் பயன் யாது? என்று கூறிக்கொண்டே அக்கடிதத்தைத் தரையில் வீசி அதன்மீது தன் காலை வைத்து மிதித்தாள். 'உன் தலைவரிடம் சென்று நான் செய்த செயல்களைக் கூறுக. நான் அவரது கடிதத்தை, தன்னால் காதலிக்கப்பட்ட கிறுத்தவ வீரன் ஒருவன் செய்த துரோகத்திற்காக அவனை எந்த அளவிற்கு வெறுக்கிறாளோ, அந்த அளவிற்கு வெறுக்கிறாள் என்று கூறுக' என்றாள் அம்மங்கை நல்லாள்.

இவற்றைக் கூறியதும் எடித் சீமாட்டி அவ்விடத்தினின்றும் விரைந்து வெளியேறினாள். அவ்வீரன் மிகுந்த துயரமடைந்தான்.

அன்றைய மாலையில் ரிச்சர்டு மன்னர் எடித் சீமாட்டியைத் தன்னிடம் வரவழைத்தார். சலாடினை அவள் மணக்க இசையுமாறு அவரால்

செய்யக்கூடும் என்றே அவர் நம்பியிருந்தார். அப்புனிதப் போர் தோல்வியுறும் நிலையிலிருந்த அபாயத்தை அவர் அவளுக்கு விளக்கிக் கூறினார். அரசர்கள் அவரைக் கைவிட்டுவிட்ட செய்தியினையும் அவளுக்கு விளக்கினார். அந்நிலையில் அவர் பெரிய வெற்றியை யடைதல் என்பது இயலாத தொன்று. எனவே சலாடின் மன்னருடன் உடன்படிக்கை செய்து கொள்வதன் மூலமாகவேனும் அவர் அப்புனிதமான நகருக்கு ஒரு நன்மையைச் செய்யவேண்டிய நிலையிலிருந்தார். ஆயின் அது முற்றிலும் அவள் சலாடின் மன்னரை விருப்பத்துடன் மணப்பதைப் பொறுத்திருந்தது. அந்த வீரராகிய சலாடின் மன்னரது மனைவியாவது பெருமைக்குரிய செயலே யாகும். அந்த மணத்தால் ஏற்படக்கூடிய பிற நன்மைகளும் இருந்தன. எங்காடி மடத்துத் துறவியார் கோள்களின் நிலையை ஆராய்ந்து கூறியவண்ணம் அவள் திருமணத்தின் வாயிலாகவே அவர், அவருடைய வன்மை மிக்க பகைவருடன் நட்புக் கொள்ள இயலும் என்பதையும் எடுத்தியம்பினார். அத்துறவியாரின் கூற்றுப்படி அவளுடைய கணவர் ஒரு கிறுத்தவராக இருப்பார் என்பதால் சலாடின் மன்னர் தன் ஆட்களுடன் கிறுத்தவராக மாறுவார் என்பதே அதன் பொருளாகும். அத்தகைய ஒரு பலனை யடைய எத்தகைய தியாகமும் மேற்கொள்ளுதற்குரியதாகும் என்றார் அம்மன்னர். •

ரிச்சர்டு மன்னர் மேற்கூறிய காரணங்களைக் கூறி எடித் சீமாட்டிக்கு சலாடினை மணக்க விருப்பந்தானா ?' என்று கேட்டார். அதற்கு அவள் தான் ஏற்கனவே தீர்மானித்த முடிவை மாற்றுவதற்கில்லை யென்று கூறினாள். எனவே எடித் மறுத்துவிட்ட செய்தியை ரிச்சர்டு அரசர் வருத்தத்துடன் சலாடின் மன்னருக்கு எழுதி நுபிய அடிமை மூலம் தெரிவித்துவிட்டார்.

20. ரிச்சர்டும் சலாடினும்

நுபிய அடிமை ரிச்சர்டு அரசருடைய இருப்பிடத்தைவிட்டுச் சென்ற சில மணி நேரத்திற்குப் பிறகு, ரிச்சர்டு அரசர் பிரெஞ்சு அரசர் பிலிப்பை ஒரு கூட்டத்திற்கு அழைத்தார். பிரெஞ்சு அரசர் அச்சந்திப்பின்போது, தன் நாட்டில் அப்போது இருந்த நிலைமையின் காரணமாகவேதான், தான் தன் நாட்டிற்குத் திரும்பிவிட முடிவு செய்திருப்பதாக ரிச்சர்டு அரசருக்குத் தெரிவித்தார். அத்துடன் ரிச்சர்டு அரசரிடம் தனக்குள்ள பெருமதிப்பும் அன்பும் என்றும் மாறுதென்றும் கூறினார். இதுபோல் ஆஸ்திரிய மன்னரும் தன் நாட்டுக்குத் திரும்பிச் செல்லும் செய்தி ரிச்சர்டு அரசருக்குத் தெரிந்தபோதும், அவர் வியப்புறவில்லை.

இதுசமயம் சலாடின் மன்னரிடமிருந்து ஒரு தூதுவன் வந்து போரின் ஏற்பாடுகளைக் கவனிக்க அவர் இசைந்துள்ளதாகத் தெரிவித்தான்.

அதன்படி, ரிச்சர்டு அரசர் சாலிஸ்பரி பிரபுவுடனும், மற்றும் சில துணைவர்களுடனும், கான்ராடு ஆஸ்திரிய மன்னருடனும், கோயிலார் கோமானுடனும் போருக்குக் குறிப்பிட்ட இடமாகிய, 'டைமண்டு' என்னும், 'பாலைவனச் சோலை'யை அடைந்தார்.

ரிச்சர்டு அரசர் அவ்விடத்தை அடையும் பொழுது, அவர் இராணுவ இசையுடன் வரவேற்கப்பட்டார். சலாடின் மன்னரும் வெண்மை நிறமுடைய குதிரையின்மீது வந்து அவரை வரவேற்றார்.

அவ்விரு அரசர்களும் அப்போதுதான் முதன் முறையாகச் சந்தித்தனரெனினும், அவர்கள் ஒருவரையொருவர் உடனே அறிந்துகொண்டனர். ரிச்சர்டு அரசர் சலாடின் மன்னர்தான் மருத்துவராக வந்து தன்னைக் காப்பாற்றியவர் என்பதையும், குல்லாய் மாற்றத்தினால் கண்டு வியப்புற்றார். அவர்கள் இருவரும் தங்கள் குதிரைகளினின்றும் இறங்கி ஒருவரையொருவர் அன்புடன் தழுவிக் கொண்டனர்.

சலாடின் மன்னர் ரிச்சர்டு அரசரை அரச விருந்தினர் தங்கும் கூடாரத்துக்கு அழைத்துச் சென்று அளவளாவிக்கொண்டிருந்தார்.

இப்பேச்சுக்கு இடையில் ரிச்சர்டு அரசர் சலாடின் மன்னரைப் பார்த்து, 'சிறுத்தை வீரனின் உயிரைக் காத்து மீண்டும் மாறுவேடத்தில் என்னிடம் அனுப்பியவர் நீர்தாமோ ?' என்று வினவினார்.

'ஆம், அரசரே! அவ்வீரன் தன் பெருமையை மீண்டும் பெற ஒரு வாய்ப்பு அளிக்கப்பட்டாலன்றி, அவன் அவமானத்தால் இறந்து போவான் என்பதால், நான் அங்ஙனம் செய்தேன்,' என்றார் சலாடின் மன்னர்.

'அவ்வீரன் தன்னைப்பற்றி உம்மிடம் ஏதேனும் கூறினானா?' என்று கேட்டார் ரிச்சர்டு அரசர்.

'பல வார்த்தைகளால் கூறவில்லை. தனக்கு எட்டாத நங்கையாகிய எடித் சீமாட்டியிடம் அவன் ஆராக் காதல் கொண்டிருக்கிறான் என்பதை என்னால் யூகிக்க முடிந்தது. மேலும் அவன் ஒரு கிறுத்தவன். எனவே எடித் சீமாட்டி அவனை விரும்புவது தக்கதே யாகும்', என்றார் சலாடின் மன்னர்.

ரிச்சர்டு அரசர், 'அவனே நாளை கான்ராடுடன் போர் செய்யும் வீரன் என்று நம்புகிறேன்', என்றார்.

'அவன் அதற்குத் தயாராகவும், வெற்றியில் நம்பிக்கையுடையவனாகவும் உள்ளான். அவனுக்குப் போர்செய்யத் தேவையான படையும், ஒரு குதிரையும் அளித்துள்ளேன்', என்றார் சலாடின் மன்னர்.

பின்னர் சலாடின் மன்னர் கான்ராடை வரவேற்கச் சென்றார்.

21. போர்

போரிட வேண்டிய நாள் வந்தது. அரசர்களும், அவர்களது ஆட்களும் அவரவர்களுக்குரிய இடங்களில் அமர்ந்தனர்.

தங்களுக்காக அமைக்கப்பட்டிருந்த இடங்களில் பெரெங்கேரியா அரசியாரும், அவரது தோழிகளும் அமர்ந்திருந்தனர். கென்னத் வீரன் மிகுந்த உற்சாகத்துடன் காணப்பட்டான். அவன் வெற்றி தனக்கே உண்டாகும் என்ற நம்பிக்கையுடன் இருந்தான். கான்ராடோ அதற்கு மாருக நம்பிக்கையற்று விளங்கினுன். தான் எதிர்த்துப் போரிட வேண்டிய வீரன் ஸ்காத்லாந்து நாட்டினனுன கென்னத்தே என்றறிந்ததும் தன்னம்பிக்கையைக் கான்ராடு முற்றிலும் இழந்து போனுன்.

இறுதியாக இருவீரர்களும் போர்க்களத்தை வந்தடைந்தனர். தங்கள் அணிகளை நீக்கி, வந்திருந்த மக்கள் தங்களைக் காணுமாறு அவ்விடத்தை அவர்கள் மூன்றுமுறை சுற்றிவந்தனர். அவ்விரு வீரர்களின் தோற்றமும், அளவும் ஒத்திருந்தன; எனினும் கென்னத்தின் முகத்தில் வெற்றிக்கான புன்னகை தவழ்ந்தது. கான்ராடின் முகம் சோர்ந்து காணப்பட்டது.

அரசியார் இருந்த இடத்திற்குச் சற்றுக் கீழ்ப்புறமாக ஒரு மேடை அமைக்கப் பட்டிருந்தது. எங்காடி மடத்துத் துறவியார் அதன் பக்கத்தில் நின்றிருந்தார். அவ்விரு வீரர்களும் அம்மேடைக்கு வரவழைக்கப்பட்டனர். அவர்கள் இருவரும் அங்குத் தங்கள் குதிரைகளினின்றும் இறங்கி இறைவனைத் தங்களுக்கு வெற்றி அருளுமாறு வேண்டிக் கொண்டனர்.

இரண்டு வீரர்களும் அக்களத்தின் இருமுனைகளில் தங்கள் குதிரைகளின்மீது எதிர் எதிராக நின்றனர். பின்னர் அப்போர் எக்காரணத்தால் நிகழ்கிறது என்பதையும், குற்றம் சாற்றியவர் யார், குற்றம் சாற்றப்பெற்றவர் யார் என்பதையும் எல்லோருக்கும் அதிகாரிகள் விளக்கிக் கூறினர்.

மூன்று நிமிடங்களுக்குப் பிறகு சலாடின் மன்னர் போரைத் துவக்குவதற்கான அடையாளத்தைச் செய்தார். நூறு இசைக்கருவிகள் ஒரே காலத்தில் முழங்கின. வீரர்கள் குதிரைகளின் விலாக்களில் உதைத்து அவற்றை மிக்க வேகமாக ஓடச் செய்தனர். சில விஞடி நேரத்திற்குள் வீரர்கள் இடி போன்று களத்தின் நடுவிடத்தில் சந்தித்தனர்; போர் முடிந்தது; வெற்றியும் உறுதிப்பட்டுவிட்டது. கென்னத்தின் வேல் கான்ராடின் கவசத்தைப் பிளந்து சென்று அவனுடைய இதயத்தில் ஆழப்புதைந்தது. எனவே கான்ராடு குதிரையினின்றும் கீழே விழுந்தான்.

கென்னத் வீரன் தன் வாளை உருவிக்கொண்டு தன் பகைவனை நெருங்கி அப்போதேனும் அவனுடைய குற்றத்தை ஒப்புக்கொள்ளுமாறு கூறினுன். வானத்தை வெறித்து நோக்கியவனுய் கான்ராடு, ‘இன்னும் நான் என்ன கூறுவது? கடவுள் நீதியான முறையில் தீர்ப்பளித்துள்ளார். நானே

குற்றவாளி. எனினும் என்னைவிடக் கொடிய துரோகிகளும் நம் படையில் உள்ளனர். என் ஆன்ம சாந்திக்காக ஒரு பாதிரியாரைத் தருவிக்க' என்முன்.

பின்னர் ஆங்கில நாட்டு வீரனின் வெற்றிக் கறிகுறியாகப் பலவகை முரசுகள் முழங்கின. ரிச்சர்டு அரசர் கென்னத்தின் வீரத்தினைப் பாராட்டி அவனைத் தன் இருப்பிடத்திற்கு அழைத்துச் சென்முர். கென்னத் பெருமிதத்துடன் அரசியார் முன்பு முழந்தாள்படியிட்டு அமர்ந் தான். எனினும் அவ்வீரன் அவ்வரசியாரின் வலது புறத்தில் அமர்ந்திருந்த எடித் கோமாட் டிக்குத் தன் வணக்கத்தினுல் பாதிக்குமேல் மனத் திற்குள்ளாகவே தெரிவித்தான்.

கென்னத்தின் தலைக்கவசம் நீக்கப்பட்டதும் கென்னத்தின் முகம் பொலிவுடன் விளங்கியது. பின்னர் ரிச்சர்டு அரசர் அங்கிருந்தோரை நோக்கி, 'பிரபுக்களே! சீமாட்டிகளே! இவ்வீரன் பிறப்பாலும், செல்வத்தாலும் உயர்குடியில் தோன் றியவன். இவ்வீரன் ஸ்காத்லாந்து இளவரசன் டேவிட் என்பவனுவான்' என்முர்.

அதைக் கேட்ட யாவரும் வியப்பிலாழ்ந்தனர்.

அரசியார் அவ்வரசரை நோக்கி, 'இந்த இரகசியத்தை நீவிர் எங்ஙனங் கண்டு பிடித்தீர்?' என்று வினவினுர்.

'இதைப் பற்றிய முதல் குறிப்பு இங்கிலாந்தி லிருந்து எனக்கு வந்த கடிதங்களிலிருந்து கிடைத் தது. கென்னத் வீரனைப் பின்பற்றி வந்த வீரர் களில் இறந்தவர் போக எஞ்சியிருந்த வீரன்

ஒருவனை, 'ஆஸ்கலான்' என்னுமிடத்தில் சந்தித்த போது தெரியவந்தது என்று தாமஸ் தன்னிடம் கூறினுர்,' என்று ரிச்சர்டு அரசர் சொன்னுர்.

பின்னர் மலர்ந்த முகத்துடன் ரிச்சர்டு அரசர் எடித் சீமாட்டியின் கரத்தையும், கென்னத்தின் கரத்தையும் தன் கரங்களில் பற்றி அவற்றை ஒன்று சேர்த்து அத்தம்பதிகளை உளமார வாழ்த் தினுர்.

அடுத்த நாளே ரிச்சர்டு அரசர் தம் முகாமை அடைந்தார். அதன் பிறகு எடித் கோமாட்டியை ஸ்காத்லாந்து இளவரசர் சில நாட்களுக்குள் முறைப்படி மணந்து கொண்டார். அவர்கள் திருமணத்தின்போது சலாடின் மன்னர் தன் னுடைய புகழ்பெற்ற அதிசய மருந்தை அவர் களுக்குத் தம்முடைய பரிசுப் பொருளாக வழங்கி யருளினுர்.

வினுக்கள்

1. சிறுத்தை வீரனுக்கு அப்பெயர் வரக்காரணம் யாது? அவனுடைய உடை, போர்க் கருவிகள் முதலியவற்றைக் குறித்து நீ அறிந்தன யாவை?
2. சிறுத்தை வீரனுக்கும், அரேபிய அதிகாரிக்கும் நடந்த போரினைக் குறித்து விளக்கி வரைக.
3. சிறுத்தை வீரன் எங்காடி மடத்திற்குச் சென்றதற் கான காரணத்தையும், அங்கு அவன் கண்ட காட்சி களையும் விளக்கி வரைக.
4. அரேபிய மருத்துவரின் அற்புத மீருந்தைக் குறித் துப் பேரரசர் ரிச்சர்டு அறிந்தது எங்ஙனம்?

5. 'சலாடின் மன்னரிடம் ரிச்சர்டு வேந்தர் பெரு மதிப்புடையவர்' என்னுங் கூற்றைச் சான்றுடன் நிறுவுக.

6. ரிச்சர்டு அரசரின் குணநலன்களைக் குறித்து ஒரு கட்டுரை வரைக.

7. சலாடின் வேந்தர் பெருவீரரும், வீரரைப் போற்றும் இயல்பினரும் ஆவர் என்பதைச் சான்று காட்டி விளக்குக.

8. ரிச்சர்டு அரசர் நாவன்மையும், போராற்றலும் வாய்ந்தவர் என்பதை எந்நிகழ்ச்சிகளால் அறியலாம்?

9. புனிதப்போர் தோல்வியடைய கான்ராடு செய்த சதிச் செயல்கள் யாவை?

10. கான்ராடின் குணநலன், வீரம் முதலியவற்றையும், அவர் சிறுத்தை வீரனுடன் போர்செய்ய நேர்ந்த நிலையையும் குறித்து எழுதுக.

11. சிறுத்தை வீரன் ரிச்சர்டு மன்னரைக் காக்க மேற்கொண்ட முயற்சிகளைத் தொகுத்து வரைக.

12. சிறுத்தை வீரன் ஏன் மரணதண்டனை விதிக்கப் பட்டான்? யாரால் பின்னர் எங்ஙனம் காக்கப் பட்டான்?